www.padippkam.com

# கோடாங்கி

தலித் இலக்கியக் காலாண்டிதழ் ● ஏப்ரல் - சூன்'95



படிப்பகம்

www.padippkam.com

படிப்பகம்

www.padippkam.com

# கோடாங்கி

434, கட்டபொம்மன் தெரு,
பெரம்பூர், சென்னை - 600 039

ஆசிரியர் குழு

கருத்தம்மா
சந்ரு
ப்ரதிபா ஜெயச்சந்திரன்

ஓவியங்கள்

சந்ரு

அச்சிட்டு வெளியிட உதவியோர்: பிரிப்பேர், சென்னை
ஒளி அச்சுக் கோர்வை: தலித் விடுதலைக் கல்வி
அறக்கட்டளை

நன்கொடை: ரூ. 25.00

படிப்பகம்

www.padippkam.com



அன்புடையீர், வணக்கம்.

இரண்டாவது இதழ் அச்சாகும் இவ்வேளையில் முதல் இதழ் பெற்ற பாராட்டும், ஆதரவும், விமர்சனமும் இரண்டாவது இதழுக்கு ஊக்கமுடன் உழைக்கக் காரணமாயிருந்தது என்பதை நன்றியுடன் நினைவு கூர்கிறோம்.

மொழி, அழகியல் என்ற வரையறைகளின் மூலம் தலித் இலக்கியத்தில் அசல் தலித்துக்கள் அல்லது 'சூப்பர்' தலித்துக்கள் என்ற முத்திரை குத்திக்கொண்டு தலித் இலக்கியத் தளத்தைக் குறுக்கும் செயல்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றைக் குறித்த நிலைப்பாடுகளை கோடாங்கி இந்த இதழில் முன்வைக்கிறது. மனம் திறந்த விமர்சனம் வரவேற்புக்குரியது.

வரவிருக்கும் இதழ்களில் பல்வேறு தலித் இயக்கங்களின் நிலைப்பாடு, செயற்பாடு பற்றிய கட்டுரை இடம் பெறும். களத்தில் உள்ள இயக்கங்கள் கோடாங்கியை அதன் புதிய முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippkam.com

# விமர்சனங்களுக்குப் பதிலாக . . .

**"தலித்கள்தான் தலித் இலக்கியத்தைப் படைக்க முடியும், பெண்கள்தான் அவர்களுக்கான இலக்கியத்தைப் படைக்க முடியும். இப்படியே போனால் குழந்தைகள் இலக்கியத்தைக்கூட குழந்தைகள்தான் படைக்க வேண்டும் போலிருக்கிறது . . . (சிரிப்பு)"**

மேற்கண்ட வாசகத்தைக் கூர்ந்து கவனித்தால் குழந்தைகள் இலக்கியத்தை குழந்தைகள் படைக்க முடியாது, என்பதை அடிப்படையாக வைத்து கட்டி எழுப்பப்பட்ட வாதம் இது என்பது தெரியும். அதேபோல் பெண்களால், தலித்களால் எழுதமுடியாது என்பது மறைபொருளாகத் தொக்கி நிற்பதும் புரியும். முற்போக்கு அணியினரது இவ்வாதத்தில் தாங்கள்தான் தலித்களுக்கும், பெண்களுக்கும் தலைமையேற்றுப் போராடி உய்விக்க முடியும் என்ற "கனம்" இருப்பதும் தெரிகிறது.

தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதிகளைப் பற்றி பிற உயர்சாதிக்காரர்களே எழுதவேண்டும். பெண்களைப் பற்றி ஆண்கள்தான் எழுத வேண்டும். கறுப்பர் இலக்கியத்தை வெள்ளையரும், தொழிலாளி இலக்கியத்தை முதலாளிமாரும் படைக்க வேண்டும் என்பது இவ்வாதத்தின் எதிர்மறைப் பண்பாயிருக்கின்றன. ஏற்றுக்கொள்ளலாமா? இவ்வாறு இவர்களின் வாதத்திற்கு இவர்கள் போக்கில் பதில் சொல்ல முடியும். ஆனால் இங்கே தேவைப்படுவது தலித் மக்களே தலித் இலக்கியம் படைக்கமுடியும் என்ற புரிதல்.

இலக்கியத்தையும் வாழ்க்கையையும் வெவ்வேறாகப் பார்க்கும் பார்வை காலங்காலமாய் இருந்து வந்திருக்கிறது. ஒரு வாகன ஓட்டியின் வாழ்க்கையை இரண்டுநாள் அந்த வாகனத்தில் சவாரி செய்து தெரிந்து கொண்டேன் என்பது எந்த அளவிற்கு அர்த்தமுள்ளதாக இருக்கும்? மலம் நாற்றமுள்ளது. அதை அள்ளுவது சிரமமானது என்பதை நாங்கள் புரிந்து வைத்திருக்கிறோம் என்று போகிற போக்கில் சொல்வது ஒரு இலக்கியவாதிக்கு சுலபமானதாயிருக்கிறது. உடலுழைப்பின்மை என்ற குற்றவுணர்வினால் தன்னையும் பிறரையும் ஏமாற்றிக் கொள்ளும் வகையில் மூளை உழைப்பும் உழைப்புத்தான் என்று நிறுவுவதிலும் இலக்கியவாதிகள் தேர்ந்தவர்கள். தங்களை எப்போதும் முன்னிறுத்துவதன் முகமாகவே தலித் இலக்கியத்தை எவரும் படைக்கலாம் என்ற நிலை நேர்கிறது.

இது தொடர்பாக சிலர் குருட்டுத்தனமாகக் கேள்வியைப் பாய்ச்சக்கூடும்.

*ரிக்ஷா இழுக்கவில்லை, மலம் அள்ளவில்லை, வெள்ளைச் சட்டைதான் அணிகிறோம். தலித் இலக்கியவாதிகள் மட்டும் என்ன மலம் அள்ளுகிறார்களா, ரிக்ஷா இழுக்கிறார்களா, வெள்ளைச் சட்டைப் போடவில்லையா?*

ரிக்ஷா ஓட்டியை, மலம் அள்ளுபவரைத் தனது பெற்றோராக, உற்றார் உறவினராக, மூதாதையராகக் கொண்டிருக்கும் படைப்பாளியின் தளம் அவர்களோடு சேர்ந்த தனது வாழ்க்கையாயிருக்கிறது. அப்புரிதலும், அனுபவமும் அதன் விளைவான படைப்புமாயிருக்கிறது அவனது இலக்கியம். அம்மக்களின் விழிப்பையும், ஊக்கத்தையும், எவ்வகையிலாவது முன் வைப்பது தலித் படைப்பாளிக்கு தவிர்க்க முடியாததாகிறது.



படிப்பகம்

www.padippkam.com

இவ்வாறாக, படைப்பாளி தலித் இலக்கியத்தின் முனைப்பாளனாகத் தன்னையே உறுதி செய்வதும் தேவையாகிறது.

தலித்கள் இலக்கியம் படைக்க வந்தபின் தலித்களின் இலக்கியத்தையும் நாங்கள்தான் படைப்போம் என்று முற்போக்கு அணியினர் அடம் பிடிப்பது நகைப்புக்குரிய அரசியல்.

**"தலித் இலக்கியத்தின் மொழி, அழகியல் மற்றும் தொனிப்பொருள் குறித்து வரையறைகளை தலித் எழுத்தாளர்கள் பின்பற்றுவதில்லை. அவ்வரையறைகளுக்கு உட்படாதவற்றை தலித் இலக்கியம் என ஏற்றுக் கொள்ள முடியாது".**

தலித் இலக்கியத்தின் மொழி, அழகியல் மற்றும் உள்ளடக்கம் குறித்து ஜாம்பவான்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள், சில வரையறைகளை ஏற்படுத்திவிட்டதால் அந்த வரையறைகளைப் பின்பற்றித் தான் தலித் இலக்கியம் படைக்கவேண்டும் என்று ஆணையிடுகிறார்கள். இங்கே நமது விளக்கம் புதிய வரையறைகளை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணமில்லாது புழக்கத்திலுள்ள வரையறைகளைக் கேள்விக்குள்ளாக்குவதின் அவசியத்தில் எழுதப்படுகிறது.

இலக்கியத்தின் மொழி என்பதென்ன? தலித் இலக்கியத்தின் மொழியென்பதென்ன?

எல்லா ஊடகங்களையும் விட, மொழியானது மனிதனின் அன்றாட வாழ்க்கையில் முதன்மையாக இருக்கிறது. இலக்கியத்தின் மொழியென தனியாக எதுவுமில்லை. படைப்பாளனின் மொழியென்பது ஏற்கனவே அவனும் பிறரும் வாழ்விடங்களுக்கேற்ப அறிந்துள்ள வார்த்தைத் தொகுதிகள்தாம். வாழ்க்கை முறை, மரபு, உணர்ச்சிக் கூர்மையைப் பொறுத்தே வார்த்தை வெளிப்பாடு அமைகிறது. இது பொதுவானது. ஆனால் படைப்பாளியின் அனுபவமோ அவனுக்கு உரியது. அவனுக்கே உரிய புதிதான அவ்வனுபவத்தை அல்லது உணர்வை வெளிப்படுத்த தன்னகத்தே உறைந்துள்ள வார்த்தைத் தொகுதியிலிருந்து சரியான சொல்லைத் தெரிவுசெய்து புதிய தொகுப்பை உருவாக்குகிறான். படைப்பாளனின் அனுபவத்திற்கும் வார்த்தைத் தொகுதிகளுக்குமான இயக்கத்தில்தான் படைப்பாளனின் மொழி உருவாகிறது. ஒரு நிகழ்வில் இடம், பொருள், ஏவல் இவற்றின்மீது படைப்பாளியின் பார்வை என்பது தனக்குள்ளே தன்னைத் தோண்டி எடுக்கும்-விதமாக அமைகிறது. அவ்வகையில் வார்த்தைப் பரிமாற்ற இயக்கம் என்பது படைப்பிலக்கியத்தின் மொழியாக அமைகிறது. அவரவர் வாழ்க்கைச் சூழலும் புரிதலும், அனுபவமும் வாசகனைத் தூண்டும் வகையில் அமைய படைப்பாளன் கைக்கொள்ளும் மொழியே இலக்கியத்தின் மொழி. எனவே அனுபவம் இலக்கிய மொழியாகிறதேயன்றி வெறும் வார்த்தைப் பிரயோகங்கள் அல்லது வட்டார வழக்குகள் மட்டும் இலக்கியத்தின் மொழியாகிவிடாது.

தலித் இலக்கியத்தின் மொழி என்பது தலித் மக்களின் நேரடியான உரையாடல் மட்டுமன்று. ஒரு படைப்பில் தலித் மக்களின் உரையாடல், பேச்சுவழக்கு ஆகியவை இல்லாவிடில் அது தலித் இலக்கியம் அல்ல என்று வாதிடுவது அறிவுப்பூர்வமானதாகாது. ஏனெனில் தலித் இலக்கியம் என்பது ஒடுக்குமுறையின் அனுபவ வெளிப்பாடாக இருக்கிறதேயன்றி வெற்று உரையாடலாக நின்று விடுவதில்லை. தலித் மக்களின் பேச்சு



படிப்பகம்

www.padippkam.com

வழக்கிலிருந்து சில வார்த்தைத் தொகுதிகளை அள்ளி வீசிவிட்டு எங்களாலும் தலித் இலக்கியம் படைக்கமுடியும் என்று சிலர் மார்தட்டிக் கொள்வது இந்த வரையறைகளினால்தான்.

'தலித் அழகியல்' என்ற சொல்லாடல் எதைக் குறிக்கிறது? அழகியல் என்பது ஒரு நபரின் பாசப் பிணைப்பாகவோ பழக்கத்திற்குள்ளானதோ அல்லாது தோற்றத்திற்கும் நபருக்குமான இயக்க கதியில் நேரும் பரவச நிலையாயிருக்கிறது. பார்த்துப் பழகியதாலோ அல்லது உறவின் நெருக்கம் காரணமாகவோ மூக்கில்லாத மனிதத் தோற்றமே அழகானது என்பது அழகியலில் சேருமா?

தோற்றம், பார்வையாளனின் மனோபாவம் ஆகிய இரண்டுக்குமான இயக்கத்தில் நிகழும் பரவசமே அழகியலாக இருக்க, இந்த மனோபாவம் என்பது தனது மக்கள் சார்ந்த வாழ்க்கை, கலாச்சாரம், மரபு, தொழில் ஆகியவற்றால் அருபம் கொள்கிறது. தலித் மனோபாவத்தின் அடிப்படையில் களம், மொழி, வடிவம் என்பதன் நுட்ப விளைவாக தலித் இலக்கியத்தில் அழகியல் வெளிப்படுகிறது. இத்தகைய நுட்பமான ஒன்றை வெறும் தோற்றத்தில் முடக்குவது சமீப காலத்தில் சில இலக்கியவியலாளரின் செயலாக இருக்கிறது. இதன்படி, ஒரு தலித்தைக் கோவாண்டியாய்ச் சித்தரித்தால்தான் அது தலித் அழகியலாகுமாம். அழகியல் என்ற நுட்ப விளைவுக்குத் தேவையான அனுபவமின்றி புத்தகத்தை மட்டும் படித்து எழுவதால் வரும் விளைவு! வேறென்ன சொல்ல?

தலித் இலக்கியத்தின் தொனிப் பொருளாய் இருப்பது எது? தொனிப்பொருள் என்பதுதான் என்ன? ஒரு கதையில் நேரடி விஷயங்களாக சம்பவங்களும் கருத்தும் அடங்கிவிடுகையில் தொனிப்பொருள் என்பது மறைபொருளாக இருக்கிறது. இது எல்லா இலக்கிய வடிவத்திற்கும் பொதுவானது. மறைபொருள் படைப்பாளனின் பார்வையில் விளையும் பிம்பம், பார்வையின் பின்புலத்தை வாழ்க்கையனுபவமும் விருப்பு வெறுப்புகளும் கட்டமைக்கின்றன. எனவே, தலித் இலக்கியத்தின் தொனிப்பொருள் என்பது படைப்பாளனின் வாழ்க்கை சார்ந்த பார்வை.

தலித் இலக்கியத்திற்கான மொழி வசவுகள் நிறைந்த உரையாடல் அழகியல் என்பது அவர்கள் தோற்றம்; தொனிப்பொருள் என்பது போராட்டம்; என்ற அளவில் கட்டம் கட்டி குறுக்கி விடுவதானது. இந்த 'பார்முலாக்களை'ப் பின்பற்றி யார் வேண்டுமானாலும் தலித் இலக்கியம் படைத்து அதன் உக்கிரத்தை நீர்த்துப் போகச் செய்ய வேண்டும் என்ற செயலாயிருக்கிறது.

"ஒரு தலித் எழுதும் எல்லா படைப்புக்களும் தலித் இலக்கியம் ஆகிவிடாது. தலித் மக்களின் பிரச்சினைகளை முன்வைப்பது மட்டுமே தலித் இலக்கியமாக இருக்கமுடியும்".

தலித் மக்களின் வாழ்க்கை தலித்தின் அணுகுமுறை தலித் இலக்கியத்தின் தொனிப் பொருளாயிருக்கிறது. எதைக் களனாகக் கொண்டாலும் அதன் உள்ளார்ந்த பிம்பம் என்பது தலித் அணுகுமுறையாகவே இருக்கும். அப்பிம்பத்தை வெளிப்படுத்துகிற அவனது அனைத்துப் படைப்புகளுமே தலித் படைப்புக்கள்தாம்.



படிப்பகம்

www.padippkam.com

பெண் எழுத்தாளர்கள் எதைப் பற்றி எழுதினாலும் அதைப் பெண்ணியப் பார்வையாகக் கருதி தனிவாசிப்புக்கு உட்படுத்துகிறோமல்லவா? தலித் எதைப் பற்றி எழுதினாலும் தலித்தியப் பார்வையில் எழுதியதாகக் கருதி தீவிர வாசிப்புக்குட்படுத்துவது அவசியமாகிறது.

கால்பந்து ஆட்டத்தில் கறுப்பரின் வெற்றி என்பதானது தனி மனிதத் திறமை என்பதை மீறி, அவரது திறமை அனைவரும் (வெள்ளையரும்) அறிந்துகொள்ள வேண்டிய பொதுமையாகவும், அதே சமயத்தில் அவரது வெற்றி கறுப்பரின மக்களின் ஊக்கத்தையும் எழுச்சியையும் கொண்ட பல்வேறு இசைவுகளையும் கொண்டிருக்கிறது. இவ்வகையில், பரந்துபட்ட இலக்கிய வெளியில் 'தலித் இலக்கியம்' என்ற பதத்திற்குத் தன்னை உட்படுத்திக் கொண்டவர்கள் அம்மக்களின் பிரச்சினைகளை மட்டுமே எழுதவேண்டும் என்பது "மனித சமூகம்" என்ற விரிந்த தளத்திற்குள் தலித்தை அனுமதிக்காத போக்காக இருக்கிறது. அந்நிலையில் ஒருவன் தன்னை 'தலித்' என்று சொல்லிக் கொள்வதே அவமானத்திற்குரியதாகவும் சுட்டிக்காட்டுவதாகவும் அமைகிறது. தலித்துக்கும் தலித்தல்லாதவர்களுக்குமான உறவு நிலைகளைக் கொண்ட தளமும் தலித்துக்கான களமே!

மேலே சொல்லப்பட்ட பதில்களின் விளைவாக சில கேள்விகள் எழலாம்:

— இலக்கியத்தில் பொதுமை என்பதே இல்லையா?

— சாதிவாரியான இலக்கியம்தான் நிதர்சனமா?

— இம்மாதிரி பிரிவினைகள் நம்மை எங்கே இட்டுச் செல்லும்?

இந்தக் கேள்விகளை எழுப்புபவர்கள் யார்? தங்களை முதன்மையான இலக்கியக் கர்த்தாக்கள் என்று நம்பிக் கொண்டிருப்பவர்கள்! வாழ்க்கையில் சகல வேறுபாடுகளுக்கும் ஒப்புக் கொடுத்துக் கொண்டு இலக்கியத்தில் மட்டும் பொதுமை பேசுபவர்கள்.

இலக்கியம் என்பதே தனிமனித சுதந்திரத்திற்கும் நல்லுறவுக்குமான தளம். அந்த உன்னதத்தை, உடலுழைப்பின்மையின் குற்றவுணர்வு நிரம்பியதாக, தங்களை எப்போதும் முன்னிறுத்துவதாக, தங்களை மேன்மைப் படுத்துவதாக மாற்றிவிட்டார்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் மத நம்பிக்கையாளர்களும், வாய்மையே வெல்லும் என்னும் பண்பாட்டாளர்களும்கூட நடைமுறை வாழ்க்கையில் சாதி மதம், இனம், மொழி, ஏழை - பணக்காரன் என்ற ரீதியில் கொள்கிற உறவுமுறைக்கு நம்மிடம் காலங்காலமாய் சாட்சியங்கள் உண்டு. கடவுள், மதம் என்ற பெயராலே அக்கிரமங்கள் நிகழ்த்தி வருபவர்கள், பாவச் செயலுக்கு தண்டனை ஏதுமற்ற இலக்கிய தளத்திலா தம் கைவரிசையைக் காட்டாமலிருப்பார்கள்? அவர்களின் இவ்விதப் போக்கினாலேயே ஒடுக்குமுறைக்கெதிரான தலித்களின் ஒருமைப்பாடும், அதனை முன்வைக்கும் இலக்கியமும் அவசியமாகிறது.

தலித் இலக்கியம், உணர்வு தளத்தில் தலித்களை ஒன்று சேர்க்க முடியுமேயானால் அதுவே தலித் இலக்கியத்தின் மிகச் சிறந்த செயல்பாடாக இருக்கமுடியும்.



படிப்பகம்

www.padippkam.com





# வசை

ப்ரதிபா ஜெயச்சந்திரன்

நொண்டி என்றனர்
எனக்கொன்றும் தெரியவில்லை
கடைசியில் ஊன்று கட்டையை வீசியெறிந்த
ஆர்.எல்.எஸ்.-ன்
'புதையல் தீவு' நொண்டி வில்லன்
கதா நாயகனே யெனக்கு!

குருடன் என்றனர்
காவியம் பாடிய மில்டனுக்கு
ஸ்வர்க்கம் மீண்டது
வெளிச்சமாக
கண்ணுடையார்
வள்ளுவன் வாக்கு சுத்தம்!

செவிடன் என்றனர் -
உலகம் போற்றும் அவன்
இசையை:
பீத்தோவன்!

ஊமையன் என்றனர்
போக்கிரி என்றனர்
துடைப்பக்கட்டை என்றனர்
எனக்கொன்றும் தெரியவில்லை.

பைத்தியம் என்றனர்
இங்கு யாரில்லை பைத்தியம்?:

மண்ணுக் கலைய வென்று
மதுவுக் கலைய வென்று
பெண்ணுக் கலைய வென்று - பெரும்
பேருக் கலைய வென்று

வேசியின் மகன் என்றனர்
சித்தனிடம் கேட்க வேண்டும்

இருவர் கூடி மண்சேர்த்த விளையாட்டு
குறி த்து!
அவரவர் அம்மைக்குத் தெரியும்
அம்பலத்தி லாடிய கூத்தன்
யா ரென்று!

சோழன் நலங்கிள்ளிக்கு
உறையூர் முதுக்கண்ணன் சாத்தனார்
எடுத்துரைப்பர் இப்படி:

"சிறப்பு இல் சிதடும், உறுப்பு இல் பிண்டமும்
கூனும் குறளும், ஊமும் செவிடும்
மாவும், மருளும், உளப்பட வாழ்நர்க்கு
எண்பேர் எச்சம் என்று இவை எல்லாம்
பேதைமை அல்லாது ஊதியம் இல் என
முன்னும் அறிந்தோர் கூறினர்.
..........
அதனால், அறனும் பொருளும்
இன்பமும் மூன்றும்
ஆற்றும், பெரும் !"

எல்லா வசைகளும்
எனக் கொன்றும் தெரியவில்லை

நீரினுள் அமுத்த
பந்து பீறிட்டு
மீண்டது வெளியே.

ஆனா லந்த
ஒரே யொரு வசையில்
ஜீவ நாடிகள்
ஒடுங்கி யுடைந்தது:
'பறத்தாயோளி'



படிப்பகம்

www.padippkam.com

## கவிதை

ம. மதிவண்ணன்

திருட்டுப் பொண்டாட்டி புருஷனறியாது
அள்ளிக் கொடுத்தவற்றைப்
பகிரங்கப்படுத்தி ஜம்பமடிப்பவன்
ஆண்ட்ரோஜன், ஈஸ்ட்ரோஜன் தவிர்த்தவற்றை
சுரப்பது நிறுத்தி விட்டதோ உடல்
என்ற அய்யம் கிளப்புவான்.

நெப்போலியன் லப்பலியானதுக்காய்
கிண்டலடிக்கையில்
தொடையில் கிள்ளி குட்டிமைனியை சிணுங்கும்.
"கூட்டிகிட்டு போடே! தொல்லை விட்டுது"
என்று சீண்டி விடும் ஆத்தியப்பண்ணன்
கள்ளம் நெருங்கா உன்னதம் காட்டுவான்

பொய்யும் மெய்யும் விளையும் ஓரே வாயாய்
இப்பூமியில் எல்லாமிருக்கிறோம்.

❄ ❄ ❄

பொல்லாத கடிநாய் அது.
எத்தனையோ பேரை கடித்து மிருக்கிறது.
குற்றவுணர்ச்சி கட்டிப் போட
கூசிக் குறுகி
ஓலமிட்டு ஓடுகிறது எதிர்ப்பின்றி.
திருட்டுத்தனமாய் வீடு புகுந்து
உருட்டிக் கொண்டிருப்பதற்காய்
வெறுங்காலால் உதைக்கும் போது.

எச்சிலானவளை கூட்டிக் கொண்டு
"நாயமா நைனா இது"வென கேட்கையில்
"சக்கிலியக் கூதியுள்ளைகளுக்கு
அவ்ளோ தைரியம் வந்துட்டோ"
என்று செவிட்டிலறைகிறான் இவன்.



ஓவியம் : பி. மணிவண்ணன்



படிப்பகம்

www.padippkam.com

# ஒரு தகனத்தின் கதை

**கன்னட சிறுகதை** — **தேவனூரு மகாதேவ**

தெறந்த கண்ணு தெறந்தபடியே படுத்திருந்தே(ன்). செவுத்துமேல பரவியிருந்த குறுக்கும் நெடுக்குமான கோடுங்கமேலே பார்வ பட்டது. மெதுவா, கருப்புமை படிஞ்சுகிட்டிருந்த லாந்தர் வெளிச்சத்துக்கு கோடுங்க நேரமாக ஆக மங்கலாயிகிட்டிருந்ததுங்க. பாத்துக்கிட்டிருக்கும் போதே கோடுங்களுக்கு உருவம் வந்தது மாதிரி இருந்தது. வந்த உருவத்த எங்கியோ பாத்த மாதிரி இருந்தது. அந்த உருவத்துக்கு எங்கெயும் இல்லாத ஆவேசம் வந்த மாதிரி தெரிஞ்சுது. பயந்துபோய் கண்ண மூடுனா அந்த பயமே பெரிசாயி ஊடுமுழுக்க நெறஞ்சி ஆட்டிப்





படிப்பகம்

www.padippkam.com

படைச்சி, அதுவும் ஆடி வாசலுக்கு தாவி அங்க எரிஞ்சிகிட்டிருந்த வெறகுக் கட்டையை புடிச்சினு மறுபடியும் ஆடத் தொடங்கியதுமே, அதச் சுத்தி அதப்போலவே நாலஞ்சு உருவங்க. கண்ணு கபகபன்னு எரியறமாதிரி இருந்து, பயந்துபோயி கண்ண தொறந்தா மறுபடியும் செவுத்துமேல அதே கோடுங்க.

ஏ(ன்) இப்பிடி? வெதுவெதுப்பா கம்பளியப் போத்தி படுக்கவச்சி தட்டிக் குடுத்துனே பாட்டி சொல்லிதந்த 'அடத்தியான காடு, அதுல ஒரு . . . .'ன்ற கதயில தெச தப்பிப்போன மாதிரி. ஊடு நெறைய, வாசல் நெறைய ஓச நெறஞ்சு போன மாதிரி. நாத்தம் போகட்டுமேன்னு கட்டுகட்டா கொளுத்தி வச்ச ஊதுபத்தியோட வாசனயே வாந்திய வரவச்சுது. வாசல்லேருந்து வந்த வெறகுப் பொக மூச்ச தெணற வச்சுது. எழுந்து நின்னாலும் எதுவோ ஒரு படபடப்பு. ஒடம்பு பூரா சங்கடத்தோட நடுநடுக்கம். வெளியவாவது போய் அனலக் கக்கற நெருப்பப் பாத்தபடி, இல்லேன்னா சுருண்டு போய் திண்ணமேலே சில்லுன்னு படுத்திருக்கிற பாட்டிப் பொணத்த பாத்தபடி ஒக்காரணும்னு தோணிச்சி. மனசு நெனச்சாலும் நெனச்சத பண்ணமுடியல. இங்கயே, இந்த கட்டிலுமேலயே ஒட்டிவச்சிட்ட மாதிரி தோணுது. பன்னெண்டு வருசமா மக்கி மண்ணாப்போயிருக்கின்ற ஊடு தனக்குள்ளவே காடு ஒண்ண உருவாக்கினு, அன்னையிலேருந்து இன்னையவரைக்கும் பெரியவங்க செஞ்ச பாவத்தப்போல மூலையில எ(ன்) ஒயரத்துக்கு ஒண்ணுரண்டு ஒத்தச் செடிங்க. அதும் பக்கத்திலேயே மொழிங்கலு ஒயரத்துக்கு ஒரு புத்து. ஊடுபூரா வல பிண்ணியிருக்கிற செலந்திகிங்க: மேலயிருந்து கீழவரைக்கும் கருப்பா இறங்கியிருக்கிற எதுவோ கயிறு மாதிரி. உள்வாசலு தொட்டிய ஒட்டி உதிரி உதிரி சின்னா பின்னமாயி நெலத்துக்கு ஒட்டிகிட்டிருக்கிற கம்பங்களோட மிச்சம்மீதி. சுத்துமுத்துலயும் ஏராளமான ஒடைஞ்சிபோன ஓடுங்க. அதும் மேல படிஞ்சிருக்கும் உள்ளங்கை தப்பத்துல சாம்பலுதூளு. புளுத்துப்போய் மஞ்சப்பொடிய உதுர்த்துக்கிட்டு வெறுமே நுனியில ஒட்டிகிட்டு நிக்கிற கதவுக் கம்பங்க. ஊடு நெறைய எலி வளதோண்டி வெளிய வெளிய தள்ளின மண்ணுகுவியலு. சின்னவயசுல, நான் பொறந்து வளர்ந்த ஊடு கண்ணுல எறங்கி இது அதுதானான்ற சந்தேகத்த கௌப்பி நிக்குது. வெளிய தமுக்கு சத்தம். "நியாயம் பேச வாங்க... ஊருகூடறாங்க . . ." சொல்லிகிட்டே தமுக்குக் காரன் எங்க ஊட்டத் தாண்டிப் போனது ஜன்னலத் தொறந்து வெளிய எட்டிப் பாத்துருந்தா தெரிஞ்சிருக்கும்.

. . . . பொகத்துல வேல கெடச்ச களைய சொமந்துனு ஊருக்கு வந்தா பெரியப்ப(ன்) கண்ணைச் சுருக்கி அளந்து பாக்கறாங்க. உள்ளுக்குள்ள பொறாம, ஆச்சரியத்த தூண்டி வுடற மாதிரி பாட்டி வாயமுடினு ஒக்காந்துனிருந்தாங்க. "வேல என்னுமோ கெடைச்சது. ஆனா ரொம்ப தூரம் . . ."ன்னு சொன்னே(ன்). யாரும் பேசவே இல்ல, அதுக்கு மேலயும் அப்பிடியே ஒக்காந்திருந்த அவங்க கோணப் பார்வய தாங்கிக்க முடியல. எரிஞ்சுவுழுந்த மாதிரி, "என்னாச்சி உங்களுக்கெல்லா(ம்)ன்னே(ன்) கண்ண எடுக்காமயே பெரியப்ப(ன்) சாதாரணமா 'ஒண்ணுமாகவே!'-ன்னார். மூச்சுமுட்டத் தொடங்கி பெருமூச்சு உட்டு, பொட்டி மேல ஒக்காந்துனு "இல்ல. . ."ன்னு பெரியப்ப(ன்) சொல்ல ஆரம்பிச்சப்போ திரும்பி அவரயே நான் பாத்ததும் "கடவுளு தரிசனம் தர்ற மாதிரி ஊருக்கு வந்தினிருந்த(ன்), இன்னிக்கின்னுதான் வரணுமா!"ன்னார். என்னாச்சி? ... என்னாயிடிச்சி இப்போ . . . ! மொகத்துல இருந்து மொகமா வீட்ட சுத்தியும் கண்ண ஓட்டிட்டு மறுபடியும் பெரியப்பனயே பாத்தே(ன்). "நாங்கெல்லாம் தல நிமிந்து நடக்க முடியாம பண்ணிட்டே. அப்ப(ன்), அம்மா இல்லாத அனாதன்னு உனுக்காக அத்தைங்கெல்லாம் உசிர எடுத்தாங்களேன்னு நானும் அதுஇதுன்னு என்கைலான ஒதவியச் செஞ்சதுக்கு நீ சரியான மரியாத பண்ணிட்ட இனிமேல என்ன . . . நீ என்னுமோ இங்க இருக்கப் போறதில்ல. . . அனுபவிக்கப்



படிப்பகம்

www.padippkam.com

போறவங்க நாங்கதானே?" கொங்கணத்த சுத்தி ஸைலாரத்துக்கு வர்ற பேச்சுங்க அசிங்கத்த வயித்துக்குள்ள நெரப்பிவச்சிகிட்ட மாதிரி ஒக்காந்தே(ன்).

அந்த நேரத்துல வெளிய போயிருந்த பெரியம்மா, அக்கா, அவமக நாகி ஒவ் வொருத்தரா உள்ள வந்தாங்க. பாத்த பொடனே பெயம்மா "இப்பபாத்து வந்தியே . . ."ன்னிட்டு மந்தமா எரிஞ்சிருந்த வெளக்குத் திரிய ஏத்தப் போனாங்க. நாகி என் பக்கமாக பாத்துட்டு சட்டுன்னு கண்ண திருப்பினு நடுவூட்டு கதவுகிட்ட போயி ஒக்காந்து வெளக்குத் திரிய பெரிசு பண்ணினிருந்த பெரியம்மாவையே பாத்துனிருந்தா. இவங்கெல்லாம் இப்பிடி நடந்துக்கிறது, எனுக்கு ஒன்னுமே புரியல. பெரியப்ப(ன்) எங்கியோ பாத்துனு "இன்னிக்கி ஊருகூட்டம் . . ."ன்னார். நான் அவரயே பாத்தே(ன்) மேல எதுவும் சொல்லாம இருந்ததப் பாத்துட்டு, "எதுக்காக ஊருகூட்டம்?"ன்னு கேட்டே(ன்) இடியிடிச்ச மாதிரி, "எதுக்குன்னு வேற கேக்றியா? நீ பண்ணின அநியாயத்துக்கும் அக்குறும்புக்கும் நா(ன்) மட்டும் இல்லாமப் போயிருந்தா உ(ன்) மானமும் இல்ல . . ! எ(ன்) மானமும் இல்ல! அந்த உன் கம்லி வவுத்துல சொமந்துனுகிறா. சாதியஉட்டு சாதி, படிச்சவ(ன்) நீ! படிக்காத முட்டாளு மாதிரி . . . சீ . . . சீ . . . சரி சரி"ன்னினு பெரியப்ப(ன்) சோந்து போனவரு மாதிரி பெருமூச்சுவுட்டு, மேலயும் கீழயும் பாத்துட்டு கடைசியா நடுவாசல் வழியா தெரியற வானத்தப் பாத்துனே ஒக்காந்ததும், நான் ஆடிப்போயிட்டேன். கொழம்பிப்போயி ஒக்காற முடியாம சிகரெட்டாவது புடிக்கலாமேன்னு மேல எழுந்ததும் பெரியப்ப(ன்) என்ன பாத்து "இப்போவும் ஒன்னும் ஆயிடலேன்னு வச்சுக்கோ, அவங்க ஆண்டமாரு சாதிய சேந்த ஒருத்தந்தான் காரணம்ன்னு ஒப்பவச்சிருக்கிறேன். அவுளுக்கு தண்டம் கட்றதுக்கு எரநூறு ரூபா குடுத்தா தீந்துது. இந்த தொல்லயே உட்டுடும்"ன்னு சொல்லி பேச்ச நிறுத்தி, மறுபடியும் தொடங்கி தயங்கித் தயங்கி, "அப்பறமா . . . வேள கூடி வந்திடிச்சி . . . எப்பிடியோ எல்லாரும் ஒத்துகிறாங்க . . . நாகிய கல்யாணங் கட்டிக்கோ. என் சொத்து இன்னும் யாருக்குச் சேரணும்! சொல்லு . . . எங்குளுக்கும் எந்த ஆம்பிளபுள்ள இருக்குது? என்னமானா ஆவுட்டம் . . . அவமானம் ஆயிடிச்சேன்னு பாளாப்போக உட்டுடமுடியாது பாரு"ன்னிட்டு என்னையே பாத்தார். எனுக்கு நடுக்கம் வந்தமாதிரி, கண்ணு இருண்டுபோனமாதிரி, ஆச்சி. தட்டுத்தடுமாறிகிட்டு வெளிய வந்தே(ன்). குச்சிய கிளிச்சி சிகிரெட்டு பத்தவச்சி, பத்தவச்ச வெளிச்சத்துல எம் மொகத்தப் பாக்கணும் தோணிச்சி. . . .

எந்தப் பக்கம் பொரண்டாலும் கோடுங்க தான். உத்துப் பாத்துனிருக்கும் போதே, உருவம் எடுத்துவர்ற, உயிர் உள்ளதா எழுந்துவர்ற கோடுங்க. இதுக்கு முடிவே இல்லியே . . . திரும்பிப் படுத்துப் பாத்தே(ன்). ஒடம்பு பொணம்பாரம். வலுவெல்லாம் எங்கெயோ பொதஞ்சி போயி ஒடம்புசத பூராவும் நோவு மட்டுமே ஒளிஞ்சி னிருக்கிற மாதிரி. இப்பிடியே திரும்பித்திரும்பிப் படுத்து காலத்தத் தள்றதுக்குப் பதிலா வெளிய வாவது போயி ஒக்காந்திருக்கலாமேன்னு நெனச்சி எழுந்து வாசலுக்கு வந்தே(ன்). மாட்டுக் கொட்டாய் பக்கம் பறந்து திரியற, படபடன்னு அடிச்சிக்கிற ஏழெட்டு கருஞ்சிட்டுக் குருவிங்க. தெருப்பக்க எறவாணுத்துல தொங்வுட்டிருந்த லாந்தர் கண்ணாடி கரிபடிஞ்சி கருப்பு வெளிச் சத்தையே கக்கினிருக்கிற மாதிரி தெரிஞ்சி மனகல 'திக்'குன்னுது. புத்துகட்டுன ஒத்தச் செடி இருந்த பக்கம் பாக்க முடியல. ஒன்னு ரெண்டு கருஞ்சிட்டுக் குருவிங்க சடார்னு காதோரமா பறந்துபோகவே பயந்துபோயிட்டே(ன்). சட்டுனு லாந்தர் திரிய ஏத்தி பெரிசு பண்ணினே(ன்). கபகபன்னு பொக வரத்தொடங்கிச்சி. தொங்க போட்டிருந்த எடத்துலேருந்து லாந்தர எடுத்துனு வெளிய வந்தே(ன்). வெளிவாசல்ல எரியவுட்டிருந்த வெறகுக் கட்டைங்க தங்கள சுத்தி அனலப் பரப்பிகிட்டு வாசலயே செகப்பா மாத்தினிருந்துதுங்க. திண்ணமேல நாலு



படிப்பகம்

www.padippkam.com

மொளம் நீளத்துக்கு தலமட்டும் தெரியற மாதிரி போத்தியிருந்த வெள்ளத்துணிக்குள்ள பாட்டி யோட ஒடம்பு அடங்கி கெடந்துது. தலபக்கமா, நின்னு எரியறதுக்காக போராடினிருந்த புள் ளெண்ணை வெளக்கு தன்னயே இருட்டுல தேடினிருந்துது. வெளக்குப் பக்கத்துல ஏழெட்டு ஊதுபத்தி பொட்டணங்க, அதுலயே சொருகி வச்சிருந்த எரிஞ்சியெரிஞ்சி எரிஞ்சினே சாம்பல் கயித்த கீழ தொங்கவுட்டுருக்கிற ஊதுபத்திங்க. அதப் பாக்க முடியாம மேல பாத்தேன் சாக் கடையில நெளிஞ்சுகிட்டிருக்கிற வெள்ள புழுவுங்களப் போல நச்சத்திரங்க.

குளுச்சியா காத்து வீசிட்டுப் போச்சி. ஊருகூடிருக்கிற சாவடில என்னமோ கலவரம். யாரோ ஒருத்த(ன்) கீரல் கொரல்ல படபடன்னு பேசினிருந்தா(ன்). உத்துக் கேட்டும் யாரு கொலலுன்னு தெரியல. கொஞ்சதூரம் நடந்து போயி, காதகுடுத்து கேட்டே(ன்). "நடந்து முடிஞ்சது திரும்பவும் வரப்போறதில்ல. . . என்னுமோ ஆயிடுச்சி . . . தண்டத்த வாங்கிப் போம். செத்த பொணத்த முன்னால வச்சிக்கினு நம்ம வைராக்கியத்தக் காட்டக்கூடாது"ன்னு ஒருத்தரு சொல்லினிருந்தார். அதுக்கு நாலஞ்ச பேரு ஒரே நேரத்துல பேசனது என்னன்னே தெரியல. நடக்கிறது நடந்தே தீரும். எதுக்கு இப்பிடி நிக்கிறதுன்னு நெனச்சினே திரும்பி வந்து லாந்தர் வெளக்குக் கண்ணாடிக் கரிய தொடச்சே(ன்). குச்சி கிளிச்சி லாந்தரக் கொளுத்தி அந்த நெருப்புலயே சிகரெட்டும் பத்த வச்சேன். லாந்தர் பளபளன்னு மின்னத் தொடங்கிச்சி. பெரியப்பனோட கெட்டிச்சிப் போன யோசனைங்க தலைக்குள்ள நடமாடிச் சிங்க.

. . . ஒலகத்தையே ஜெயிச்சவரப்போல கால வீசிப்போட்டு நடந்துவந்த பெரியப்ப(ன்) "எல்லாம் முடிஞ்சுது . . . கடவுள் புண்ணியத்துல . . ."ன்னார். வேதனயா இருந்தது. கமலி ஒத்துக் கிட்டாளான்னு கேட்டேன். பெரியப்ப(ன்) பொறக்கேறும்படியா சிரிச்சிட்டு, "ஒத்துக்காம? அவ்வளவுக்கும் நாளன்னா ஏமாளியா! முன்னா டியே சொல்லிக்குடுத்திருக்கலியா? ஒத்துகி னாங்க. அவுங்க மேல்சாதியாளுங்க! அவள அவபோக்குல உட்டுட்டா அவுங்களுக்கும் அவமானம் இல்லியா?"ன்னு சோர்வே இல்லாம சொல்லி முடிச்சிட்டு உள்ள போயிட்டாங்க. வாசப் படியிலயே சட்டுன்னு உள்ள போனாங்க. சாமிக்கு நெய்வெளக்கு கொளுத்தறுதுக்காக இருக்கும். காலுகீழ பூமி நடுங்கிற மாதிரி இருந்தது. ரொம்ப நேரமா இப்படியேதான். "பனியில எதுக்கு ஒக்காந்திருக்கிறே? வா உள்ள"ன்னு மறுபடியும் பெரியப்ப(ன்) வந்து சொல்லிட்டுப் படுக்கப் போனாங்க. வயித்துக் குள்ள சிகிரெட்டோட பொக கொடலக் கொளுத்தி சுட்டுகிட்டிருக்கிற மாதிரி இருந்தது. மெதுவா மழ தூரலா தொடங்கிச்சி. கண்ணக் குருடாக்கிற இருட்டுல காலடி வச்சேன். ஊரு, ஒரு கண்டம் கழிஞ்சமாதிரி சத்தமில்லாம படுத்துனிருந்துது.

. . . கமலி பாத்தவொடனே மொகத்த மூடி கிட்டா. ரொம்ப நேரம் தேம்பிகிட்டேயிருந்து அப்பறமா தலய நிமித்தி மொறச்சிப் பாத்தா . . . ஆவேசம் வந்தவளப் போல "போங்க. . . போங்க . . . வரவேணாம்"ன்னு சீறி நின்னா. ஒடம்பு நெறைய தலைமுடி கண்டகண்ட எடத்துல தம்பாட்டுக்கு அலஞ்சிக் கெடந்தது. அழுது அழுது செவுந்துபோன கண்ணுலருந்து தள தளன்னு கண்ணீராக் கொட்டி, "நான் பொளச்சிருக்கிறனான்னு பாக்க வந்தீங் களா?"ன்னா. நான், "சொல்றத கேளு" கன்னே(ன்). "என்ன பயித்தியக்காரியாக்க வேணாம். உங்க ளுக்கு புண்ணியமாப் போவுது, போயிடுங்க"ன்னு சொல்லினே காலப் புடிக்க வந்தா. அவ கையி ரெண்டையும் நா(ன்) கெட்டியா புடிச்சிகிட் டே(ன்). பரிதாபமா என்னயே உத்துப் பாத்தா. என் நெஞ்சுமேல அவ கைய வச்சுகிட்டு "நட அப்போ, போகலாம்!"ன்னே(ன்). பதறிப்போயி கைய வெலக்கிகிட்டு துருதுருன்னு உத்துப் பாத்தா. அவ நாக்கும் ஒதடுங்களும் தடிச்சதுங்க. "நானிருக்கிற எடத்துல என்னோடவே நீயும் இருப்பே. வேற எதுவும் பேசறதே



படிப்பகம்

www.padippkam.com

வேணா(ம்)"ன்னு அவ கையிங்கள கெட்டியா புடிச்சினு வெளியே வந்தே(ன்). இருட்டு வெலகி வழி பண்ணிக்குடுக்கிற மாதிரி இருந்தது. எப்பிடியோ தட்டுத் தடுமாறி தாருரோட்டுக்கு வந்தப்போ நல்லகாலம் ஒரு டாக்சி கெடச்சிது. காரு வெளிச்சத்துல தெரிஞ்ச தாருபாதையிலயே கண்ணப் பதியவச்சி கமலி அசையாம ஒக்காந்திருந்தா. ரோடு நீளத்துக்கும் வானத்த மறச்சினிருந்த மரங்க, கொகைக்குள்ள போன மாதிரி. "பயமாருக்குதா கமலி . . ?"ன்னே(ன்). பார்வய இழுத்து எங்கண்ணோட பதிச்சா. "நீ என்னவானாலும் சொல்லு . . . ஆனா, நான் பண்ணன்து சரின்னே படுது"ன்னே(ன்). எதுவும் பேசாம என்னையே பாத்தா. . . .

குளுரெடுக்கத் தொடங்கிச்சி. சலனம் அடங்கிப் போன பாட்டியோட ஒடம்பு இருந்த பக்கம் பாத்தேன். அப்படியே மரக்கட்டயப் போல, கொஞ்சங்கூட மாறல. ஊதுபத்தி எரிஞ்சி முடிஞ்சிருந்தது. நெருப்புக்கட்டிய எல்லாம் சாம்பலு மூடினு வாசலுயெல்லாம் இருட்டா ருந்துது. நெருங்கிப் போய் நெருப்பக் கெளரி இன்னும் கொஞ்சம் வெறகுக் கட்டைங்களப் போட்டுட்டு வந்து அப்பிடியே ஒக்காந்தேன். ஊருகூட்டம் முடிஞ்சமாதிரித் தெரியல. பொகைய கக்கினிருந்த கட்டைங்க பத்தி எரியறதப் பாத்துனேயிருந்தே(ன்).

. . . . வாரம் முடியறதுக்குள்ள பாட்டி கிட்டயிருந்து தபால் வந்துது. 'நீ பண்ணியி ருக்கிற வேலக்கி இங்க ஊருகூட்டம் போட்டு என்னெ ஊருகட்டுபாடு பண்ணி, இப்போ தண்ணிக்கும் நெருப்புக்கும் அலையாத அலச்சலு. சரியா கண்ணு தெரியாத நானு என்னா பண்றது? உம்பெரியப்பனோ எகிறி குதிச்சினி ருக்கிறா(ன்). குடுக்க வேண்டிய கடனுக்குத்தான் ஒன்நெலத்த உளுதுகிட்டிருக்கானாம். தம் பேத்திக்கு கல்யாணம் ஆவலியேன்னு அவனுக்கு வயித்தெரிச்சலு. இந்த எரிச்சலுக்கு நடுவுல நா(ன்) எப்பிடியிருக்கிறது சொல்லு? சாவற காலத்துல - இப்பிடி என்னென்னமோ கடுதாசி நெறைய. பாட்டிய கூட்டினுபோலாம்னு மனசு தெடம் பண்ணினு ஊருக்கு வந்தா ஊருக்கு ஊரே வெறுப்போட பாத்து வாய்ப்பேச்சு பேசாமப் போனப்போ சிரிப்பா வந்துது . . . .

மேல ஆன்னு நச்சத்திரங்களயாவது பாக்கணும்னுதான் நெனப்பு. ஆனா பயம். பாழும் சாக்கடப் புழுவுங்கதான் நெனப்புக்கு வருதுங்க. கொச கொசன்னு நெளியுதுங்க. வாந்தி வர்ற மாதிரி பண்ணுதுங்க. மூச்சுமுட்டச் செய்யுதுங்க. அதுங் கூடவே வர்ற பெரியப்பனோட பொக்கு கட்டிப் போன யோசனைங்க. பொறுக்க முடியாம பாட்டி ஒடம்பு இருந்த பக்கம் பாத்தே(ன்). அய்யோ பாவம்னு தோணிச்சி. எம்மேலயா. . பொணத்து மேலயா . . . ? பாட்டி இப்பிடி பண்ணியிருக்கக் கூடாது. பன்னெண்டு வருசம் கமலி கூடவே ஒட்டி ஒறவாடி பொழச்சிக் கெடந்தவங்க. சாவற காலத்துல 'செத்தா என்நெலத்துலதான் சாவே'ன்னு புடிவாதம் பிடிச்சிருக்கக் கூடாதுதான். சோறுதண்ணி இல்லாம பார்வயில்லாத கண்ணுல என்னென் னமோ கனாக்கண்டுனு ஒக்காந்திருந்ததப் பாத்துட்டு கமலி தானும் ஒண்ணையும் தொடாம "கடசி ஆச . . . கூட்டினு போங்க"ன்னு ஒத்தக்கால்ல நின்னா. பன்னெண்டு வருசத்து கட்டுப்பாட்ட உட்டுக்குடுக்க மாட்டம்னு யாரோ அடம் புடிச்சிருக்கணும். பெரியப்ப னோட பேச்சு தோரண எப்பிடியிருக்கும்னு தெரிஞ்சிக்கிற மனசு வந்துது. 'இது ஒரு முடிவேயில்லாத ஊரு பிரச்சனையாயிடிச் சின்னா'ன்னு ஒரு சின்ன கவல. மேல எழுந்து குளுருக்கு ஒடம்ப சிலுர்த்துனு லாந்தர் திரிய ஏத்தி உள் வாசலுக்கு வந்தே(ன்). ஊட்டுக்குள்ள இருந்த அவமானத்த லாந்தர் வெளிச்சம் தெட்டத் தெளிவாக்கினிருந்துது. அதப் பாக்க முடியாம லாந்தர கம்பி கொக்கியில மாட்டிட்டு, ரூமுக்கு வந்து ஒருக்களிச்சுப் படுத்தே(ன்). மறு படியும் நெனப்புங்க பிச்சுத் தின்னத் தொடங்கிச்சிங்க.

. . . ஊரு கிட்ட நெருங்க நெருங்க ஊருக்கு நெருக்கமான நெனப்புங்க. . பாட்டியோட தல எந்தோள்மேல சரிஞ்சி ஊஞ்சலாடிகிட்டிருந்



படிப்பகம்

www.padippkam.com

திச்சி. கைக்கொழந்த மாதிரி பாட்டி கனவுல பெணாத்திக்கிட்டிருந்தாங்க. ஊருக்கு ஒருமைல் தொலவு இருக்கும்போது, தளக்குன்னு களசம் உழுந்த மாதிரி பாட்டி தல என் மடியில உழுந்திச்சி. நான் வெலவலத்துப் போன(ன்). பாட்டி ஒடம்பு குளுந்துனே வந்துது. கார பின்னுக்குத் திருப்பச் சொன்னா என்னான்னு யோசிச்சே(ன்). ஆனா, சொல்லமுடியாம எதுவோ தடுத்துது. காரு மெதுவா போய்கிட்டே இருந்துது. ஊருமுன்னால வந்தப்போ அங்கேயே நின்னுனிருந்த தமுக்கு சிக்கண்ணனுக்கு யாரு இன்னாருன்னு அடையாளம் சொல்ல வேண்டி யிருந்தது. முதுகெழமாயிருந்த அவனுக்கு நானுன்னு தெரிஞ்சதும் துள்ளி குதிக்காதது தான் பாக்கி. ஆனா விசயம் தெரிஞ்சி பேயடிச்ச மாதிரி நின்னா(ன்). பாட்டி அப்பிடியிப்படின்னு அவங்க பெருமய பேசத் தொடங்கினவன நிறுத்தி பெரியப்பனுக்கு சமாச்சாரத்த சொல்லச் சொன்னே(ன்). ஒறவுக்காருங்க ரொம்ப வருசமா பாக்காமயிருந்தா பூசபண்ணிட்டு எண்ணெயில தா(ன்) மொதல்ல மொகத்த பாக்கணும்னு சொன்னா(ன்). மொதல்ல போயி சேதிய சொல்லும்படி அனுப்பிச்சே(ன்). . . .

வெளிய யாரோ இரும்பினே நடந்து வர்ற மாதிரி இருந்துது. ஊருகூட்டம் முடிஞ்சிருக் கணும்! என்ன ஆச்சோ!? பரபரப்புல சட்டுனு எழுந்து ஒக்காந்தே(ன்). வந்தவர் வெளியே யிருந்தே, “யாருப்பா. . . .”ன்னார். வெளிய வந்தப்போ ஊரெசமா(ன்) சித்தய்யா நின்னு னிருந்தார். பதறிப்போய் என்னாச்சின்னே(ன்). கைய ஆட்டினே, “நானும் எவ்ளவோ பேசிப் பாத்துட்டே(ன்). ஒண்ணும் நடக்கிற மாதிரி இல்ல. ‘ஊருமானத்த எடுத்தவ(ன்) அவ(ன்). வெசப்பாம்ப எங்கியாவது சேத்துக்கிறது உண்டா?’ அப்பிடின்னு கடாகண்டிசனா அடம் புடிக்கிறாங்க. உங்க பெரியப்ப(ன்) என்ன டான்னா முடியறவரைக்கும் கல்லுகுண்டு கணக்கா சும்மாவே ஒக்காந்திருந்தா(ன்), வாயத் தொறக்கவேயில்ல. ஒண்ணும் செய்ய முடியலெ! “ன்னிட்டு செத்து படுத்துனிருக்கிற பாட்டி, எரிஞ்சினிருக்கிற நெருப்பு, அப்புறம் மேலேன்னு குறியில்லாம பாத்தார். “மனுசங்களா நீங்க? போய்த் தொலைங்க இங்கேருந்து”ன்னு சீறி உழுந்தேன். சித்தய்யா கண்ண அகலத் தொறந்து மேலயிருந்து கீழவரைக்கும் பாத்துட்டு “தொலயறது யாரு?!“ன்னு செவந்த கண்ணோட பாத்தார். அப்புறமா மூச்ச இழுத்துவுட்டு மெதுவா சிரிச்சிகிட்டு பரபரன்னு நடந்து போயிட்டார். கண்ண அகல விரிச்சி ஒண்ணும் தெரியலென்னாலும் அப்பிடியே நின்னுட் டே(ன்). இப்பிடியே நேரம் போய்கிட்டிருந்தா எப்பிடி?. . . என்ன பண்றது? பெருமூச்சவுட்டு பாட்டி பக்கமா பாத்தேன். வாசல்ல நெருப்பு வெளிச்சம். அந்த அளவுக்கு மட்டும் உட்டுட்டு ஊரையே மூடினிருக்கிற இருட்டு. வாசல்ல கண்டபடி எறிஞ்சிருக்கிற வெறகுக் கட்டைங்கள நெருப்புல அடுக்கினே(ன்) உள்வாசலுக்கு வந்து கண்ணுக்குள்ள எறிஞ்சமாதிரி எல்லாத்தையும் ஒருவாட்டி பாத்தே(ன்). நேரா அட்டத்துப் பக்கத்துல வந்து அதும்மேல ஏறி உசிர கையில புடிச்சினு சுருக்கு மாட்டி தொங்கினிருந்த மூங்குலு கொம்புங்கள, பிரிச்சிபிரிச்சி கீழ தள்ளினே(ன்). கண்ணு நெறையற அளவு தெரிஞ்சதும் கீழ எறங்கி கொம்புங்கள எல்லாம் ஒரே எடத்துல அடுக்கி அரியரியா கட்டினே(ன்). நாலஞ்சு தடவ உள்ளேயிருந்து வாசலுக்கு அதுங்களயெல்லாம் கொண்டார்றதுக்குள்ள வேத்துவிருவிருத்துப் போச்சி. கைகாலெல்லாம் தூசிபடிஞ்சி ஒடம்பே கருப்பாயிடிச்சி. பாட்டி, நெருப்பு எல்லாம் அப்பிடியே அதேமாதிரிதான்!

எந்த தெசயும் உடாம நாக்க நீட்டினிருந்த நெருப்பச் சுத்தியும் கொம்புங்க உழுந்து கெடந்துது. அதுங்க பத்தி எரியத் தொடங்கி பயப்படுத்தற அளவுக்கு வெளிச்சம் வந்துது. பாட்டிகிட்ட மெதுவா அடிவச்சி நடந்தே(ன்). கொஞ்சநேரம் நின்னு அப்பறம் பாட்டியோட தலபக்கமிருந்த போர்வய வெலக்கினே(ன்). கொஞ்சம் சுருட்ட மயிரும் சுருக்கங்களும் சேந்து சேந்து ஆனமாதிரி . . . . மெதுவா மொதல்ல இருந்தமாதிரியே துப்பட்டிய இழுத்து மொகத்த



படிப்பகம்

www.padippkam.com

மூடிட்டு இன்னும் கொஞ்சம் கிட்டபோயி எங்கைங்கள குளிருவாட்டுற பாட்டி ஒடம்பசுத்திப் போட்டு கெட்டியா இறுக்கிப் புடிச்சினு மேல தூக்கினே(ன்). தூக்க முடியாத அளவுக்கு கனம். கையும் காலும் கடகடன்னு நடுங்கத் தொடங்கிச்சி. கொஞ்சம் அப்பிடியே பிடிச்சினு நின்னு ஆவேசம் வந்ததப்போல கண்ண மூடினு மேல தூக்கிட்டே(ன்). பாட்டி ஒடம்பு என் நெஞ்சிமேலே சாஞ்சினு முன்னயும் பின்னயுமா ஆடிச்சி. தட்டுத்தடுமாறி நெருப்பு கிட்ட கொண்டாந்து கைபுடிய உட்டப்போ, 'தப்'புன்னு ஒரு பெரிய சத்தம். பூமியே ஒருவாட்டி 'கிர்'ன்னு சுத்திட்டு சட்டுன்னு நின்ன மாதிரி. தலைக்குள்ள கண்ணுக்குள்ள கருப்பு வெளிச்சம் நெறஞ்சி ஜொலிச்ச மாதிரி. நெருப்பு, நாக்க நீட்டி என்னையும் இழுத்துக் கிட்ட மாதிரி. எப்பிடியோ சமாளிச்சினு பின்னால தாவி நெலகொலஞ்சி ஒக்காந்தே(ன்).

கண்ணுல இருட்டு படிஞ்சிப் போயி... கண்ணத் தொறந்தா பாட்டிய பத்திக்கிட்ட நெருப்பு நாக்க நீட்டி கிட்டகிட்ட. . . இன்னும் கொஞ்சம் பின்னால நகந்து நின்னே(ன்). நெருப்ப சுத்தியும் இன்னும் கொஞ்சம் கொம்புங்க உழுந்து கெடந்ததுங்க. அதெல்லாம் தீர்றவரைக்கும் ஆளு ஒயரத்துக்கு எரிஞ்சினு இருந்த தீயில தூக்கிப் போட்டே(ன்)...நெருப்பு கொறயத் தொடங்கிச்சி. . . கொறஞ்சி. . கொறஞ்சி. . என்னால நிக்க முடியல. . . . தட்டுத்தடுமாறிகிட்டு கண்டகண்ட பக்கம் ஓடத் தொடங்கினே(ன்). ஊருக்கு ஊரே என் பின்னால தொரத்தினு வர்ற மாதிரி. கொஞ்சநஞ்சமிருந்த வலுவயெல்லாம் சேத்துப்புடிச்சினு ஓடுனே(ன்) காலு ஓஞ்சிபோற வரைக்கும், கண்ணுல இருட்டு கவ்விப்புடிக்கிற வரைக்கும், சுத்தியும் கெட்டியா கட்டிப்போன கருப்பு இருட்டு காணமுடியாம போறவரைக்கும்!

தமிழில் : தி. சு. சதாசிவம்

❄ ❄ ❄ ❄ ❄ ❄



படிப்பகம்

www.padippkam.com

# போஸ்ட் மாடர்னிச யுகத்தில் தலித்தியம் – மெய்யியல் – விரிந்த உலகப் பார்வை

### — இரட்டைமலை சீனிவாசனை முன் வைத்து சில குறிப்புகள் —

அ. மார்க்ஸ்

"தலித் அரசியல் என்கிற பெயரில் மெய்யியலைப் பின்னுக்குத் தள்ளுகிறார்கள். தலித்தியத்திற்கு மெய்யியல் இல்லை. விரிந்த உலகப் பார்வை இல்லை. தலித் இலக்கியம் உலகப் பொதுமையிலிருந்து விலகிக் கூறுபடுத்தப்பட்ட தனிமை இலக்கியமாக இருக்கிறது" - இவை எல்லாம் தமிழ்ச் சூழலில் முக்கிய விமர்சகர்களாக இதுகாறும் அறியப்பட்டு வந்த சிலர் தலித் இலக்கிய, அரசியல் முயற்சிகளின் மீது தொடுக்கும் தாக்குதல்கள்! இந்தக் குற்றச் சாட்டுகளில் ஏதேனும் பொருளிருக்கிறதா, மெய்யியல், உலகப் பார்வை ஆகியவை குறித்த இவர்களது புரிதல்கள் அர்த்தமுடையவையா என்கிற கேள்விகளை நாம் இப்போது எழுப்பிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

முதலில் மெய்யியல் குறித்த இவர்களின் புரிதல்களை எடுத்துக் கொள்வோம். அரசியல் வேறு மெய்யியல் (Philosophy) வேறு என இவர்கள் கருதுகிறார்கள். அரசியல் வந்துவிட்டால் அந்த இடத்தில் அழகியல், மெய்யியல் முதலியன இருக்க முடியாது என நம்புகின்றார்கள். இவர்களது இதர எழுத்துக்களைக் கூர்ந்து கவனித்தால் இந்தியத் தத்துவப் பாரம்பரியத்தை மோகிப்பவர்களாகவும், இந்து மதத்தைச் சிலாகிப்பவர்களாகவும் இவற்றைக் கேள்விக்குள்ளாக்கிய பெரியார், தேவி பிரசாத் சட்டோபாத்யாயா ஆகியோர் மீது மரியாதையற்றவர்களாகவும் இருப்பது வெளிப்படை.[2] அரசியல் வேறு தத்துவம் வேறு என்பது உண்மைதானா? நம் காலத்தின் மிகச் சிறந்த மார்க்சிய மெய்யியலாளரான அல்துஸ்சர் இதனை மறுக்கிறார். அவர் சொல்கிறார்:

> *"மார்க்சிய - லெனினிய அரசியல் பற்றிய சிறந்த புரிதல் எனக்குக் கைவந்த பிறகு (மார்க்சிய) மெய்யியல் குறித்துப் பற்றுக் கொள்ள ஆரம்பித்தேன்... இறுதியில் மார்க்ஸ், லெனின், கிராம்சி ஆகியோரின் மாபெரும் கோட்பாட்டைப் புரிந்து கொள்ளத் தொடங்கினேன். அது: மெய்யியல் என்பது அடிப்படையில் அரசியலே".[3]*

கோட்பாட்டுத் தளத்தில் (Theory) உலகப் பார்வை என்பது மெய்யியலாக வெளிப்படுகிறது எனச் சொல்லும் அல்துஸ்சர், கோட்பாட்டுத் தளத்தில் நடைபெறும் வர்க்கப் போராட்டமே மெய்யியல் என்பார். "அதனால்தான் மெய்யியல் என்பது ஒரு போராட்டமாக அதுவும் அடிப்படையில் ஒரு அரசியல் போராட்டமாக இருக்கிறது" என வலியுறுத்துவார். இந்திய மரபில் மீமாம்சம், நியாய வைசேடிகம் போன்றவற்றிற்கும் இதர வைதீகக் கருத்து முதலியவற்றிற்கும் நடைபெற்ற போராட்டங்கள் அரசியல் போராட்டங்களே; வர்க்கப் போராட்டங்களே.

தத்துவப் போராட்டத்தை அரசியல் போராட்டம் எனச் சொல்வது சரிதான் என்று கொண்டாலும் அரசியல் கோட்பாட்டுப் போராட்டத்தைத் தத்துவப் போராட்டமாகக் கொள்ள முடியுமா? என்கிற கேள்வி எழுவது இயல்பு. மார்க்சியத் தத்துவம் பரிணமித்த வரலாற்றை எழுதிய அல்துஸ்சரின் வாயிலாகவே இதற்கும் ஒரு பதிலை அடைய முனைவோம்.



படிப்பகம்

www.padippkam.com



தத்துவத்திற்கு ஒரு விதி உண்டு என்பார் அவர். அது: "மெய்யியல் அறிவியலுடன் இணைந்துள்ளது". மாபெரும் அறிவியல் கண்டுபிடிப்புகளினடியாகவே மெய்யியல் கட்டமைப்புகள் தோன்றுகின்றன. இந்த அடிப்படையில் மூன்று முக்கியமான கட்டங்களை உலக வரலாற்றில் சுட்ட முடியும்.

"தேல்சின் கணிதம் கண்டுபிடிப்புகளிலிருந்து பிளேட்டோவின் (கிரேக்க) மெய்யியல் உருவாகியது. கலிலியோவின் இயற்பியல் கண்டு பிடிப்புகளினடியாக டெஸ்கராட்சின் தத்துவப் பாரம்பரியம் தோன்றியது. வரலாறு பற்றிய அறிவியலை கார்ல் மார்க்ஸ் உருவாக்கிய பிறகு மார்க்சிய மெய்யியல் (இயங்கியல்) தோன்றியது". எனவே எல்லாக் கட்டங்களிலும் தத்துவம் அறிவியல் நிகழ்வுக்குப் பிந்தியே உருவாக்கப்படுகிறது. இந்த அறிவியல் என்பது இயற்கை அறிவியலாகவும் இருக்கலாம். சமூக அறிவியலாகவும் இருக்கலாம் என்பது அல்துஸ்சர் கருத்து.

சரி மார்க்சுக்கு வருவோம். தத்துவத்தை முதலில் கண்டுபிடித்துவிட்டுப் பிறகு இதர பணிகளைத் தொடங்கலாம் என்று அவர் இருக்கவில்லை. பாயர்பாக் பற்றிய மார்க்சின் புகழ் பெற்ற பதினோறாம் ஆய்வுக் குறிப்பு யாருக்கும் நினைவிருக்கும். "இதுவரையிலுமான மெய்யியலாளர்கள் உலகை விளக்கி வந்தனர். நமது பணி உலகை மாற்றியமைப்பதே" என்கிற பிரகடனத்தோடு (1845) மார்க்ஸ் அதுவரையிலுமான மெய்யியல்களிலிருந்து (காண்ட், பாயர்பாக், ஹெகல்) துண்டித்துக் கொண்டார். அதற்குப் பின் மெய்யியல் பற்றிய குறிப்புகள் எங்கல்சின் 'டூரிங் எதிர்ப்பு' நூலில்தான் (1877) காணக் கிடக்கிறது. இந்த நூலின் ஒரு சில அத்தியாயங்களில்தான் இயங்கியல் பற்றிய ஆய்வுரைகள் நமக்கு முதலில் கிடைக்கின்றன. இடைப்பட்ட முப்பதாண்டு காலம் மார்க்சிய வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டம். மார்க்சும் எங்கல்சும் ரத்தத்தை வேர்வையாக்கி கடுமையாக உழைத்து ஆய்வுகளையும் அரசியல் போராட்டங்களையும் நிகழ்த்திக் கொண்டிருந்த காலகட்டம். இந்தச் சுறுசுறுப்பு மிகுந்த நெடிய காலகட்டத்தில் இத்தகைய தத்துவ மௌனம் எவ்வாறு நிகழ்ந்தது? முப்பதாண்டுகளுக்குப் பின்பு திடீரென ஒரு நாள் இரவில் தத்துவக் கண்டுபிடிப்புகளை கண்டறிந்தார்களா? இந்தக் கேள்விகளை எழுப்பி அல்துஸ்சர் பதிலையும் அளிக்கிறார்.

இந்த இடைப்பட்ட காலத்தில் தத்துவ உருவாக்கத்திற்குத் தேவையான அறிவியல் ஆக்கத்திற்கு அடிப்படையான பொருளியல் மற்றும் அரசியல் நடைமுறைகளைக் கோட்பாட்டுத் தளத்தில் அவர்கள் மேற்கொண்டனர் என்கிறார் அல்துஸ்சர். இடைப்பட்ட காலத்திய நூல்கள் அனைத்தும் குறிப்பாக அவர்களின் மகத்தான ஆக்கமாகிய மூலதனம், கோதா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம் . . . . இவை எல்லாம் மெய்யியலுக்கு அப்பாற்பட்ட பணி அல்ல. இவற்றினூடாகவே மார்க்சிய மெய்யியல் உருவாகிறது. மெய்யியலை உருவாக்கிவிட்டு அரசியலைத் தொடங்குவோம் என அவர்கள் வாளாவிருக்கவில்லை. "நிகழ்வுகளுக்குப் பிந்தியே தத்துவங்கள் உருவாகின்றன". தத்துவத்திற்குப் பிறகு நிகழ்வுகள் உருவாகும் என எதிர்பார்ப்பது கருத்து முதலியல் பார்வை.

இந்தியத் தத்துவத்தை வியக்கும் மூளைகள் இப்படித்தான் சிந்திக்க முடியும். ஏனெனில் இங்கே சமண, பௌத்த மற்றும் பொருள் முதலியல் தத்துவங்களின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்திய மெய்யியல்



படிப்பகம்

www.padippkam.com



என்பது மதத்துடனேயே தன்னை இணைத்துக் கொண்டது. இங்கே Philosophyயும் Theologyயும் ஒன்றாகவே இருந்தது. மதவியலிலிருந்து துண்டித்துக் கொண்டு அறிவியலுடன் தன்னைப் பிணைத்துக் கொண்டதன் விளைவாகவே அய்ரோப்பியத் தத்துவம் 16ம் நூற்றாண்டுக்குப் பின் டெஸ்கரட்ஸ், கான்ட், ஹெகல், மார்க்ஸ், நீட்ஷே, ஹீஸ்சரல், ஃபூக்கோ, தெரிதா . . . என மாபெரும் வீச்சுக்களைச் சாதித்தது. இந்தியத் தத்துவமோ சங்கர வேதாந்தத்திலும் சைவ சித்தாந்தத்திலும் அழுகியது.

இத்தகைய புரிதலோடுதான் இன்றைய தலித் அரசியல், பண்பாட்டுச் செயல்பாடுகளை நாம் அணுக வேண்டும். அழுகிப் போன இந்த இந்தியத் தத்துவ மரபு இங்கே மார்க்சியத்திலும் கூடப் புரையோடிப் போய்க் கிடப்பதற்கு நம்மூர் ஞானி முதல் நம்பூதிரி பாட், டாஸ்கே எனப் பலரையும் எடுத்துக் காட்ட முடியும். மார்க்ஸ் 1845ல் துண்டித்துக் கொண்டது போல இந்த அழுகல் மரபிலிருந்து நாம் நமது செயற்பாடுகளைக் கத்திரித்துக் கொண்டு தொடங்குகிறோம். மார்க்சிய இயங்கியல், பின் நவீனத்துவ வெளிச்சம் ஆகியவற்றில் பணியைத் தொடங்கும் நாம் இத்தகைய செயற்பாடு களினூடாகவே நமக்கான கோட்பாடுகளைக் கட்டமைப்போம். நமது அரசியல் கோட்பாட்டுப் பணியே நமது மெய்யியலுக்கான பணியாகவும் இருக்கும்.

நம்மீது இவர்கள் தொடுக்கும் இரண்டாவது தாக்குதல் நமது பார்வை குறுகியதாக உள்ளது. விரிந்ததாக இல்லை. பெண்ணியம், தலித்தியம் எனப் பேசும்போது சமூகத்தின் ஒரு பிரிவின் நலனை மட்டுமே இவை கருத்தில் கொள்கின்றன. எனவே ஒட்டுமொத்தமான சமூகத்திற்குமான வழிகாட்டல்களாக இவை இருக்க முடியாது என்பது இவர்களின் வாதம். இந்தக் கருத்தையும் நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்.

எல்லா காலங்களுக்கும் எல்லா இடங்களுக்கும் எல்லா மக்களுக்குமான ஒற்றை விடுதலை சாத்தியம் என்கிற புரிதலின் விளைவாக இந்தக் கேள்வி நம்மை நோக்கி எழுப்பப்படுகிறது. உட் பிரிவுகள், தனித்துவங்கள் எல்லாவற்றையும் தாண்டி ஒட்டு மொத்த முழுமைக்கான பொது விதிகள் உண்டு என்கிற கருத்து போஸ்ட்மாடர்னிச உலகில் தகர்த்து நொறுக்கப்பட்டு விட்டது. உலக முழுமைக்குமான பொது விதிகள், அடிப்படை உண்மைகள் உண்டு என்கிற கருத்தை நவீன சிந்தனைகள் மறுக்கின்றன. மொழி பற்றிய புதிய புரிதல்களின் அடிப்படையில் இந்தச் சிந்தனைகள் உருவாகின்றன. அவற்றை இப்படிச் சுருக்கி தொடுக்கலாம்.

ஒரு பொருளைப் பற்றிய அறிவை மனிதன் மொழி மூலமே அடைகிறான். இந்த மொழி என்பது பொருளை அப்படியே எதிரொலிப்பதோ பிரதிநிதிப்படுத்துவதோ கிடையாது. "மரம்" என்கிற ஒலி வடிவத்திற்கும் மரம் என்னும் பொருளுக்கும் இடையிலான உறவு இடுகுறித் தன்மையானது என்ற தர்க்கபூர்வமான அடிப்படையிலோ சாராம்சமான தொடர்புகளின் விளைவாகவோ 'மரம்' என்கிற ஒலிக்குறி தேர்வு செய்யப்படவில்லை. ஆதிச் சமூகம் 'மரம்' என்பதற்குப் பதிலாக 'சிரம்' என்கிற சொல்லை மரத்திற்குப் பயன்படுத்தியிருந்தால் அதுவே நிலைத்திருக்கும். எனவே பொருளின் 'அர்த்தம்', 'சாராம்சம்', 'அடிப்படை' என்பதெல்லாம் மொழி



படிப்பகம்

www.padippkam.com



ரூபமான கருத்தாக்கங்களே. ஆனால் 'புறவியமான எதார்த்தம்', 'உள்ளார்ந்த இயல்பு' போன்ற தத்துவார்த்தக் கருத்தினங்களை நாம் வேறு மாதிரியாகவே இதுவரை புரிந்து கொண்டு வந்திருக்கிறோம். இவற்றை மொழியைக் கடந்து விசயங்களாகவும் இதனை உள்ளபடியே கண்டுபிடித்துச் சொல்லிவிட முடியும் எனவும் அந்த "உண்மை" எல்லாக் காலத்திற்கும் எல்லா இடத்திற்கும் எல்லா மக்களுக்கும் ஒன்றாகவே இருக்க முடியும் என்றும் நம்பினோம்.

ஆனால் நமக்குக் கிடைத்துள்ள மொழி மூலம் புறவிய எதார்த்தங்களை வெவ்வேறு முறையில் வாசிக்க முடியுமே ஒழிய அவற்றின் அடிப்படைகளையும் சாராம்சங்களையும் கண்டுபிடித்துச் சொல்லி விட முடியாது. எனவே, வாசிப்பவர்களைப் பொறுத்து எதார்த்தம் பற்றிய வெவ்வேறு கருத்தாக்கங்கள் உண்டேயொழிய ஒற்றைக் கருத்தாக்கம் இருக்க முடியாது. இது உலகம் மற்றும் சமூகம் குறித்த பன்மைப் பார்வைக்கு இட்டுச் செல்கின்றது. இதனால் முழுமை என்கிற கருத்தாக்கமும் மறுக்கப்படுகிறது. ஏனெனில் முழுமை என்கிற போது ஒற்றை என்கிற பொருள் வந்துவிடுகின்றது. எனவே தொடர்ச்சி, முழுமை என்பதைக் காட்டிலும், தொடர்ச்சியின்மை, சிதைவு ஆகியவை முதன்மை பெறுகின்றன. எனவே, மனிதன் என்பவனும்கூட ஒற்றைத் தன்னிலையாக உருப் பெறுவதில்லை. வர்க்கம், சாதி, பால், இனம், மொழி, நாடு, பதவி . . . என்கிற அம்சங்களினடிப்படையில் ஒவ்வொரு மனிதனுக் குள்ளும் பல்வேறு தன்னிலைகள் இயங்குகின்றன.

> பன்மைத் தன்மையுடனான ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கங்கள் அனைத்தும் தங்களின் தனித்துவமான அடையாளங்களை இழந்து விடாமல் தக்கவைத்துக் கொண்டே ஏகாதிபத்தியம், இந்துத்துவம், பாசிசம், ஆணாதிக்கம் என்கிற பொது எதிரிகளை இணைந்து எதிர்க்கும். இத்தகைய இணைவை ஒரு "வானவிற் கூட்டணி" எனலாம். ஏழு வண்ணங்களும் தத்தம் அடையாளங்களை இழக்காமலேயே ஒன்றிணைந்து நிற்பது போல இந்த அரசியற் கூட்டணி அமையும்.

எனவே, இந்த அடிப்படையில் சிந்திக்கும் போது விடுதலைக்கான ஒற்றைத் திட்டம் என்பது எல்லா மக்களுக்கும் பொதுவாகச் சாத்தியமில்லை என்பதோடு ஒவ்வொரு மனிதனுக்குமே கூட ஒற்றைத் திட்டம் சாத்தியமில்லை என்பது விளங்கும். வர்க்க ரீதியான விடுதலை பெற்றாலும் கூட சாதி ரீதியான விடுதலை இல்லாமலிருக்கலாம். இரண்டுமே கிடைத்தாலும் கூட பாலியல் விடுதலை கிடைக்காமல் இருக்கலாம். எனவே மொழியின் பெயராலோ, இனத்தின் பெயராலோ, வர்க்கத்தின் பெயராலோ, சாதியின் பெயராலோ கிடைக்கும் விடுதலை என்பது முழுமையான விடுதலையாக, இருக்க முடியாது. ஏனெனில் முழுமையான ஒற்றை விடுதலை என்றே ஒன்று இருக்க முடியாது. எனவே "விடுதலைக்கான திட்டம்" என்பதைக் காட்டிலும் "விடுதலைகளுக்கான திட்டங்கள்" என்பதே பொருத்தமாக இருக்கும்.

எனவே விடுதலைக்கான எந்த ஒரு திட்டமும் தன்னுடையதே மொத்த மானுடத்திற்குமான விடுதலைத் திட்டம் என்று சொன்னால் அதைவிடப் பெரிய ஏமாற்று எதுவும் இருக்க முடியாது.



படிப்பகம்

www.padippkam.com



இது மார்க்சியத்திற்கும் பொருந்தும், தேசிய இன வாதத்திற்கும் பொருந்தும். மார்க்சியம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கான திட்டம். தொழிலாளி வர்க்கம் என்பதிலிருந்து விவசாய வர்க்கத்திற்கும் இதனை விரிவு செய்ய முயன்றார் மாவோ. இது தொழிலாளி வர்க்கத்தின் நலனைப் பின்னுக்குத் தள்ளியது என்கிற விமர்சனமும் மாவோ மீது உண்டு. இவை எதுவுமே பெண்ணியம், சூழலியம் முதலியவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்கிற விமர்சனத்தையும் நாம் அறிவோம். எல்லாத் தத்துவங்களுக்கும், வழிகாட்டல்களுக்கும் இது பொருந்தும்.

எனவே நமது அரசியல் குறித்த நமது விளக்கங்களெல்லாம் இது குறித்த எல்லாவிதமான அய்யங்களையும் கேள்விகளையும் தெளிவுபடுத்தும் முயற்சி அல்ல. அப்படித் தெளிவு படுத்திவிடவும் இயலாது. பல்வேறு வழிமுறைகள் மத்தியில் நமது தேர்வைப் புரியவைக்கும் முயற்சியே நாம் கொடுக்கும் விளக்கங்கள். எனவே நாம் ஒப்பீட்டு ரீதியான நியாயத்தைத்தான் வழங்க முடியுமே யொழிய முழுமையான நியாயத்தைச் சொல்ல முடியாது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் ரிச்சர்ட் ரோர்டி கூறியது போல நமது அரசியல் தேர்வுகளுக்காக நாம் மன்னிப்புக் கேட்க முடியுமே யொழிய அவற்றை நியாயப்படுத்த முடியாது.[4] யாரேனும் தனது தேர்வு, எல்லாருக்குமான எல்லாவற்றிற்குமான தேர்வு என்று சொன்னால் அது பச்சை அயோக்கியத்தனமேயன்றி வேறல்ல. உலக வரலாறும் நமக்கு இதனை உணர்த்திவிட்டது.

இன்னொன்றையும் நாம் யோசிக்க வேண்டும். ஒருவகைப் பார்வை என்பது முதலாளியக் கட்டத்தின் கருத்தாக்கம். முதலாளியம் மட்டுமே தோன்றுகிற போதே உலகம் தழுவியதாகத் தோன்றுகிறது. இந்த நோக்கில் பார்த்தால் விரிந்த உலகப் பார்வை, ஒருவகைப் பார்வை என்பனவெல்லாம் 'காட்', 'டங்கல்' யுகத்திற்குப் பொருத்தமான கருத்தாக்கங்கள். எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் பிரதமர் நரசிம்மராவ் பேசியது உங்களுக்கு நினைவிருக்கலாம். பண்டைத் தமிழர்களுக்கு விரிந்த உலகப் பார்வை இருந்தது. எனவே திறந்த பொருளாதாரம் விரிந்த சந்தை ஆகிய சூழல்களில் தமிழர்கள் எளிதில் பொருந்திப்போக முடியும் என்றார் அவர்.

இப்படி எல்லாம் சொல்வது விரத்திக்கும் செயலின்மைக்கும் இட்டுச் செல்வதாகிவிடாது. ஒருமையின்மை, இருமைத்தன்மை ஆகியவற்றையே சாதகமான அம்சங்களாகக் கொண்டு நமது அரசியல் செயல்பாடுள் உருவாக்கப்பட வேண்டும். முழுமை என்கிற பெயரில் இங்கே ஒடுக்கப்பட்ட மக்களாகிய நமது தனித்துவங்கள் இதுவரை மறைக்கப்பட்டு வந்தன. எனவே நமது அடையாளங்களை நாம் நிறுவிக்கொள்ள, நமது இடத்தை நாம் கோரிப் பெற இதுவே சரியான தருணம். ஒருமை என்பதற்குப் பதிலாகப் பன்மை, விரிந்த உலகம் என்பதற்குப் பதிலாக எண்ணற்ற தனி உலகங்களின் சமத்துவம், தூய்மை என்பதற்குப் பதிலாகக் கலப்பு, ஒற்றைத் திட்டம் என்பதற்குப் பதிலாக பெண்கள், கருப்பர்கள், தலித்கள், சூழலியலாளர்கள், அகதிகள், ஒடுக்கப்பட்டவர்கள், வேலையற்றவர்கள், பாட்டாளிகள், விவசாயிகள் ..... எனப் பலதரப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பன்மைத் திட்டங்கள் என்பதாக இன்றைய முழக்கங்கள் அமையும். இத்தகைய பன்மைத் தன்மையுடனான ஒடுக்கப்பட்ட மக்களின் இயக்கங்கள் அனைத்தும் தங்களின் தனித்துவமான அடையாளங்களை இழந்துவிடாமல் தக்க வைத்துக் கொண்டே ஏகாதிபத்தியம், இந்துத்துவம்,



படிப்பகம்

www.padippkam.com



பாசிசம், ஆணாதிக்கம் என்கிற பொது எதிரிகளை இணைந்து எதிர்க்கும். இத்தகைய இணைவை ஒரு "வானவிற் கூட்டணி" எனலாம். ஏழு வண்ணங்களும் தத்தம் அடையாளங்களை இழக்காமலேயே ஒன்றிணைந்து நிற்பது போல இந்த அரசியற் கூட்டணி அமையும்.

பெண்கள் இயல்பிலேயே கட்டுடைப்பாளர்களாக (deconstructionists) உள்ளனர் என்பர். தலித்துகள் இயல்பிலேயே இத்தகைய நவீன புரிதலுடையவர்களாக இருக்கின்றனர் எனச் சொல்ல முடியும்.சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் அரும்பிய தலித் அரசியல் செயல்பாடுகளினடியாக இதை நாம் நிறுவ முடியும்.

தமிழ் நாட்டில் தலித் அரசியல் முன்னோடிகளில் ஒருவராக இரட்டைமலை சீனிவாசன் அவர்களைச் சொல்லலாம். வட்ட மேசை மாநாட்டில் அம்பேத்கர் அவர்களுடன் கலந்து கொண்டவர் அவர். சட்ட மேலவை உறுப்பினராக் இருந்த போது பொதுச் சாலை, கிணறு, அலுவலகம், குளம் போன்ற இடங்களில் தீண்டாமை கடைப்பிடிப்பது குற்றம் எனவும் அதற்கு நூறு ரூபாய் அபராதம் விதிக்கலாம் எனவும் முதன் முதலில் (1920) சட்டம் இயற்றுவதற்குக் காரணமாயிருந்தவர் அவர். அவரது சுய சரிதை ஒன்று கிடைக்கிறது. நினைவுச் சிதறல்களாக அவரது வாழ்வும் அரசியல் செயல்பாடுகளும் அதில் விவரிக்கப்பட்டுள்ளன.

> *"நான் செங்கல்பட்டு கிராமங்களிலொன்றில் 1860ம் ஆண்டு பிறந்தேன். கோயம்புத்தூர் சர்வகலா சாலையில் நான் வாசித்த போது சுமார் 400 பிள்ளைகளில் 10 பேர் தவிர மற்றவர்கள் பிராமணர். சாதி கோட்பாடுகள் மிகக் கடினமாக கவனிக்கப்பட்டன. பிள்ளைகளிடம் சினேகித்தால் சாதி, குடும்பம், இருப்பிடம் முதலானவைகளைத் தெரிந்து கொண்டால் அவர்கள் தாழ்வாக என்னை நடத்துவார்கள் என்று பயந்து பள்ளிக்கு வெளியே எங்கேனும் வாசித்துக் கொண்டிருந்து பள்ளி ஆரம்ப மணி அடித்த பிறகு வகுப்புக்குப் போவேன். வகுப்பு கலையும் போது என்னை மாணாக்கர்கள் எட்டாதபடி வீட்டுக்கு சடுகன விரைந்து செல்வேன். பிள்ளைகளோடு விளையாடக் கூடாமையான கொடுமையை நினைத்து மனங்கலங்கி எண்ணி எண்ணி இந்த இறுக்கத்தை எப்படி மேற் கொள்ளுவதென்று யோசிப்பேன்"[5]*

சுமார் முப்பது வயதில் அவர் தலித் அரசியல் பணிகளைத் தொடங்கிவிடுகின்றார். அப்போது உயர் அதிகாரிகளுக்கான அய்சிஎஸ். தேர்வு லண்டனில் மட்டும் நடைபெற்று வந்தது. இதனால் இந்தியர் அதில் பங்கு பெறுவது இயலாததாய் இருந்தது. எனவே லண்டனில் தேர்வு நடத்தும் போதே சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற முக்கிய இந்திய நகரங்களிலும் தேர்வு நடத்த வேண்டும் என்பது அன்றைய இந்தியப் பெரும்பான்மை மக்களின் அரசியல் கோரிக்கையாக இருந்தது. காங்கிரசும் மற்றவர்களும் முன் வைத்த இக்கோரிக்கையை பிரிட்டிஷ் அரசும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலை. இந்தச் சூழலில் இரட்டை மலை சீனிவாசன் அவர்கள் 1893 டிசம்பர் 23ம் தேதியன்று சென்னை வெசிலியன் மிஷன் கல்லூரியில் பறையர் மகா ஜன சபையின் சார்பாக ஒரு கூட்டத்தைக்



படிப்பகம்

www.padippkam.com



கூட்டி 3412 பேர் கையெழுத்திட்ட 112 அடி நீளமுள்ள ஒரு மனுவை ஆங்கில அரசுக்கும் சமர்ப்பித்தார். சிவில் சர்வீஸ் கமிஷன் தேர்வை லண்டனில் மட்டுமே நடத்த வேண்டும். இந்திய நகரங்களில் நடத்தத் தேவையில்லை என்பது தாழ்த்தப்பட்ட மக்களின் வேண்டுகோள்.

இது எப்படிச் சரியாக இருக்க முடியும்? காங்கிரசின் கோரிக்கைதானே நியாயமானது? எல்லா மக்களுக்குமான பொதுக் கோரிக்கையாகத் தானே அது இருக்கிறது? என்கிற கேள்விகள் நமக்கு எழுகின்றன.

பறையர் மகா சபையினர் என்ன காரணம் சொல்லி மனுவைக் கொடுத்தார்கள்? "அய்சி.எஸ் தேர்வினை இந்தியாவில் நடத்தினால் பிராமணர்கள் மட்டுமே தேர்வு பெற்று உயர் பதவிகளைப் பிடிக்க நேரிடும்". தன்னுடன் படித்த 400 மாணவர்களில் 390 பேர் பார்ப்பனர்கள் என்று இரட்டைமலையார் குறிப்பிட்டது நமது நினைவுக்கு வருகிறது. எனவே இந்திய நகரங்களில் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்பது அன்றைய சூழலில் உண்மையில் எல்லா மக்களுக்குமான கோரிக்கை அல்ல. பார்ப்பனர்களின் கோரிக்கை பொதுக் கோரிக்கையாக அன்று மாற்றப்பட்டிருந்தது. தாழ்த்தப்பட்டவர்கள் அந்தக் கோரிக்கையின் பின் எப்படி அணி திரள முடியும்? பள்ளிக் கூடங்கள் எல்லாம் அக்கிரகாரங்களில் அமைந்திருந்தாலும் ஆசிரியர்கள் எல்லாம் பார்ப்பனர்களாக இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்கள் அன்று பள்ளிகளில் படிக்க இயலவில்லை என அரசு அறிக்கைகள் அன்றைய சூழலைப் படம் பிடித்துக் காட்டியுள்ளன. அந்த நிலைமையில் பள்ளிகளை அக்கிரகாரங்களிலிருந்து எடுக்க வேண்டும், இட ஒதுக்கீடு வேண்டும், உதவித் தொகை வேண்டும் என்பதுதான் அன்று தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியலாக இருக்க முடியும். ஒரு இருபது முப்பதாண்டுகள் கழித்து ஒரு வேளை தாழ்த்தப்பட்டவர்களின் கோரிக்கை மாறலாம். மாறாக அன்றே பார்ப்பனர்கள் பின் தாழ்த்தப்பட்டவர்கள் அணி திரண்டால் என்ன ஆகும்? காலங்காலமாக யார் அவர்களை ஒடுக்கினார்களோ அவர்கள் மீண்டும் அதிகாரத்தில் வர ஏதுவாகும். ஆங்கில ஆட்சியில் கிடைத்த கொஞ்ச நஞ்ச உரிமைகளும் பறிபோகும். இந்தியச் சாதியச் சூழலையும், தீண்டாமைக் கொடுமையையும் உணர்ந்து கொண்டால்தான் இப்படிப் பொது அரசியலிலிருந்து தலித் அரசியல் சமயங்களில் வேறுபட்டு நிற்க வேண்டிய அவசியம் புரியும்.

1929ல் இந்திய மக்களுக்கு என்னென்ன உரிமைகள் வழங்கவேண்டும் என ஆராய 'இந்திய மத்திய குழு' ஒன்றை பிரிட்டிஷ் அரசு நியமித்தது. அப்போது தலித் அரசியற் களத்தில் இருந்தவர் எம்சிராஜா. தாழ்த்தப்பட்டவர்களின் சார்பாக அந்தக் குழுவிற்கு அவர் ஒரு மனுவை அளித்தார். தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அது வெளியிடப்பட்டது. அதில் முன் வைக்கப்பட்ட முக்கியமான கோரிக்கை தாழ்த்தப்பட்டவர்கள் தனியாக சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் உரிமை. பொது அரசியல் களத்தில் இதற்கு கடும் எதிர்ப்பு இருந்தது. காங்கிரசும் மற்றவர்களும் எதிர்த்தனர். இது பற்றி அம் மனுவில் குறிப்பிடப்படுவது.

"சிலர் இதைப்பற்றி ஆட்சேபனை செய்வது சரியாய் இல்லை. இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டால் தாழ்ந்த வகுப்பார் ஒரு பிரிவினராகவும் மற்றவர்கள் வேறொரு



படிப்பகம்

www.padippkam.com



தொன்மையானது அல்ல, மொழிப்பற்று வெறியாக மாறக்கூடாது, இன உணர்வு கூடாது, சாதி மதம் இவை சோஷலிச சமூகத்தில் அற்றுப் போகும். தொன்மையான தமிழ் சமூகமும் இந்த வேறுபாடுகளை உள்ளடக்கியதுதான் என்ற முடிவுக்கு மார்க்சியர் வந்தனர் என்று அதன் பாதகமான செயல்பாடு விளக்கப்படுகின்றது. அதே சமயத்தில் முத்தையா, வானமாமலை, கைலாசபதி, சிவத்தம்பி, கேசவன் இவர்களின் ஆக்கப்பூர்வமான செயல்பாடும் விளக்கப்படுகிறது. சோவியத்யூனியனின் தகர்வுக்கு முன்பாகவே, சோஷலிச யதார்த்தவாதத்தின் பாசிச போக்கை முறியடிக்க மார்க்சியலிலிருந்தே புதிய தலைமுறை "இலக்கு" தோன்றியதையும் குறிப்பிடுகின்றார்.

பாதகமான செயல்பாடுகளை கீழ்க்கண்டவாறு பட்டியலிடலாம்.

1. தமிழ் தேசியத்தை மறுத்தது.

2. சமூக முரண்களை சங்க இலக்கியம், காப்பியங்கள், பக்தி இலக்கியம் போன்றவை ஓரளவு படம் பிடித்தன என்ற உண்மையை மறுத்து அவற்றை ரசனைக்கான இலக்கியம், வணிகக்காப்பியம், மற்றும் மூடநம்பிக்கைகள் என்று புறந்தள்ளியது.

3. அறிவியல் ஆய்வு எனத் தமிழரின் தொண்டை நாகரீகத்தை மறுத்தது. தற்கால நாவல் இலக்கியத்தில் சமூகப் பின்னணிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து டி.செல்வராஜ், சின்னப்ப பாரதி, பொன்னீலன், கணேசலிங்கம், டேனியல், நீலபத்மநாபன், ராஜம் கிருஷ்ணன், சு. சமுத்திரம் போன்றோரைத் தூக்கி வைத்தது. அகவயப்படுதலான எழுத்துக்களை முன்வைத்த ஜெயகாந்தன் (ஒருசில படைப்புகள்) தி. ஜானகிராமன், இந்திரா பார்த்தசாரதி (குருதிப்புனல்) ஆதவன், அசோகமித்திரன், சா. கந்தசாமி, சுந்தர ராமசாமி இவர்களைத் தண்டித்தது.

மார்க்சியத்தின் நெகிழ்வுப் போக்கால் ஆனால் இந்த பாதகமானச் செயல்பாடுகளை, சரி செய்ய முடியும். எவ்வாறு?

தேசிய இனத்தின் சுயநிர்ணயம் என்ற மார்க்சிய கொள்கை மூலம் தமிழகச் சூழலில் தமிழினம் பற்றியும், தமிழர் நாகரிகம் பற்றியும் புரிந்துகொள்ள முடியும். தமிழ்த்தேசியம் என்பதை மார்க்சியம் வரவேற்கிறது.

சங்ககால ஆய்வுக்கு வரலாற்றுக்கு முற்பட்ட புராதனப் பொது உடைமைச் சமூகம் என்ற கருத்தாக்கத்தைப் பயன்படுத்தலாம். சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகியவற்றை அவை தோன்றிய சமூகசூழலை முன் வைத்து தனி உடைமை, அரசு அதிகாரம் என்ற போக்குக்கு எதிராக, மக்கள் சார்பு கொண்ட சமூக அறம் பற்றி புலவர்கள் பாடியதாகப் புரிந்துகொள்ளமுடியும். அந்நியமாதல் என்ற கோட்பாடு மூலம் பக்தி இலக்கியத்தை போற்ற முடியும்.

நிகழ்காலச் சமூகத்தேவை, வரலாற்று ஆய்வின்போது தனது பாதிப்பைச் செலுத்தும் என்பதை அறிவியல் பார்வை மறுக்கக்கூடாது. இன உணர்வும், மொழி உணர்வும் காலத்தின் தேவைகளாக மாறும் போது தமிழரின் தொன்மை நாகரிகம் இவை மேன்மைக்குரியதாகப் பேசப்படுவதில் தவறேதுமில்லை.

தற்கால நாவல் இலக்கியத்தில் உதாரணமாக ஜெயகாந்தனின் "சில நேரங்களில் சில மனிதர்கள்" நாவலில் முதலாளி தன்க்குள் சிதைந்திருக்கிறான். எனவே ஆசிரியரின் முதலாளிச் சார்பு (?) தாக்கப்பட வேண்டியதில்லை. அந்நியமாதல், இருத்தலியல் கோட்பாடுகளை மார்க்சியத்திற்கு வெளியே



படிப்பகம்

www.padippkam.com



தள்ளிவிடாமல், உள்ளே வைத்துப் பார்த்தோமனால், ஜானகிராமனின் பாலுறவுச்சிக்கலை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். இந்திரா பார்த்தசாரதியின் "குருதிப்புனல்" மீது கடுமையான தாக்குதல் தவிர்க்கப்பட்டு கீழ் வெண்மணிச் சம்பவத்தை வைத்து பிறிதொரு நாவல் எழுதப்பட்டிருக்கும். அசோககமித்திரன், சா. கந்தசாமி போன்றோர் மார்க்சியத்திற்கு எதிரானவர் அல்லர் என்பதைக் கண்டிருக்கமுடியும்.

இவ்வாறு எழுதும் ஞானியின் நோக்கங்கள் திட்டவட்டமானவை. மார்க்சிய நெறி, வரலாற்றை, வாழ்க்கையை, ஆன்மீகத்தை, சமூகத்தை, பொருளாதாரத்தை, அறிவியலை—எல்லாவற்றையும் விளக்க வல்லது என்று நிறுவுவது. மார்க்சியம் அந்நியமாதல், இருத்தலியல் கூறுகளை உள்ளடக்கியது என்பதால் அதன் உண்மையான அர்த்தத்தில், புதிய ஒளியில் நாம் முன்பு பார்த்தவற்றை முற்றிலும் வேறாகக் காணமுடியும் என்பதை விளக்குவது.

தண்டிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பதன் மூலம் அவர்கள் புரிந்துகொள்ளப்படக் கூடியவர்கள் மட்டுமின்றி சிறந்த இலக்கியக் கர்த்தாக்கள் என்று நிறுவுவது. அவர்களின் பங்களிப்பு இலக்கிய உலகிற்கு இன்றியமையாதது என்று சொல்வதன் மூலம் இலக்கிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது.

அடுத்த கட்டுரையான, "எதார்த்தவாதத்திற்கு என்ன நேர்ந்தது" என்பதில் அமைப்பியல் வாதம் எதார்த்தவாதத்தைத் தீண்டத்தகாததாக்கியது என்பதைக் கூறும் ஞானி எதார்த்தவாதம் என்பதை ஒரு குறிப்பிட்ட காலத்து சமூகநிலை என்று அர்த்தங்காணாமல் எதார்த்தவாதம் என்பது இலக்கியக்கோட்பாடு என்ற ரீதியில் சாசுவதத்தன்மையுள்ளது மாறிவரும் நவீனச்சூழலையும் கூட விளக்கும் என்று கூறுகிறார். ஆனால் எதார்த்தவாதம் என்று கூறிக்கொண்டு படைப்பாளிகள் முதலாளித்துவத்தில் கட்டுண்டிருப்பதாகவும் கூறுகிறார்.

நவீனத்துவத்தை நோக்கி சில கேள்விகள் என்று சிலவற்றை முன் வைக்கிறார்.

எதார்த்தவாதத்தை மறுக்கும் நவீனத்துவவாதிகள் முதலாளியத்தை மறுக்கிறார்களா, முதலாளியத்தை மறுக்குமிடத்தில் அவர்கள் நிலை நிறுத்துவதென்ன, சோஷலிசமா? இக்கேள்விகளை எழுப்பாத நவீனத்துவம், பொறுக்கித்தனமான முதலாளித்துவத்தை நிலைநிறுத்தும் வாய்ப்புண்டு என்கிறார்.

நவீனத்துவம் என்பது என்ன என்பதை படைப் புக்களின் உதாரணங்கள் வழி யாக எதார்த்த வாதத்தை மறுக்கும் செயலாகக் காண்கி றாரேயன்றி நவீனத்து வத்தை எங்கேயும் விளக்க முற்படவில்லை. "தமிழில் இன்று திறனாய்வு - சில கோட் பாட்டுச் சிக்கல்கள்" என்னும் கட்டுரையில், அமைப்பு மைய வாதத்தை, பின் அமைப் பியல் வாதம் அழித் ததும், நவீனத்துவத்தை பின் நவீனத்துவம் அழித்தது மாக புதிய திறனாய்வுப் போக் குகள் அறிமுகப்படுத் தும் போதே தமக்குள் சில சிக்கல்களைக் கொண்

●●

**தமிழ்த் தேசியவாதத்திற்கும் பார்ப்பனிய எதிர்ப்புவாதத் திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை மறுப்பது அல் லது அதிக முக்கியத்துவம் தராதது பெரிய முரண்.**

●●



படிப்பகம்

www.padippkam.com



டுள்ளன என ஆரம்பித்து அமைப்பியல் வாதத்தின் ஆக்கக்கூறுகளை வரிசைப்படுத்துகிறார். திறனாய்வில் ஈடுபட்டுவந்த தமிழ்க் கல்வியாளர்கள் அமைப்பு மையவாத அணுகுமுறையை அனுசரிக்க மறந்து பகுத்தறிவுவாதக் கருத்துக்களோடு தம் சிந்தனையை முடக்கிக் கொண்டதாகவும், கா.நசு. போன்ற இலக்கியவியலாளர்களை அமைப்பியல் அணுகுமுறை சாதிப்பெயர் கொண்டு தாக்கியதில் அவர்கள் அதிர்ச்சிக்குள்ளாயினர் என்றும், பெண்ணியம், தலித்தியம், அமைப்பியல் இவற்றை அனுமதிக்காத மார்க்சியர் இறுகிப்போயிருந்தனர் என்றும் அமைப்புமைய வாதத்தின் தாக்கத்தை ஸ்லாகித்து எழுதி,

அமைப்பு மைய வாதம் வைக்கும் "படைப்பு" என்பதற்கான விளக்கத்தை தான் மறுப்பதாக எழுதுகிறார். மனிதனின் உள்ளுணர்வு, நீர்ம நிலையிலான இயக்கம் சரியாக விளக்கப்படவில்லை என்பதே மறுப்புக்கான காரணம் என்றும் அமைப்பு மைய வாதம் முன்வைக்கும் தலித்தியத்திற்கு உலகப்பார்வை இல்லை என்றும் கூறி,

ஆதிக்கம் தேடாமல், ஆதிக்கத்தைப் படிப்படியாகத் தகர்க்கும் முறையில் படைப்புக்கள் இருக்க வேண்டும். சமதர்மம் படைப்பின் இலக்கு அதுவேதான் திறனாய்வின் இலக்கும். முதலாளியத்தைக் களைந்து - அமைப்பியல், தலித்தியம், பெண்ணியம் போன்ற விரிவான அணுகுமுறைகளை உள்ளடக்கிய மார்க்சிய அணுகுமுறைதான் நமது தமிழிலக்கியத் திறனாய்வு அணுகுமுறையாக இருக்க முடியும் என்ற முடிவுக்கு வருகிறார்.

இந்த ஆறு கட்டுரைகளுக்குப் பிறகு, பாரதிதாசன் படைப்பில் தமிழ்க்காப்பியங்கள் எப்படி மாற்றம் கொண்டன என ஆராய்ந்து பாரதிதாசனின் பகுத்தறிவும், அது விரட்டிய பக்தி உணர்வு ஆழ்மனத்தில் உறைந்திருப்பதாக, உணர்ந்து விளக்கியிருக்கிறார். மௌனிக்கு, சிவத்தம்பி உவந்தளித்த வாழ்த்துப்பாவை உரக்கபாடி புற உலகம் பற்றி அதிக அக்கறை காட்டாதது ஞானிக்கே உரித்த பாணியில் நியாயப்படுத்தப்படுகிறது.

பிரமிளை ஒரு மார்க்சியராக இருந்து எதிர்கொள்ளும் ஞானி, அவரைப் படைப்பிலக்கியத்துள் வைத்துப் பார்க்கவேண்டுமெனில் "படைப்பிலக்கியம் பற்றிய மார்க்சியத்தின் கோட்பாடு என எதையும் குறிப்பாகச் சொல்லமுடியுமா" என அய்யறவு கொள்ளுகிறார்.

சுந்தரராமசாமி வரித்துக்கொண்ட இலக்கியச் சூழலில் உலக இயக்கம் தெரியாத கலைஞனை, தரிசனங்களிலிருந்து கீழே இறங்க முடியாத தவிப்புக்குள்ளான படைப்பாளியை "ஜே ஜே சில குறிப்புகள்" மூலம் காணுவதாகக் கூறுகிறார்.

ஜெயகாந்தனின் "சுந்தரகாண்டம்" விமர்சனத்துக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இறுதிக் கட்டுரையான "எண்பதுகளில் தமிழ் நாவல்கள் ஒருவாசகனின் அனுபவத்தில்" என்பதில் புனைவு என்பது இலக்கியத்தின் முக்கியப் பண்பு, புனைவு பொய்யாக இருக்கக் கூடாது. உண்மையை மேலும் ஆழத்தோடு சொல்வதாகப் புனைவு இருக்க வேண்டும். விமர்சனங்கள் தத்துவத்தேடல்கள், வெளிப்படையான விவாதங்கள் ஆகியவை. தீவிரமாகவும் உண்மையாகவும் தொடர்ந்தால் நல்ல படைப்புகள் தமிழுக்கு கிடைக்கும். அதற்கான ஆதாரம் தற்போது எதுவும் தெரியவில்லை என முடிக்கின்றார்.

புத்தக வாசிப்பின் சுருக்கம் முன்வைக்கப்பட்டது இது வரையில். இனி இப்புத்தகத்தின் நோக்கம், இவற்றில் பொதிந்துள்ள முரண்கள் பற்றி;



படிப்பகம்

www.padippkam.com



- தமிழ்த்தேசியம் உடனடித்தேவை, தமிழ்மொழிக்கான திறனாய்வு அணுகுமுறையை வளர்த் தெடுப்பது, மண்ணுக்கேற்ற மார்க்சியம், இலக்கிய நல்லிணக்கம் இவற்றை நோக்கங்களாகச் சொல்லலாம்.
- தமிழ்த் தேசியவாதத்திற்கும் பார்ப்பனிய எதிர்ப்புவாதத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை மறுப்பது அல்லது அதிக முக்கியத்துவம் தராதது பெரிய முரண்.
- தமிழ் மொழிக்கான விஞ்ஞானப் பூர்வமான அணுகுமுறை வளர்த்தெடுக்க வேண்டும் என்று ஒரு பக்கம் கூறிக் கொண்டு, அந்தமாதிரி அணுகுமுறை எதுவும் கையாளாமல் சோஷலிச எதார்த்தவாதம் இழைத்து விட்ட அநீதியை சரி செய்யும் முகமாக சிலருக்கு மறுவாழ்வு கொடுக்க முனைந்திருப்பது.
- மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்று கூறுகிற வேளை தலித்தியத்திற்கு உலகப் பார்வை இல்லை என்றும் தமிழர் அனைவரும் முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தில் ஒடுக்கப்பட்டவர் எனவே, அவர்கள் யாவரும் தலித் எனக் கூறியிருப்பது
- நவீனத்துவத்தை விளக்க முற்படாது அதற்கான எதிர்வாதங்களை முன் வைத்திருப்பது.
- இலக்கிய நல்லிணக்கம் என்று கூறிக்கொண்டு வரையறை எதுவுமின்றி எல்லாவற்றையும் நிரவி சமன்படுத்துவது என்று முரண்களை வரிசைப் படுத்தலாம்.

ஞானியின் நடையினாலும், மேலே மேலே செல்லும் சஞ்சாரத்திலும் இம்முரண்கள் கூர்மை பெறவில்லையெனினும், சற்று உறுத்தலாகவே இருக்கின்றன.

ஞானிக்கு சில கேள்விகள்

தங்களின் நுட்பமான, பாரபட்சமற்றது என்று கருதப்பட்ட இந்த ஆய்வு நெகிழ்ந்த மார்க்சியப் பார்வையில் சிலரின் மீது ஒளி பாய்ச்சியதன் மூலம் நீங்கள் விரும்பும் நல்லிணக்கம் வந்து விடுமா? இடதுசாரி இயக்கங்களில் உள்ளவர்கள் அவர்களை முழுமனதோடு சிறந்த படைப்பாளிகள் என்று அங்கீகரித்தாலும் அதே அங்கிகாரத்தை மார்க்சிய, அமைப்பியல் கூடாரத்தில் உள்ளவர்களுக்கு அவர்கள் வழங்கிவிடத்தயாரா?

தமிழ்த்தேசியத்திற்கு பார்ப்பன எதிர்ப்புவாதம் அவசியமற்றது என்று நீங்கள் உண்மையிலே கருதினாலும், தமிழ்த் தேசியத்திற்கு அவர்கள் தயாரா, இதுவரை அவர்களின் பங்களிப்பு என்ன?

இறுதியாக ஒன்று, பாட்டாளி வர்க்கத்தின் கடைசிக்கண்ணிதான் இறுதிவரை போராடும். ஆகவே அவர்களையே முதன்மைப் படுத்துதல் வேண்டும் என்பது மார்க்சிய அறிஞரான உங்களுக்குத்தெரியாததல்ல. மண்ணுக்கேற்ற மார்ச்சியம், பாட்டாளி வர்க்கம் என்பதை உழவர் வர்க்கமாகக் காணுமென்பதும், மண்ணோடு சமாதியாகிக்கொண்டிருக்கும் தலித்தியர் பெண்கள் தான் உழவர் வர்க்கத்தின் கடைசிக் கண்ணி என்பதும், போராட்டம் என்பது அவர்களை முன்னிறுத்துவதும்தான் என்பதையும் தாங்கள் அறிந்தவர்களே. அப்படியிருக்க முதலில் தலித்தியருக்கும், பெண்களுக்குமான நீதி பற்றிப் பேசாமல் தமிழ்தேசியத்தை ஒருக்காலும் முன்னெடுத்துச் செல்லமுடியாது என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன். ●



படிப்பகம்

www.padippkam.com

# பாமாவின் ‘கருக்கு’, ‘சங்கதி’, நாவல்கள்

## சில குறிப்புகள்

ப்ரதிபா ஜெயச்சந்திரன்

தமிழில் தலித் எழுத்துக்கள் தாமதமாகத்தான் வந்துகொண்டிருக்கின்றன. இந்த வரவுகளினூடே மற்ற தரப்பினரின் எழுத்துக்களிடையே காணப்படும் தரமற்ற எழுத்துக்களையும் போலவே தலித் எழுத்துக்களில் தரமற்றவையும் சந்தடிசாக்கில் உள்நுழைந்து, தாம் செய்ய வந்த வேலை இன்னதென்று தெரியாது - புது மோஸ்தருக்கான அங்கீகாரங்களைப் பெற்று பவனி வருவதுண்டு.

தலித் எழுத்துக்களில் தலித்களின் வாழ்க்கை சார்ந்த எழுத்து வகைகளும் வராமலில்லை. தற்சமயம் அவற்றிற்கான வரவின் நோக்கமின்றி தான்தோன்றியாக வந்த நிலையிலேயே இருந்து பின்னர் கவனிப்பற்றுப் போய்விடுகிறது.

‘பாமா’ என்னும் எழுத்தாளர் முதன்முதலாக தமிழ் எழுத்துலகிற்கு அறிமுகமானது தன் ‘கருக்கு’ நாவல் மூலமாகத்தான். கதை சொல்லல் என்ற வகையில் இந்த நாவல் ஒரு வாழ்க்கைக் குறிப்பு என்ற உத்திக்குள் அடங்கி விட்டிருந்தாலும் தன்னைச் சுற்றியுள்ள தலித் மக்களின் வாழ்க்கை முறையை அப்படியே பெயர்த்து எழுத்துக்களாக வார்த்துவிட்டிருப்பதனால் அது தனக்கேயுரிய மரியாதையுடன் நிற்கிறது.

கிராமத்தின் அமைப்பு முதற்கொண்டு, அங்குள்ளவர்களின் பட்டப் பெயர்கள், வாழ்விடங்கள், உணவுப்பழக்கவழக்கங்கள், ஊருக்குள் இருக்கும் முக்கியமான தெருக்கள் (செக்கடி பசார்) முதலானவற்றை ஒரு நேர்கோட்டில் நிறுத்தி வாசகர் மனதில் ஓர் அகவயமான பிம்பத்தை உருவாக்கிவிடுகிறது இந் நாவல் .

இவை எல்லாவற்றினூடாகவும் ஒரு சிறுமியின் வாழ்க்கை அதில் தனக்கு, தன் சாதியின் பெயரால் கிடைக்கும் அவமானங்கள் கிராமத்தினாலும் சரி, கல்வி கற்றுத்தரும் நகர வாழ்வினாலும் சரி, எல்லா இடங்களிலும் இவள் தன் சாதியால் முன்னிறுத்தப்பட்டு அவமதிக்கப்படுகிறாள். அன்பையும், ஆன்மீகத்தையும் கற்றுத்தரும் மடங்களின் உள் உலகம் (Inner sphere) சாதிக் கண்ணாடி அணிந்த அங்குள்ளவர்களை நடத்துவது போன்ற விஷயங்கள் நமக்கு அரசல் புரசலாக தெரியவந்திருந்தாலும்; இங்கு அப்பட்டமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரே சமயநெறிக்குள் வாழும் வெவ்வேறு சாதிகளுக்குள்ளாக நடக்கும் சண்டைகளும் பதிவாகியுள்ளன.

மநுதர்மம் என்ற ‘வஸ்து’ பெண்களை கொஞ்சம் குறைய தலித்களின் நிலையிலேயே வைத்துள்ளது. இந்தப் பாரம்பரியத்தில் வந்த பெண்கள் தங்களின் எழுத்துக்களில் மநுதர்மத்திற்கு துணைபோகும் இந்துத்வ சாராம்சத்தோடு அதன் த்கவுகளைத் தூக்கிப்பிடித்து பெண்ணியம் பேசுகிறார்கள். (எ.கா: அம்பையின் சிறுகதை - *இந்தியா டுடே இலக்கிய மலர் 1994*) இப்படிப் பட்டவர்கள் தாங்கள் சார்ந்துள்ள மத நம்பிக்கைகளின் அடிப்படையிலான விசயங்களை விட்டு விடவும் முடியாமல், ஆனால் பெண்ணியமும் பேசி ஒருவகையான அரைவேக்காட்டுத் தனத்துடன் குட்டையைக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். இதில் எந்தப் பெண் எழுத்தாளர்களும் விதிவிலக்கல்ல.

ஆனால் ‘சங்கதி’ நாவலில் கதை சொல்லி தன் மரபு சார்ந்த மத நம்பிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்கி தன் மதத்தின் வெற்றீடுகளை எடுத்துச் சொல்லி அதை மெதுவாகத் தள்ளிவிடுகிறார். கதைசொல்லியின் மனதில் மதம் சார்ந்த நம்பிக்கைகளின் சல்லிவேர்கள் பலமிழந்து நிராயுதபாணிகளாகி விடுகின்றன - ஒரு எதார்த்தமான வாழ்க்கைப் போக்கில்.



படிப்பகம்

www.padippkam.com



'சங்கதி' நாவலில் பெரும்பாலான இடத்தைப் பிடித்திருப்பவர்கள் பெண்கதாபாத்திரம். இதில் சொல்லப்படும் அடாவடித்தனமான ராக்கம்மா போன்ற பெண்கள் ஆணாதிக்கத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கிறார்கள். இவர்களின் தற்காப்பு ஆயுதம் நூதனமானது. (அடிப்பதற்கு முன் அலறுவது) இப்படிப்பட்ட நிலைப்பாடு இன்றைய கீழ்த்தட்டு வர்க்கப் பெண்களுக்கு மிகவும் அவசியம்தான். அதேப்போல் முதலாளி குடிக்கும் தண்ணீரில் மூத்திரம் பெய்யும் கிழவி. பெண்விடுதலைக்கு, இப்படிப்பட்ட எதையும் கேள்விக்குள்ளாக்கும் பெண்கள்தான் தேவை.

பொதுவாக கிராமத்திலுள்ள பெண்களின் பொழுதுபோக்கு அம்சம் என்று சொல்ல வேண்டுமானால் செலவின்றி நிகழும் 'புரணி பேசுதல்' தான். இது அடிப்படையான வெளியீட்டு முறையின் ஆதி அம்சம். இந்தப் புரணி பேசுதல் என்னும் உத்தியில் எழுதப்பட்ட இந்நாவலில் தலித் இனத்தவருக்கிடையேயான பல்வேறு வாழ்க்கை முறைகள் முன்வைக்கப்படுகின்றன.

தலித்கள் வேதத்தில் சேர்ந்துள்ளதால் அந்தப் பெண்களுக்குரிய விடுதலை பறிக்கப்பட்டு தனக்குப் பிடிக்காத ஒருவனோடு சேர்ந்து வாழக் கட்டாயப்படுத்தப்பட்டு அடிமைப் படுத்தப்படுகிறாள். ஆனால், அதே நேரத்தில் சக்கிலியக் குடியைச் சேர்ந்த இந்துப் பெண்களுக்கு இந்தச் சித்திர வதை இல்லை. தன்னைச் சித்திரவதை செய்யும் எந்த ஆணுடனும் அவள் நிரந்தர மாக வாழ்ந்துதான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

ஒரு வகையில் குடும்பம் என்ற சமூகக்கட்டு உடைக்கப்பட்டு சிதைவுற்றாலும், ஒரு பெரும் சுமையாக அந்தக் கட்டை ஏற்றுக் கொள்ள ஒரு பெண் நிர்ப்பந்திக்கப்படும் போது அந்தச் சமூகக் கட்டின் அடிப்படை நோக்கமே கேள்விக்குள்ளாகிறது. இந்த வகையில் அங்கே தனிமனித விடுதலையும், அதனிமித்தம் பெண்ணிய விடுதலையும் முன்னிறுத்தப்படுகிறது.

இந்த நாவலில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான எழுத்து செய்நேர்த்தி உத்திகள் கையாளப்படவில்லை என்று சொல்வதைவிட, வாழ்வை முன்வைக்கும் போது அது தனக்கேயுரிய வீச்சோடு சுயம்புவாக விசுவரூபம் எடுத்து விடுவதைத் தடுக்கமுடியாது போய் விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இந்நாவலில் தமிழில் இதுவரை வெளிவராத சொல்லாடல்கள் நிறைய உள்ளன; எடுத்துக் காட்டிற்காக ஒன்று:

ஒரு தலித் சிறுமி, தீப்பெட்டி அலுவலகத்திற்கு வேலைக்குச் செல்லும் போது, அங்கே தனக்கு சம்மந்தமில்லாத அல்லது தனக்குப் பரிச்சயமற்ற ஒரு இடத்தை, தான் புரிந்துகொண்ட தனக்கேயுரிய குழந்தைத்தனத்துடன் 'கக்கூஸ்' என்று ஏனய அனைத்துத் தரப்பினராலும் சொல்லப்பட்டு வரும் பெயரை 'பீரூம்பு' என வெள்ளந்தியாக சொல்லும்போது, வாழ்க்கையின் ஜீவன் 'பச்' என்று நமக்கு முகத்திலடித்தாற்போல் பட்டு; இவளுக்கு இப்படி அனைவருக்கும் பரிச்சயமான ஒரு பெயர் தெரியாமல் போனதற்கான சமூக மற்றும் பொருளாதாரக் காரண காரியக் கூறுகளை தெளிவு படுத்திவிடுகிறது.

அந்த வார்த்தையை அவள் சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரிக்கும் போது அவள்மீது இந்தச் சமூகம் திணித்துள்ள வாழ்க்கையின் அவலம் நம்மை உறுத்துகிறது.

இது பெண்ணியத்தைத் தூக்கி நிறுத்தும் முதல் நாவல் என்றுதான் சொல்ல வேண்டும். சிறுசிறு குறைபாடுகள் இருப்பினும் தமிழில் நிலைத்து நிற்கப்போகும் நாவல் 'சங்கதி'.

இன்னும் நிறைய படைப்புக்கள் 'பாமா'விடமிருந்து இதே வீச்சோடு வரவேண்டும்.



படிப்பகம்

www.padippkam.com



# சூரன் தற்கொலை



ஓவியம் : பராமச்சந்திரன்

சூரசம்ஹாரம் - முருகக் கடவுள் சூரனை வதம் செய்து அழித்தொழித்ததாகச் சொல்லப் படும் கதை திருவிழாவாக முருகன் ஷேத்திரங் களில் கொண்டாடப்பட்டு வருவது நமக்குத் தெரியும். அந்த சூரசம்ஹாரத் திருவிழாவின் போது, நாகர்கோவிலுக்கு அருகிலுள்ள



படிப்பகம்

www.padippkam.com



# நாட்டுப்புறம்

"தோவாளை" கிராமத்தில் முருகனுக்கு சவால் விட்டு "சூரன் தற்கொலை" செய்து கொண்டதாக அவ்வூரைச் சேர்ந்த நாகராஜன் என்பவர் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக சொன்னது:-

தோவாளை என்பது மேலத்தோவாளை, கீழத்தோவாளை என்ற இரண்டு பகுதிகளைக் கொண்டது சூரசம்ஹாரத் திருவிழாவின் போது முதல் வருடம் சூரனைச் சுமந்து ஆடுகிற ஊரார், மறுவருடம் முருகனைச் சுமந்து ஆடவேண்டும் என்பது சூரசம்ஹாரத் திருவிழாவின் மரபான முறைமை.

அந்த வருடம்,

தலைச்சுமை விளக்கொளியில் பக்த கோடிகள் காற்தடம் பார்த்து நடந்துவர, முருகனோ மலர் அலங்காரப் பல்லக்கில் வெண்கலத் திருமேனியனாய் ஆடிக்கொண்டு சூரனை நோக்கி வந்தான்.

வான வெடிகளும், சரவெடிகளும் சூரனின் ஊர் வீதிகளில் வெடித்துக் கொண்டிருந்தன.தனது ஊர் மக்களோடு சேர்ந்து சூரனுக்கு ஏகக் கொண்டாட்டம். சூரன் உல்லாச நடையில் மகிழ்ந்து ஆடி வந்தான்.

சூரனின் இவ்விதமான அசட்டையும் உல்லாசமும் முருகனைக் கோபப்படுத்தியது. தனது ஆட்டத்தை உக்கிரப்படுத்தி சூரன் தலையைக் கொய்ய விரைந்தான்.

சூரனுக்கு தன் உல்லாசம் தடைபடுவதில் விருப்பமில்லை. நீண்ட நேரம் ஆடி மகிழும் விருப்பத்தில் உறுதி கொண்டு தன் தலையைக் கொய்ய அவசரம் காட்ட வேண்டியதில்லை என முருகனை வேண்டினான். காதுகேளாதவனாக விரைந்து வந்த முருகனை அங்கேயே நில், நான் சற்று நேரம் ஆடவேண்டும் என்று ஆணையிட்டான்.

கால அவகாசம் குறித்து கவலை கொண்ட முருகன் சூரனின் வேண்டுகோளையும் ஆணையையும் பொருட்படுத்தாது துவம்சம் பண்ண வேண்டி சூரனைத் துரத்தினான்.

வேறு வழியறியாது சூரன் தனது ஊர்வீதிகளைக் கடந்து முருகனின் ஊர்வீதிக்குள் ஓடிவரும்படியானது. முருகனின் திட்டத்தைத் தவிடுபொடியாக்கத் திட்டமிட்ட சூரன், 'என்னைத் துரத்தியா வருகிறாய், எங்கே துரத்து பார்ப்போம்' என சவால் விட்டு அதி வேகமாக ஓடி சந்து பொந்துகளில் ஒளிந்து விரைந்து . . . .

முருகன் காலபேதங்களுக்கு உடன்பட்டவனாக இருந்தும், இம்மாதிரி சூரனின் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகப் போவதில்லை என முடிவெடுத்து தனது ஊர்வீதிகளிலேயே நிதானமாக ஆடிக்கொண்டிருந்தான்.

முருகன் தன்னை நெருங்கி வரப்போவதில்லை என்பதை முடிவாக ஏற்று சூரன் தனது ஊர் வீதிகளை நோக்கி ஆடி ஓடினான்.

மரபு முறை தவறி ஓடிப் போன சூரனைத் துரத்திக் கொண்டு செல்லப் போவதில்லை என்று தன்மானம் கொண்டவனாய் முருகன் தனது ஊர் வீதியிலேயே ஆடிக் கொண்டிருந்தான்.

சூரனும் வீரம் நிறைந்தவனாய் தனது ஊர்வீதிகளிலே ஆடிக் கொண்டிருந்தான். சூரனின் உடலிலிருந்து கொய்து எறியப்பட வேண்டியதாய் எருதுத் தலையும், மாவிலைத் தலையும் பாக்கி இருந்தன. முருகன், சூரன் இருவரது தன்மானப் பிரச்சினைகளுக்கும் விடியப்போகிறபொழுது ஒரு தீர்வை வைத்திருந்தது.

(மறுநாள் காலையில் பள்ளிக் கூடங்களுக்குச் செல்லும் மாணவர்கள் சுவர்களிலும், தார் சாலைகளிலும் "சூரன் தற்கொலை" என விளம்பரமிட்டார்கள்.)



படிப்பகம்

www.padippkam.com





# செங்குணம் தாண்டாயி

## *ஈர விறகை ஊதி ஊதி .......*

காசுக்கு அரிசி வாங்கி
கண்ணாந்தவள வாங்கி
கணத்துப் பூசை போட்டேன்
அஞ்சரிசி வேவலையே -செஞ்ச
பாவம் தொலையிலயே
பணத்துக்கு அரிசி வாங்கி
பாப்பாந்தவள வாங்கி
பாரபூசை போட்டேன்
பத்தரிசியும் வேவலையே - பண்ண
பாவம் தொலையிலயே

## *கொண்டவனும் கொடுத்தவனும்*

மதுரை வீதியிலே
மாவெழுதும் திண்ணையிலே
மறிச்சி எழுதுறாராம்
மன்னவனாம் உம்மாமன்
கோட்டை வீதியிலே
கோலமிட்ட திண்ணையிலே
குறிச்சி எழுதுறாராம்
கோவலனாம் உன் தகப்பன்

ஆனை கட்டி போரடிப்பான்
அரிச்சந்திரன் உன் மாமன்
குதிரை கட்டி போரடிப்பான்
கோவலன் உன் தகப்பன்
மான் தாண்டும் பள்ளமெல்லாம்
தான் தாண்டும் வல்லவராம் - உன் மாமன்
மான் ஓடும் ஓட்டமெல்லாம்
தான் ஓட வல்லவரா - உன் தகப்பன்?

காசுக்கு நூல் வாங்கி
காஞ்சிபுரம் பாவோடி





படிப்பகம்

www.padippkam.com



# நாட்டுப்புறம்

வேசிக்கு சீலை நெய்யும்
வீரன்தான் உன் தகப்பன்
அஞ்சுதலை நாகம்
அடர்ந்திருக்கும் தாழையிலே
அஞ்சாமல் பூவெடுப்பான்
அரிச்சந்திரன் உன் மாமன்
பத்து தலை நாகம்
பதுங்கியிருக்கும் தாழையிலே
பாய்ந்து பூவெடுப்பான்
பாண்டியனாம் உன் மாமன்!

## இரு புத்திக்காரனுக்கு

முன்னூறு வண்டி வரும்
முத்து பதித்து வரும்
மூடாக்கு மறைச்சு வரும்
மூடாக்கை நீக்கிப்பிட்டு
எனக்கு வந்த முதலியாரே எங்கேம்பேன்
பூவரசம் பேட்டையிலே
பொழுதோட கண்டேன்பாய்
நானூறு வண்டி வரும்
நகைகள் பதித்து வரும்
நாதாங்கி போட்டு வரும்
நாதாங்கி நீக்கிப்பிட்டு
எனக்கு வந்த நாட்டாரே
எங்கேம்பேன்
சாந்தரைக்கும் பேட்டையிலே
சாய்ங்காலம் கண்டேன்பாய்.

..........................

எலுமிச்சை பழமுன்னு
ஏந்தினேன் கையிலே
இருபுத்திக் காரனென்று
எவருஞ்சொல்லலியே
வாசனைப் புட்டியின்னு
வாங்கினேன் கையிலே
வஞ்சனைக் காரனென்னு
வந்தெவரும் சொல்லலியே

## மீளாத் துயரம்

ஆத்து மணலிலே
அலறி அழுதேன்னா
ஆற்றங்கரை பட்சியெல்லாம்
அலறி வந்து
வாய் மூடும்
குளத்து மணலிலே
குலுங்கி அழுதேன்னா
குளத்துலுள்ள பட்சியெல்லாம்
குமுமி வந்து வாய்மூடும்
கும்பிட்டு அழுதாலும்
எனக்கு வந்த மாராசா -உம்
மனது மாறலையே -எஞ்
சோகம் தீரலையே

## பெண்ணென்று பிறந்தாயே

மண்ணுல இருக்கும்
மணல் பாம்பும்
வாழ்யிலே - இந்த
மங்கையிவள் வாழ
மண்ணு பொறுக்கலையே
பூவிலே இருக்கும்
பிணைப் பாம்பும்
வாழ்விலே - இந்தப்
பூவையிவள் வாழ
பூமி பொறுக்கலையே
பொண்ணு மனம் ஆறலையே

இளமரத்தின் கீழே
இறங்குங்கிளி ஆயிரந்தான்
இறங்குங்கிளியிலெல்லாம்
ஏழைக்கிளி ஆனேனே.
பனை மரத்துங்கீழே
பறக்குங்கிளி ஆயிரந்தான்
பறக்குங்கிளியிலெல்லாம்
பஞ்சைக்கிளி ஆனேனே.



படிப்பகம்

www.padippkam.com



அருணாசல கவிராயரிடம் பாடங் கேட்ட சட்டநாதபுர பார்ப்பன மாணவர் இருவர் ஒரு நாள் இப்படிச் சொன்னார்களாம்:

"ஐய தாங்கள் இதுகாறும் வெளிப்படுத்தி உள்ள புராணம், கோவை முதலிய நூல்களால் தங்கள் பெயர் எங்கும் பரவவில்லை. ஆதலால் தாங்கள் இதிகாசம் இரண்டனுள் ஒன்றைத் தேர்ந்து எடுத்து அதை ஒருவகைப் பிரபந்தமாகச் செய்து முடித்தால் நல்லது"

*(இராம நாடகக் கீர்த்தனை - முன்னுரை)*

**இரண்டாம் உலகப் போரில் செத்துப் போனவர்களின் எண்ணிக்கையை விட இந்தியாவில் தாது வருடப் பஞ்சத்தில் செத்தவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று சொல்வார்கள். இத்தகைய பெரும் அழிவையும் அதனடியான சோகங் களையும் அன்றைய அங்கீகரிக்கப்பட்ட இயற்றமிழ்ப் பாரம்பரியம் எதுவும் பதிவு செய்யவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. பஞ்சத்தில் செத்தவர்களும், கொள்ளை நோயால் சிதைந்தவர்களும், பசிக் கொடுமைக்காக தங்கள் உடல் களை விற்றுக் கொண்டவர்களும், ஒடுக் கப்பட்ட சாதியினர்தான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.**

பிரபந்தம் என்று அவர்கள் சொன்னது நாடகம் என்ற கருத்தில்தான். கவிராயர் கீர்த் தனை வடிவத்தை தேர்ந்தெடுத்ததற்கு மூன்று காரணங்கள் அம்முன்னுரையில் சொல்லப்படு கின்றன. அவை

1. இதுவரை ராமாயணம் கீர்த்தனையாகப் பாடப்படவில்லை.
2. கீர்த்தனையாகப் பாடினால் ராகங்களைத் தேர்வு செய்யச் சீடர்களின் உதவி இருக் கிறது.
3. "முந்தைய இரண்டினும் அதிமுக்கியமான காரணம் என்னவெனில் பண்டிதர்க்கே பெரிதும் பயன்படக் கூடிய கம்பராமா யணம் போல் அல்லாமல் கீர்த்தனங்கள் பெண்களும் பேதையரும் கூட படித்து ஆனந்திக்கத் தக்கது".

*(பார்க்க மேற்படி -நூல் முன்னுரை)*

பெண்கள் பேதையர் என இழிவுபடுத்திச் சொல்வது ஒருபுறம் இருக்கட்டும். மக்கள் வடிவங்களை ரசிக்கக் கற்று அறிந்த புலமை தேவையில்லை என்கிற கருத்து கவனிக்கத் தக்கது. இதே கால கட்டத்தில் பெரிய புராணம் போன்றவைகளும் கீர்த்தனையாக (1891) எழுதப்பட்டன எனத் தெரிகின்றது.

இயற்றமிழ் பாரம்பரியத்தில் இலக்கியம் பயில்வது என்பது ஆசிரியர் மாணவர் உறவில் 'பாடங் கேட்டல்' என்கிற வடிவில் அமைந்தது. இந்த வகையில் இலக்கியப் பயில்வு என்பது ஒரு அதிகார உற்பத்திக் களனாக அமைந்தது. "கட்டறுத்து வீடு (மோட்சம்) பெறும்" நோக்குடன் இயற்றமிழ்ப் பயில்வு என்பது மேட்டிமைச் சாதி, வர்க்கங்களுக்குள் முடங்கியது. ஆனால் நிகழ்த்து வடிவங்களில் கலை இலக்கிய நுகர்வு என்பது நிகழ்த்துவோர் பார்ப்போர் (அல்லது கேட்போர்) என்கிற வடிவில் ஒப்பீட்டு அளவில் சனநாயகத் தன்மை உடையதாக இருந்தது. ஒப்பீட்டளவில் அதிகார உற்பத்தி



படிப்பகம்

www.padippkam.com



இங்கே குறைவாக இருந்தது. வீடு (மோட்சம்) பெறும் நோக்குடன் நுகர்வு அமையாமல் உடனடியாக மகிழ்ச்சியையும், இன்பத்தையும் துய்ப்பதாக இருந்தது.

மக்கள் மத்தியில் நிகழ்த்தக் கூடியதாக அமையும்போது அங்கீகரிக்கப்பட்ட மரபுக்கு எதிரான சனநாயக, கலக குரல்களும் வடிவங்களும் இவற்றில் இடம்பெறுவது தவிர்க்க இயலாதது ஆகின்றது. அத்தகைய எதிர் மரபுத் தன்மைகளை கீழ்க்கண்டவாறு அவற்றிலிருந்து நாம் பொறுக்கித் தொகுக்க முடியும். அவை:

1. செவ்விலக்கண மரபில் வந்த இயற்றமிழ் வடிவங்களில் இடம் பெற இயலாத பேச்சு வழக்குச் சொற்கள் பெரிய அளவில் இடம் பெறக் கூடிய தன்மை. (எகா) மூனுவாட்டி, வருகலாச்சே, சிடுசிடு மூஞ்சி, தோசி (நந்தனார் சரித்திரக் கீர்த்தனை)

"பார்ப்பானுக்கு வாய்ப்போக்காதே, ஆண்டிக்கு அதுதானும் சொல்லாதே", "சரசமிஞ்சினால் ரவிக்கையிலே கை போடலாகாது", "சிறுக்கி மனதறியாமல் செடிதனை துரத்திக் கொண்டு அலைகிறான்", "தான் பத்தினியானால் தேவடியாள் தெருவிலே குடியிருக்கலாம்"

*(செயங்கொண்டார் வழக்கம்)*

2. விண்சார்ந்த மேன்மைகளை கேலி செய்து கீழ் இறக்குதல். (எ.டு) நந்தனாருக்கும் இதர புலையர்களுக்கும் இடையே நடக்கும் ஒரு உரையாடலாக கோபால கிருஷ்ண பாரதியார் எழுதுவது.

நந்தனார் : சற்றேயாகினும் சிவனை த்யானம் பண் என்றார்.

புலையர் : நத்தையோடு பாலைப் பானம் பண் என்றார்.

நந்தனார் : திருச்சிற்றம்பலம் என்று சபிக்கச் சொன்னார்.

புலையர் : விரிச்சக் கம்பளம் என்று உரக்கச் சொன்னார்.

நந்தனார் : கொண்டாடித் தெய்வத்தை கொள்ளுவீர் என்றார்.

புலையர் : பெண்டாட்டி தெய்வமே பெருந் தெய்வம் என்றார்.

*(நந்தனார் சரித்திரக் கீர்த்தனை)*

நந்தனார் புத்திசாலியா, புலையர்கள் புத்திசாலிகளா என்கிற கேள்விகள் ஒருபுறம் இருக்கட்டும். இத்தகைய ஒரு உரையாடல் செவ்விலக்கிய பாரம்பரியத்தில் சாத்தியம் இல்லை என்பது கவனிக்கத் தக்கது.

3. அதுவரை செவ்விலக்கண இயற்றமிழ்ப் பாரம்பரியத்தில் பயிலப்பட்டு வந்த கதைகளை சற்றே கவிழ்த்து மாற்றுதல்.

(எகா) கலிங்கத்திற்கு படை நடத்திச் சென்று தமிழ் வீரத்தை நிலை நாட்டிய கருணாகரத் தொண்டைமானின் வீர சரிதம் கலிங்கத்துப்பரணி (12 -நூல்) வாயிலாக தமிழ் மரபு போற்றி



படிப்பகம்

www.padippkam.com



வந்துள்ளதை நாம் அறிவோம். செயங்கொண்டார் வழக்கத்தில் பாடுவான் முத்தப்பச் செட்டியார் கருணாகரத் தொண்டைமான் வெற்றி பெற்ற ரகசியத்தை வேறு மாதிரியாகச் சொல்கிறார்.

அது வருமாறு: ஊசி காந்தக் கோட்டை கட்டி அதற்குள் வாழும் கலிங்கத்து வீரர்களிடம் தொண்டைமானின் பருப்பு வேகவில்லை. சோழராசாவும் தொண்டைமானும் ஒரு யுக்தி செய்கின்றனர்.

கொலு தாசிகளிலே சமர்த்திகளாகவும், யெவ்வனமான ரூப வர்ணங்கள் வாய்ந்தவர்களாகவும் ஆயிரம் தாசிகளை தமிழ்நாட்டிலிருந்து கூட்டிச் சென்று கலிங்கத்துச் சமுத்திரக் கரையில் மாடி வீடு கட்டி அலங்காரம் செய்து நிற்க வைக்கின்றனர். மயங்கி வந்த கலிங்கர்களை அநேக லீலா விநோதங்கள் நடத்துவித்து வெகு நயங்களைக் கொடுத்து அசத்தி வைத்திருக்கும் நேரத்தில் தொண்டைமான் வந்து அவர்களை வெற்றி கொள்கின்றான். இதே போல வேறு சில கதைகளையும் முத்தப்ப செட்டியார் மாற்றி அமைக்கிறார். பார்வதியும் சிவனும் பேசிக் கொண்டிருந்ததை நந்தி ஒட்டுக் கேட்டதால் அதனை மீனாக சிவன் சபித்தார் என்பது திருவிளையாடல் புராணம். நந்திக்கு பதில் முருகன் சபிக்கப்பட்டதாக மாற்றி அமைக்கிறார் முத்தப்பச் செட்டியார். கம்பர் ஒரு விறகு வெட்டியின் மனைவியிடம் சல்லாபம் செய்யப் போய் மாட்டிக் கொண்டதாக இன்னொரு கதை. தமிழ் இலக்கியத்திற்காக உயிரை ஈந்த நந்திவர்மன், ஒரு தாழ்த்தப்பட்ட மகனாக சித்தரிக்கின்றது இன்னொரு கதை.

4. செவ்விலக்கண இயற்றமிழ் பாரம்பரியம் கண்டு கொள்ளாது புறக்கணித்த வரலாற்று அவலங்களை பாடு பொருளாக இவை ஏற்றுக் கொண்டன. (எ.கா) தமிழ் நாட்டில் தாது வருடத்தில் (1876) ஏற்பட்ட பெரும் பஞ்சம் ஒரு மாபெரும் சோக நிகழ்ச்சி. 10 ஆண்டுகளில் இப்பஞ்சத்தின் விளைவாக சுமார் 12 லட்சம் மக்கள் செத்துப் போயினர் என அன்றைய மக்கள் தொகை கணக்கின் (1881) மூலம் தெரிய வருகின்றது. இரண்டாம் உலகப் போரில் செத்துப் போனவர்களின் எண்ணிக்கையை விட இந்தியாவில் தாது வருடப் பஞ்சத்தில் செத்தவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று சொல்வார்கள். இத்தகைய பெரும் அழிவையும் அதனடியான சோகங்களையும் அன்றைய அங்கீகரிக்கப்பட்ட இயற்றமிழ்ப் பாரம்பரியம் எதுவும் பதிவு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கிய பாரம்பரியத்தை ஆதாரமாகக் கொண்டு தமிழக வரலாற்றை எழுதினால் தாது வருடப் பஞ்சம் அதில் இடம் பெறாது. பஞ்சத்தில் செத்தவர்களும், கொள்ளை நோயால் சிதைந்தவர்களும், பசிக் கொடுமைக்காக தங்கள் உடல்களை விற்றுக் கொண்டவர்களும், ஒடுக்கப்பட்ட சாதியினர்தான் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இந்த வரலாற்றை கள்ளப்புலியூரில் வசித்திருந்த ஆசாரிச் சாதியினரின் குருவான மலைமருந்தன் என்பவர் கும்மி வடிவில் ஒரு சிறு இசை நூலாக எழுதி உள்ளார்.

"தாது வருடத்துக் கரிப்புக் கும்மி" என்பது அதன் பெயர். மிக எளிய மக்கள் மொழியில் அன்றைய அவலங்களை முழுமையாக சித்தரிக்கும் ஒரு அற்புதமான ஆவணமாக இந்நூல் திகழ்கிறது.



படிப்பகம்

www.padippkam.com



"வெகு ஜனம்" என்கிற சொல்லாட்சி இந்நூலில் பயன்படுத்தப்பட்டிருந்தது எனக்கு வியப்பளித்தது. இதேபோல புயலில் தனுஷ்கோடி அழிந்தது, அரியலூர் ரயில் விபத்தில் பலர் மாண்டது, 'ஸ்கைலாப்' விழுந்து உலகம் அழிந்து போய் விடும் என சில ஆண்டுகளுக்கு முன் எழும்பிய வதந்தி, பள்ளி ஒன்று இடிந்து பிள்ளைகள் செத்துப் போனது ஆகியவையும் இத்தகைய இசை மற்றும் கும்மிப் பாடல்களாக இன்றளவும் தென்தமிழ் நாட்டில் அடித்தட்டு மக்கள் மத்தியில் நிகழ்த்தப்படுகின்றன.

*பார்க்க கே.ஏ.குணசேகரன் தொகுத்துள்ள நகர் சார் நாட்டுப்புறப் பாடல்கள்)*

5. அத்து மீறுதல், திருடுதல் போன்ற செயல்பாடுகளின் மூலம் சமூக ஒழுங்கமைவை குலைத்த "குற்றங்களுக்காக" சமூகத்தால் தண்டிக்கப்பட்ட அவல வீரர்களை இலக்கிய நாயகர்களாக முன் வைத்தல்.

(எகா) கட்டபொம்மன், கான்சாகிபு, புலித்தேவன், மதுரை வீரன், முத்துப்பட்டன் முதல் பிரபல கேடிகளான மணிக் குறவன், கருவாயன் வரை இவ்வாறு இத்தகைய நிகழ்த்து இலக்கியங்களில் அவல நாயகர்களாக ஆக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் இயற்றமிழ் போற்றும் அறவியல் மதிப்பீடுகள் எள்ளி நகையாடப்பெறுகின்றன.

இவ்வாறு உருவாக்கப்பட்ட எண்ணற்ற நிகழ்த்து இலக்கியங்கள் ஏட்டுச் சுவடிகளாக சுவடிகள் காப்பகங்களிலும், இன்னும் பதிவு கூட செய்யப்படாமல் வாய்மொழியாகவே அடித்தட்டு மக்கள் மத்தியிலும் ஏராளமாய் குவிந்து கிடக்கின்றன. இவற்றில் மிக மிகச்சில அச்சேரிய நூல்களின் அடிப்படையிலேயே மேற்குறித்த முடிவுகளைத் தொகுத்துள்ளேன். இதனை ஒரு முழுமையான பணியாக எடுத்துக் கொண்டு ஆழமான ஆய்வுகளை மேற்க் கொண்டால் மேலும் பல எதிர் மரபுக் கூறுகளைத் தொகுக்க முடியும். இத்தகைய முயற்சி தமிழில் ஒரு மாற்று மரபை, எதிர் மரபை, தலித் மரபைக் கட்டமைக்க உதவும்.

கடைசியாக ஒரு மிக முக்கியமான எச்சரிக்கையை முன் வைக்க விரும்புகின்றேன். இத்தகைய நூல்களில் காணப்படும் அனைத்தும் பொதுக் கருத்தியலுக்கு எதிரானவை என்றோ எல்லாமே எதிர்மரபு அம்சங்கள்தான் என்றோ நினைத்து விட முடியாது. இவையும் கூட ஓரளவிற்கு சமூக ஆதிக்க சக்திகளின் தயவில்தான் உருவாக்கவும், நிகழ்த்தவும் படுகின்றன. இவற்றை உருவாக்கியவர்களில் பெரும்பாலோர் தலித் அல்லாதவர்கள். நவீன நிகழ்த்து இலக்கிய முயற்சிகள் பல தலித்துகளாலும் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் அவையும் கூட நடுத்தர சாதிகள் ஆதிக்கம் செலுத்தும் கிராம திருவிழாக்களிலேயே நிகழ்த்தப் பெறுகின்றன. இதில் எந்த அளவிற்கு எதிர் மரபுக் கூறுகள் அனுமதிக்கப்படும் என்பதை விளக்க வேண்டியதில்லை.

சென்ற நூற்றாண்டில் நடுத்தர சாதிப் புலவர்களால் எழுதப்பட்ட இத்தகைய நிகழ்த்து இலக்கியங்களைக் கையாளும்போது இன்னொரு எச்சரிக்கையும் தேவை. மக்கள் மத்தியிலுள்ள வழக்குகளையும் கதைகளையும் இந்து புராணிக கட்டமைப்பிற்குள் கொண்டு வரும் முயற்சியாகவும் ராமாயண, மகாபாரத இதிகாசக் கதைகளை அடித்தட்டு சாதி மக்கள் மத்தியில் பரப்பும்



படிப்பகம்

www.padippkam.com



முயற்சியாகவும் இவற்றைப் பார்க்க இடமுண்டு. அந்த வகையில் இன்று ஆர்எஸ்எஸ். காரர்கள் கிராமத்துக் கோவில்களின் அடித்தட்டு சாதிப் பூசாரிகளுக்கு வேதாகமப் பயிற்சி கொடுப்பதுடன் தொலைக்காட்சி மூலம் ராமாயண,-மகாபாரத கதைகளைப் பரப்புவதுடனும் இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக, 'செயங்கொண்டார் வழக்கம்' என்னும் நூல் சென்ற நூற்றாண்டில் சிவகங்கை வட்டாரத்தில் நாட்டுக்கோட்டை செட்டிமார் மத்தியில் வழக்கத்தில் இருந்த சாதாரணப் பழமொழிகள் எல்லாவற்றிற்கும் இந்து புராண இதிகாச கதைவழியாக விளக்கம் சொல்வதாக அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இவற்றை எச்சரிக்கையுடன் கையாள்வது அவசியம்.

> வரலாறு பூராவிலும் செவ்விலக்கண இயற்றமிழ்ப் பாரம்பரியம் என்பது அதிகார உற்பத்திக்களனாகவே இருந்து வந்துள்ளது. இலக்கணம் மீறுதலே மானுடமாக இருந்து வந்திருக்கின்றது.

எனினும், இத்தகைய நிகழ்த்து கலை இலக்கியப் பிரதிகளை மேற் குறித்தவாறு அணுகும்போது தலித் இலக்கிய நோக்கில் நமக்குச் சில உண்மைகள் வெளிப்படுகின்றன. வரலாறு பூராவிலும் செவ்விலக்கண இயற்றமிழ்ப் பாரம்பரியம் என்பது அதிகார உற்பத்திக்களனாகவே இருந்து வந்துள்ளது. இலக்கணம் மீறுதலே மானுடமாக இருந்து வந்திருக்கின்றது. தலித் கலை இலக்கிய முயற்சிகள் என்பது இத்தகைய இலக்கணம் மீறிய நிகழ்த்து வடிவத் தன்மையுடன் அமைக்கப் பெறுதல் அவசியம். எழுத்து வடிவிலான பிரதிகளை (நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை) நாம் உற்பத்தி செய்யும்போது கூட நிகழ்த்து வடிவக் கூறுகளுடன் அவற்றை உருவாக்க வேண்டும். தமிழில் அரும்பி வெற்றி பெற்றுள்ள ஒரு சில தலித் இலக்கிய முயற்சிகளில் ஏற்கனவே இத்தகைய கூறுகள் கையாளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று.

**உதவிய நூல்களில் சில:**


1. *செயங்கொண்டார் வழக்கம் பதிப்பு - 1955, கீழ்த்திசை சுவடி நிலையம், சென்னை.*
2. *தாது வருச கரிப்புக் கும்மி பதிப்பு - 1985, சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.*
3. *சங்கீத மும்மணிகள் பதிப்பு - 1987, டாக்டர் உவே.சாமிநாதய்யர் -நூல் நிலையம் பெசண்ட் நகர், சென்னை.*
4. *என் சரித்திரம் - டாக்டர் உவே.சாமிநாதய்யர் நூல் நிலையம், பதிப்பு - 1982, பெசண்ட் நகர், சென்னை.*
5. *ராம நாடக கீர்த்தனை - (17-நூற்றாண்டு) சீர்காழி அருணாசல கவிராயர்*
6. *நந்தனார் சரித்திர கீர்த்தனை- (19-நூற்றாண்டு) கோபால கிருஷ்ண பாரதியார்.*
7. *நகர் சார் நாட்டுப் புறக்கதைகள் - கே.ஏ.குணசேகரன்.*




படிப்பகம்

www.padippkam.com



கவிதை

## கறுப்புப் பெண்ணின் காதற் பாடல்

எலீன் தாமஸ்

நான் உனக்கு காதல் கீதம் பாடினேன்
அடிமைக் கப்பலின் துளையில்
கரப்பான் பூச்சிகளுக்கும்
எலிகளுக்கும் நடுவில்
அவர்கள் நம்மை அடைத்து வைத்த போது.

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
முடைநாற்றமடிக்கும் துளையில் இருந்தபோது
நீ உயிரோடிருக்க உதவினேன்
புதிய உலகின் யுத்தம் வருவதற்காக.

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
அவர்கள் நம்மை ஏலக் கூடத்தில்
வைத்திருந்த போது;
உன்னைக் கிழக்கிலும்
என்னை வடக்கிலும்
இழுத்துச் சென்ற போது.

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
என் வேதனைக் கூக்குரலின் மூலமாக
உன்னிடம் கெஞ்சினேன்;
தயவுசெய்து ஒருபோதும்
என்னை மறந்துவிடாதே.

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
என்னை அவர்களின்
வைப்பாட்டியாக இழுத்துச் சென்றபோது
உன்னை அவர்களின் பொலிகாளையாக
இட்டுச் சென்ற போது.

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
என்னை அவர்களின் வைப்பாட்டியாக
இருந்ததை நிறுத்திய பின்னும்
நீயோ அவர்களின் பொலிகாளையாயிருப்பதை
நிறுத்த முடியாத போது.

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
நாம் சேர்ந்து ரத்தத்தாலும் வியர்வையாலும்
கிரயமாக்கிக் கொண்ட நம் தேசத்திலிருந்து
நம்மை வெள்ளையன்
தூக்கி எறிந்த போது.

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
'அவர்களை வெல்ல முடியாவிட்டால்
அவர்களோடு சேர்ந்து கொள்'
என்று சொல்லி
நீ வெள்ளைக்காரியை
வைத்துக் கொண்ட போது.

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
பேசவும்
வேலை நிறுத்தம் செய்யவும்
அரசியலாக்கவும்
அணிதிரளவும்
நமக்குள்ள உரிமையை நிலைநாட்ட
நாம் கிளர்ந்தெழுந்து
நம் தலையை உடைத்துக் கொண்ட போது.

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
நீ என் மார்பில் சரிந்து அழுகையில்
நிவாரண மூலிகையால்
உன் காயங்களில் தடவியவாறு
நம் இருவருக்குமே
எனக்குள் நான் கிழிபட்டுக் கந்தலாகி
காயமாகியிருந்ததை மறந்த போது

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
நம் மாட்சிமையை மீட்க
விரோதிக் கெதிராய் நாம்
ஆயுதமேந்திய போது



படிப்பகம்

www.padippkam.com





நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
ஒரு நாள் உழவில் அவசரகதியில்
என் வயிற்றில் நீ பீய்ச்சியடித்த விதையால்
கருவுற்ற நம் குழந்தையை
நீ மறுதலித்த போது

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
யுத்தத்திற்குப் பிறகு
முழுமையான மக்களையும்
சுதந்திர தேசத்தையும் நிர்மாணிக்க
நாம் சேர்ந்து உழைத்த போது

நான் உனக்குக் காதல் கீதம் பாடினேன்
நீ இப்போது அழைக்கப்படுகிற
அரசாங்க விருந்தில் கலந்து கொள்ளத்தக்கவளாய்
பதவி சானவளாய்
நான் இல்லை என்று
நீ சொன்ன போது.

நான் விடாது உனக்குக்
காதல் கீதம் பாடுகிறேன்
என் ஆன்மாவை அழித்துவிடுவது போல
அச்சுறுத்தும் குரோதப் பாடல்களைக்
கேட்ட போது

என் கறுப்பு மனிதனே
நான் உனக்குக் காதல் கீதம் பாடுகிறேன்
நீ என் பக்கவாட்டில்
பலசாலியாய் நின்று
புரிந்து கொண்டவனாகி
எனக்காயும் நீ காதல் கீதம்
பாடுகிறவனாக வேண்டி

*ஆங்கிலம் வழி தமிழில்: ப்ரதிபா ஜெயச்சந்திரன்*
*மொழிபெயர்ப்பில் : ஆ அமிர்தராஜ்*

# கொலுசு

## தணிகைச் செல்வன்

பதினேழு வயசுக்
கொலுசுக் கால்கள்
பாண்டியனில் ஏறின

எழும்பூரில் இறங்கி
ஆட்டோவில் ஏறிய போது
ஹவாய் சிலிப்பர்

கல்லூரி மைதானம்
டென்னிஸ் விளையாட்டில்
பாட்டா காலணிகள்

குளிக்கும் அறைக்குள்
நுழைய
பாத்ரூம செருப்புகள்
கழிப்பறைக்குள்
காலணி வேறு

'சிங்கப்பூர்ச் செருப்பில்
உன்
சிவந்த பாதம்
எத்தனை அழகு'
கணவன் கொஞ்சலில்
காலைப் பார்த்தாள்
அங்கே
இன்றும் இருந்தது
கொலுசு
விடுதலை இன்றி!




படிப்பகம்

www.padippkam.com

# மணி மாடுகள்

சிறுகதை

சந்ரு

ஊர் வழிக்குப் பழகிப் போயிருந்தன மணிமாடுகள். மலை அடிவார மேய்ச்சல் தளத்தில் நின்ற மணிமாடுகளின் கழுத்தில் கிடந்து குலுங்கும் தகரமணியின் டங் .... கினி



ஓவியம் : ப.ராமச்சந்திரன்

ஒலிக்கும், மாடுமேய்க்கும் சிறுவர்களின் ரிக் ... வோ ... ரிக்கோ ... ஓசைக்குமான தொடர்பில், ஊரை நோக்கி வரும் பாதையில் மணி மாடுகளோடு இணைந்து மற்ற மாடுகளும் நடக்க, அவற்றின் காலடிப் புழுதிகளோடு, ஊர் முகப்பி லிருந்த அய்யனார் கோவில் பகுதியை மாலை இருள் வந்து வளைத்தது.

தான் முழுகிய வாய்க்கால் நீர் உடல் எங்கும் தொப்புத் தொப்பாய் ஒழுக சின்னச்சாமி. அய்ய னர் பீடத்திற்கு முன்பாக வந்து நின்றான். நம் பிக்கை மோசம் அடைந்ததில், அவனது மருண்ட பார்வை தனக்குப் பின்புறமாக நட்டு வைக்கப்பட்டிருந்த சூலங்களிலும் வேல் கத்திகளிலும் வந்து நின்றது.



படிப்பகம்

www.padippkam.com

துரு ஏறிய சூலம், வேல்க்கத்திகளைச் சுற்றித் தொங்கிய சலங்கை மணிகள் ஓசைப்படாமல் குலுங்கின.

அடிமரத்திலிருந்த வெடிப்புகளிலும், பருத்து மரமான விழுதுகளிலும், முண்டு முடிச்சுகளிலும் பல நூறு வருடங்களை வைத்திருந்த ஆலமரக் கிளைகளில், தத்தமது இருப்பிடங்களைத் தேடி பறவைகள் கூட்சலிட்டுத் தாவிப் பறந்து திரிந்தன.

சின்னச்சாமியின் பார்வை ஒரு சூலத்தின் முனையிலிருந்து கைப்பிடி வழியாக இறங்கி, பூமி தொட்டு கற்கள், புற்றூண்டுகளைத் தொட்டு நகர்ந்து, அய்யனார் சாமியின் பீடத்தின் கீழ் இருந்த அரக்கனின் துண்டுபட்ட தலை மேல் ஏறி, அதன் மேலிருந்த அய்யனார் சாமியின் பாதம் தழுவி பீடத்தின் இருபுறமும் நின்ற காவல்காரர்களையும் காவல் நாய்களையும் விலகி அய்யனார் மடி தாவி, அவர் மார்பில் கிடந்த சங்கிலி சரப்புளி மேல் ஊர்ந்து, முகவாய் வருடி நாசித்தண்டு, நெற்றிப் பொட்டு என சாமியின் சிரம் விலகி, மரக்கிளைகளுக்கு ஊடாக வான் ஏவிய பார்வை: நின்று - நிதானித்து - தனக்கு நல்ல பதில் கிடைத்ததாய், தன் கூப்பிய கரம் விரித்து, குனிந்து மண்ணை அள்ளி, வானில் தூற்றி, ஓடிய சின்னச்சாமி அங்கு நட்டிருந்த சூலம் ஒன்றப் பிடுங்கி, அய்யனார் பீடத்திற்கு முன்பாக, விசைக்க சூலத்தின் கூர்முனைகள் பூமியில் புதைந்த போது, வானிலிருந்து இறங்கிய சாம்பல் காற்று அந்தப் பிரதேசம் முழுவதையும் விழுங்கியது.

நீர் நிரம்பிய நெல்வயல்கள் வழியாக ஊருக்குள் நுழைந்து, வீடுகளின் மூங்கில் சாரத் துளைகளில் புகுந்து வெளியேறிய காற்றின் இரைச்சலில் இரவின் இருள் சுவாசித்துக் கொண்டிருந்தது.

மலையாண்டியை கைப்பிடியாய் பிடித்துக் கொண்டு வர இயலாதததால், ஊர் மந்தையில் கூடியிருந்த பஞ்சாயத்தார்களும், ஜனங்களும் கல்விளக்கில் எண்ணை வற்றும் முன்பாகவே கலைந்தார்கள்.

ஊர்த் தென்கோடியில் ஆரம்பித்து தெரு முனைகளிலிருந்து ஊர் விளக்குகளை அணைத்துக் கொண்டு சென்றான் பணியாள்.

வீட்டு விளக்குகளை, ஊர் ஜனங்களின் தூக்கம் அணைக்க, சிறு குழந்தைகள் இருந்த வீடுகளில் மட்டும் கைவிளக்குகள் மினுக்கிக் கொண்டிருந்தன.

மலையாண்டியின் மச்சு வீட்டில் எரிந்து கொண்டிருந்த கைவிளக்கின் ஒளி அந்த அறைக்கே போதுமானதாய் இல்லை.

தன் வீட்டு முற்றத்தில் தந்தை, மனைவி மக்களோடு படுத்திருந்த மலையாண்டியைச் சூழ்ந்து நிலைத்திருந்தது இருள்.

உடல் அலுப்புற்றுக் கிடந்தும், கண்களில் உறக்கம் பற்றாமல், படுத்த படுக்கையாகவே கிடந்து விட முயற்சித்தான். வீட்டுச்சுவரில் உச் . . உச் என கெவுளி அடித்த சப்தம் அவனுள் எதையோ நிச்சயப் படுத்தியதாய், படுக்கையிலிருந்து படக்கென எழுந்து வீட்டிற்குள் நுழைந்து அறைக் கதவை உட்புறமாகத் தாழிட்டான். அரைப் பார்வையிலேயே தனது இடுப்பிலிருந்த துண்டை அவிழ்த்து தரையில் விரித்து அதில் குப்புற விழுந்து படுத்தான்.

ஏதோ ஓர் உணர்வு, கண்களைத் திறக்க அனுமதிக்கவில்லை. விரித்த துண்டில் இடதுபுற முகம் பதித்து, தரையில் மொழுகிய சாண நெடி வீச, தனது இடது கையை தலைக்கு மேல் நீட்டி மண் தரையில் கிடத்தினான்.

இடதுகை தரையைத் தடவி எதையோ தேடிக் கொண்டிருந்தது. சுவர்கோழி கிரிச்சிட்டுக் கொண்டிருந்தது. கை விளக்கில் பொசுங்கிய துணித்திரி கொண்டு கனலாய் கன கனக்க, அதில் ஒளி விளைவு துள்ளி குதித்துக் கொண்டிருந்தது.

தரையில் பரவிய கைக்குக் கிடைத்த வேர்க்கடலைப் பருப்பு ஒன்று மலையாண்டியின் பற்களில் அறைபட்டுக் கொண்டிருந்த போது, எங்கும் நிசப்தம் நிலவுவதாய் உணர்ந்தான். அறைபட்ட பருப்பும், உமிழ்நீரும் கூழாகி அவனது தொண்டைக்கு இறங்கும் ஓசை மட்டும் அப்போது உரத்த சப்தமாயிருந்தது.

அவனது மனப்பிராந்தியிலிருந்த அந்த சப்தமும், சுவர்க் கோழியின் கிரீச்சிடலும் ஒன்று கலந்து பல்வேறு ஒலியாய் கிளைத்து, மச்சு வீட்டுச் சுவர்களிலிருந்த விரிசல்கள் அனைத்தையும் அவன் மனக்கண்முன் நிறுத்தியது.

அறைக்குள்ளிருந்த இருளும் இறுக்கமும்



படிப்பகம்

www.padippkam.com

மேலும் அவனை சின்னா பின்னப்படுத்த எதையும் எதிர்கொள்ள விரும்பாதவனாய் தனது இரு கைகளையும், இரு கால்களுக்கு இடையே நீட்டிச் சுருண்டு படுத்தான்.

இடுப்புத் துணி மறைத்திருந்த பகுதியை தவிர தனது வெற்றுடல் பாதுகாப்பின்றி வெட்ட வெளியில் குவிந்து கிடப்பதாய் உணர்ந்தான். படுத்தபடியே நகர்ந்து தலையில் விரித்திருந்த துண்டை எடுத்து தனது தலை முதலாக உடலை மூடி மறைத்தான்.

வடதிசையில், வெட்ட வெளியைப் பார்த்துக் கிடந்த அவனது முழங்கால்களுக்குக் கீழான பகுதி அவனது மன பிராந்தியிலிருந்த ஒலியின் கிளை ஓடலாய் படீர் ... படீர் ... என வெடித்துச் சிதறி தாரை தப்பட்டை முழக்கங்களைக் கொண்டு வந்தது - அதிரடி முழக்கம், கொழுந்து விட்டு எரியும் தீப்பந்தங்களையும் பின்னிரவையும் அங்கு தருவித்தது.

தறிபட்ட தலை குதித்து தரையில் விழும் முன்பாக, கோவில் கிடாவின் முண்டம் அய்யனார் சாமியின் மார்பில் கிடந்த செவ்வந்திக் கதம்ப மாலையோடு உருண்டு புரண்டது. சாமியின் கடை வாய்ப்பகுதியில் கூட இரத்தம் பிசிரவில்லை. சக்கையாக கிடாவின் முண்டம் மண்ணில் விழுந்த வேகத்தில், பீடத்திற்கு முன்பாக சின்னச்சாமி தலை கீழாகக் குத்தி வைத்திருந்த சூலத்தை பிடுங்கி வலக்கையில் ஏந்திப்புறப்பட்டது இருட்டுச்சாமி.

ஊர் வீதிகளில் ஓடி, வீட்டுச் சுவர்களை ஊடுறுவி மாயமாய் மலையாண்டியின் மச்சு அறைக்குள்ளிருந்த இருளோடு இருளாய் ஓசைப்படாமல் சுருண்டு படுத்திருந்தவனை சுற்றிச் சுற்றி வந்து இருட்டுச்சாமி களியாட்டம் போட்டது.

உடலை மூடி இருந்த துண்டுத் துணிக்குள் தனது கால்களையும் இழுத்துப் புதைத்துக் கொள்ள முன்னிலும் சுருண்டு படுக்க முயற்சித்தான்.

வெட்ட வெளியைப் பார்க்கும் மலையாண்டியின் உடற்பகுதியில் தான் ஏந்திப் பிடித்திருந்த சூலத்தைப் புதைக்க, இருட்டுச்சாமியின் வெறி கொண்ட பார்வை குதித்தாடியது.

நீண்ட நேரமாய், படுத்தபடுக்கையிலேயே தனது இயலாமையால் போராடிக் கொண்டிருந்தான். மாயப் பாய்ச்சலாய் வீட்டு முற்றத்திற்கு வந்த இருட்டுச்சாமி அங்கு தூங்கிக் கொண்டிருந்த மலையாண்டியின் தந்தை, மனைவி மக்களின் முகம் பார்த்து கெக்கலிட்டுச் சிரித்து அவர்கள் அனைவரையும் பிணமாக்கி கிடத்தியது.

மலையாண்டியின் வழித்தடமாய் ஓடி வந்து அவனது வயல் வரப்பில் நின்று; விந்தை உருவெடுத்து சல் . . . சல் . . . என சலங்கை ஒலி அதிர வானுக்கும் பூமிக்குமாய் இருட்டுச்சாமி ஆட நிலவற்ற வானத்து நட்சத்திரங்களும் சுழன்றாடின.

இருட்டுச்சாமி, நெட்டை-குட்டை, நொண்டி-முடம், கோரமுகப் பூதகணங்களாய் பல்வேறு உருவெடுத்துப் பெருகியது. கதிர் கட்டும் முறப்பிலிருந்து நெல் நாற்றங்கால் நீரில் இறங்கி கைகளில் பிடித்திருந்த சூலத்தைத் தலை கீழா உயர்த்தி விசைத்து வயல் வெளியில் ஆழமாய் பாய்ச்சிய வேகத்தில் உறுவி எடுத்தன. நீர் வெளியில் சூலமிட்ட துளைகளிலிருந்து இரத்தம் பீரிட்டு அடித்தது. காற்றை வெடித்து, வயல் நீரெங்கும் ஓடிக்கலந்து நீர்க் குருதியாகி அழுத்தமடைந்து சுண்டிச் சுருங்க நெல் நாற்றுகள் செத்து மடிந்த வண்ணமிருந்தன.

ஓடி ஓடி பூதகனங்கள் ஒன்று கூடி இருட்டுச்சாமியாகி, இருட்டுச்சாமி மலையாண்டியின் மச்சு அறைக்குள்ளிருந்த இருளாகி நின்றதில், அவன் சஞ்சலமுற்றுக் கதறி எழுந்து மூடியிருந்த கதவுத் தாழை உடைத்துக் கொண்டு வந்து, வீட்டு முற்றத்தில் தனது மனைவி மக்கள் அனைவரும் சுவாசித்துக் கொண்டிருப்பதை அறிந்த நிலையில், தானும் உயிருடனிருப்பதாய் உணர்ந்தான்.

பின்புறமாய் நகர்ந்து, சுவர் ஓரமாய் சாய்ந்து அமர்ந்த மலையாண்டியின் உடல் வேர்த்து விருவிருத்துச் சிலிர்த்தது. உறக்கத்திலிருந்து அலறி அழுது, தவழ்ந்து வந்து இவனது மடியின் அரவணைப்பில் மீண்டும் தன்னுறக்கத்தில் ஆழ்ந்த குழந்தை மலையாண்டியின் நீர்கோர்த்த கண்களுக்கு ஆறுதல் செய்தது.

சின்னச்சாமியும் மலையாண்டியும் பால்ய சிநேகிதர்களாய் கூடி மகிழ, என்றும் போல் அந்தப் பிரதேசத்தில் பொழுது விடிந்தது.



படிப்பகம்

www.padippkam.com

# தலித் பெண்ணியம்

அ. குணசேகரன்

அண்மைக்காலமாக தமிழ் மற்றும் இந்தியச் சூழலில் பெண்ணியம் குறித்த சிந்தனைகள் புழக்கத்தில் இருந்து வருகின்றன. அவற்றோடு மட்டுமின்றி இச்சிந்தனைகளை அடியொற்றி சமூக மட்டத்தில் பல்வேறு ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகியிருக்கும் பெண்களுக்கு ஆதரவான குரல்களும்


ஓவியம் : பி. மணிவண்ணன்

கலை இலக்கிய வடிவங்களில் மலிந்துக் காணப்படுகின்றன. மனிதப் பிறவியில் முற்றிலுமாக அமுக்கப்பட்ட ஒரு பிரிவினராகிய பெண்கள் சார்பாக அவர்களது உரிமைக்கும் சுயமரியாதைக்கும் ஆதரவாக ஒலிக்கின்ற அந்தக் குரல்கள் இன்று பலரின் கவனிப்பிற்கும் உள்ளாகியிருக்கின்றன. அதன்



படிப்பகம்

www.padippkam.com



காரணமாகப் பல்வேறு புதிய திருப்பங்கள் சமூகத்தளத்திலும் இலக்கியத் தளத்திலும் நிகழ்ந்து வருகின்றன என்பதும் கண்கூடு. எனினும் இந்தக் குரல் எத்தகையோருக்கானதாக இருக்கின்றது என்பதை மேல் கவனத்திற்குட்படுத்த வேண்டிய தேவையும் எழுகிறது. அது பற்றியதான சில முன்வைப்புகளை இக்கட்டுரை மேற்கொள்கிறது.

பரந்துபட்ட சமூகப் பரப்பில் பல நிலையிலும் பெண் ஆணின் மேலுமைக்குக் கட்டுப்பட்டு இல்லற வஸ்துவாக மட்டுமே இருக்க வேண்டியிருக்கிறது. இங்கு அவளுக்கென்று தனித்த சுதந்திரம் எதுவும் அளிக்கப் பெறுவதில்லை என்பன போன்ற நிலைகளை எதிர்த்தும்; கல்வியறிவு பெற்றதன் காரணமாகப் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றும் பொறுப்புகளில், பொருளீட்டலில் ஆணுக்கிணையாக விளங்கியும் கீழாகத்தான் மதிக்கப்படுகின்றாள் என்பதனை எதிர்த்தும்; வேலைத்தளத்திலும் சமூக மட்டத்தில் பிற நிலையிலும் ஆணின் தாக்குதலுக்கும் கேவலப்படுத்

**“தலித் பெண்ணியம் என்பது பெண்ணிலை வாதத்திற்கெதிரான ஒன்றல்ல என்பதோடு அது இதுகாறும் பேசப்பட்டு வரும் பேதாபேதங்களுக்கிடமான பெண்ணியத்துக்குள் மலிந்துக் கிடக்கின்ற உள்முரண்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்கி அவற்றைக் களைவதற்கான சாத்தியப் பாடுகளை முன்வைக்கின்றது. அவ்வாறு முன்வைப்பதன் மூலம் முரண்பாடுகள் நீக்கப்பட்ட ஒரு பெண்ணிலைச் சமுதாயத்தை அது விரும்புகிறது எனக் கொள்ளலாம்.”**

தலுக்கும் ஆளாகின்ற நிலையினை எதிர்த்துமாக ஒலிக்கின்ற இந்தப் பெண்ணியக் குரல் முழுமையும் ஒரு சாராராகிய முன்னேறிய, மத்திய தரவர்க்கத்தைச் சார்ந்தவர்களின் குரலாகத்தான் இருக்கின்றது. இவர்களுக்கு அப்பாலும் பெண்ணுக்குரிய அனைத்து அடையாளங்களுடன் விளங்குகின்ற மற்றொரு சாராராகிய தலித் பெண்களையும் உள்ளடக்கிய சமூக ஓர்மைக்கான இடமோ அல்லது அனைத்துதர வர்க்கத்தைச் சார்ந்த பெண்களுக்குமான ஒருமித்த குரலாகவோ இது இருக்கவில்லை. உயர் மற்றும் நடுத்தர வர்க்கப் பெண்ணிற்கேற்படும் அவலங்கள் யாவும் தலித் பெண்களுக்கும் நேருவதோடு இவற்றிற்கு மேலான அவலங்களும் ஒடுக்கு முறைகளும் அவர்களுக்குக் கூடுதலாக நேருகின்றன. சான்றாகச் சாதியின் பேரால் உயர்சாதிப் பெண்களாலேயே கூட அவர்கள் ஒடுக்கப்படுவதைக் கொள்ளலாம். இத்தகைய ஒடுக்குமுறைக்கு எதிரான முன்வைப்புகளையும் வர்க்க பேதமற்ற பெண் நிலைபாடுகளையும் இதுகாறும் பேசப்பட்டு வருகின்ற பெண்ணியம்-இந்திய, தமிழ்ச் சூழலில் எந்த நிலையிலும் அடையாளப்படுத்தவில்லை. எனவேதான் இதனின்று வேறுபட்டு ‘தலித் பெண்ணியம்’ என்ற தனித்த சிந்தனைக்கு வருவதற்கும் அதன் செயல்தளத்தைக் கட்டமைப்பதற்கான தேவையேற்படுகின்றன.

உயர் மற்றும் நடுத்தர வர்க்கப் பெண்கள் பொருளீட்டல் காரணமாக மேற்கொண்டுள்ள தொழில் மற்றும் நிருவாகப் பொறுப்புகள், குடும்பப் பொறுப்புகள் இவ்விரண்டையும் சுமக்கின்ற நிலையில் இவை அவர்களுக்குக் கூடுதல் சுமையையும் சுதந்திரமின்மையையும் உளைச்சலையும் உண்டு பண்ணுவதால், அவற்றுக்கெதிரான புலப்பாடுகளை பல்வேறு ஊடகங்களின் வழியாக வெளிப்படுத்தியும்; தங்களின் வசதி வாய்ப்புகளுக்கேற்ப அறிவியல், தொழில் நுட்ப உபகரணங்களைப்



படிப்பகம்

www.padippkam.com



பயன்படுத்தியும்; தங்களுக்குக் கீழாகப் பணியாட்களை நியமித்துக் கொள்(ல்)வதன் பொருட்டும் அச்சுமையினைக் குறைத்துக் கொள்ள இயலுகிறது.

ஆனால் அடித்தள வர்க்கப் பெண்கள் மேற்சுட்டிய இரட்டைச் சுமையினை சுமப்பதோடன்றி மேலும் சிலவற்றாலும் பாதிப்புக்குள்ளாகின்றனர். சான்றாக அத்தியாவசியப் பொருளாதாரத் தேவைக்கான அன்றாட கூடுதல் உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியமின்மை. அங்கே அவர்களுக்கு நிகழும் உபாதைகள், அவர்களை இயக்கும் ஆதிக்கச் சக்திகளின் தாக்குரவுகள் இன்ன பிறவற்றையும் கொள்ளலாம். உயர்சாதிப் பெண்களைப் போன்று இவற்றுக்கெதிரான சக்தியைப் புலப்படுத்துவதற்கான ஊடகங்களோ அல்லது குறைத்துக் கொள்வதற்கான வசதி வாய்ப்புகளோ அறிவியல் தொழில் நுட்ப உபகரணங்களை உபயோகிக்கும் வாய்ப்புகளோ இவர்களுக்குச் சாத்தியமில்லை - அறிவியல் கண்டுபிடிப்புகள் அடித்தள மக்களைச் சென்று சேராமை அல்லது பரவலாக்கப்படாமை குறித்த சிந்தனை வேறொரு தளத்தில் நின்று சிந்திக்கத்தக்கது - எனவே நித்தியக் கடமையாக இவை அனைத்துடனும் உழன்று போராடி அல்லலுறும் நிலை தவிர மாற்று வழி ஏதுமில்லை.

எனவே, பெண்ணியம் என்ற பொதுப்பார்வைக்குள் இவ்விரு நிலைப்பட்ட வர்க்க பேதமுடைய பெண்கள் அனைவரையும் ஒரு நிலையில் வைத்துக் காண்பது என்பது யதார்த்தத்திற்கு மாறான ஒன்றாகவே படுகிறது. பெண்ணிய நிதர்சனமென்பது வர்க்க பேதத்திற்கு இடமளிக்காத வொன்றாக இருக்க வேண்டும். அதற்கு வாய்ப்பில்லாத சூழலில் தான் - இந்திய அல்லது தமிழ்ச் சூழலில் மட்டும் - தலித் பெண்ணியம் பற்றிய கருத்தாக்கம் தேவைப்படுகிறது. இத்தேவையின் அடிப்படையில் முதலாவதாக பெண்ணியம் பற்றிய சிந்தனை நிலையிலும் படைப்பாக்க நிலையிலும் காணப்படுகின்ற முரண்பாடுகள் அல்லது சமத்துவமின்மைகள் தலித் பெண்களுக்குரிய இடமறுப்புகள் ஆகியவற்றை இனங்காணுவது; இரண்டாவதாக சுதந்திரத்தையும் சுயமரியாதையையும் பேணுதற்காக அவற்றிற் கெதிரான சக்திகளினின்று விடுபட்டு உரிய செயல்தளத்தைக் கட்டமைப்பது மூன்றாவதாகப் பெண் என்ற ஓர்மைக்குள் ஐக்கியப்படுவது என தலித் பெண்ணியத்தின் இலக்குகளை வரையறுத்துக் கொள்ளலாம்.

இவற்றுள் செயல்தளம் என்று வரும்போது ஏற்கனவே இருக்கின்ற கலையிலக்கிய வடிவங்கள் கோட்பாடுகள் ஆகியவற்றுள் இதற்கான அடையாளங்கள் அல்லது அடையாளமின்மைகளை இனங்கண்டு புதிய பதிவுகளை ஏற்படுத்துவது என்பதை முன்னெடுத்துச் செயல்படுவதாகக் கொள்ளலாம்.

மூன்றாவதாகச் சொல்லப்பட்ட 'பெண்' என்னும் ஓர்மைக்குள் ஐக்கியப்படுவது என்பதானது தலித் பெண்ணியம் கொண்டிருக்கின்ற உயர்ந்தபட்ச பெண்ணிலை பற்றிய பயன்பாட்டு அம்சமாகும். அஃதாவது தலித் பெண்ணியம் என்பது பெண்ணிலை வாதத்திற்கெதிரான ஒன்றல்ல என்பதோடு அது இதுகாறும் பேசப்பட்டு வரும் பேதாபேதங்களுக்கிடமான பெண்ணியத்துக்குள் மலிந்துக் கிடக்கின்ற உள்முரண்பாடுகளைக் கேள்விக்குள்ளாக்கி அவற்றைக் களைவதற்கான சாத்தியப் பாடுகளை முன்வைக்கின்றது. அவ்வாறு முன்வைப்பதன் மூலம் முரண்பாடுகள் நீக்கப்பட்ட ஒரு பெண்ணிலைச் சமுதாயத்தை அது விரும்புகிறது எனக் கொள்ளலாம். இந்நிலை உருவாகின்ற சூழலில் 'தலித் பெண்ணியம்' என்கின்ற நோக்குத் தவிர்க்கப்பட்டு பெண் என்கின்ற பொதுமைச் சிந்தனையை



படிப்பகம்

www.padippkam.com



ஏற்க முடியும். இச்சூழலில்தான் கருத்து மாறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் பெண்ணும் ஒரு தலித்தாக அங்கீகரிக்கப்பட முடியும்.

தலித் பெண்ணியம் என்றவுடன் பொதுவாகச் சில கேள்விகள் முன் வைக்கப்படுகின்றன. என்னவெனில், பெண்ணியம் என்பதே பெண்ணுக்கான உரிமையை, விடுதலையை மையப்படுத்தி

**“ பெண் தன்னுடைய இருப்புக்கான அங்கீகாரத்தைத் தேடும் போது அதற்கு எதிராக நிற்கின்ற எந்த ஆண் சக்தியுடனும் மோத வேண்டித்தான் இருக்கும். இதில் 'நம்ம சாதி ஆண், அவங்க சாதி ஆண்' என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பதில் நியாயமில்லை. ”**

எழுப்பப்படும் குரலாகத்தானே இருக்கின்றது - அதுவும் இப்போதுதான் அங்கொன்றும் இங்கொன்றுமாக லேசாக ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. இதற்குள்ளாகப் புகுந்து தலித் பெண்ணியம் பிற பெண்ணியம் என்றெல்லாம் சாதி அடையாளம் பூசிப் பிரித்துப்பார்ப்பது எந்தவிதத்தில் சரியான வாதமாகும் எனக் கேட்கப்படுகின்றது.

இக் கேள்வியின் ஆதங்கத்திற்குள் ஒரு நியாயம் இருக்கச் செய்தாலும் ஒட்டு மொத்தச் சமுதாயத்தில் பெண்களின் நடவடிக்கைகளைக் கவனிக்கும் போது ஒவ்வொரு பெண்ணும் தன் சாதி, இன அடையாளங்களை கிஞ்சித்தும் இழக்காமல் - ஒரு பாப்பாத்தியாகவும், வெள்ளாழச்சியாகவும் முதலியார் வீட்டு அண்ணிகளாகவும் செட்டியார் வீட்டு ஆச்சிகளாகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தம்மை வெளிக்காட்டிக் கொள்வதோடு அவ்வச் சாதிகளின் அதிகார குணாதிசயங்களையும் மினுக்கல்களையும் கட்டிக்காப்பது - போற்றிவருகிற நிலையில் இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளாமல், இங்குள்ள சூழலைத் தவிர்த்துவிட்டுப் பேசுவதால் அப்பெண்ணியத்திற்குள் ஒரு பொதுப் பார்வைக்கு இடமில்லை. குறிப்பாக பெண்களுக்குள்ளேயே நிகழுகின்ற ஒதுக்கல்கள் பற்றிப் பேசப்படவில்லை. எனவே தான் இவ்வொதுக்கலுக்கு ஆளான தலித் பெண்களின் நிலைப்பாடுகள் குறித்துத் தனியே பேசவேண்டிய தேவை எழுகிறது. அவ்வாறு பேசப்படுவது - மேலே குறிப்பிட்டது போல் - பெண்ணியத்திற்கு எதிரானதாக அல்ல. மாறாகப் பெண்ணியத்தின் தொடக்க கட்டமாகிய இத்தருணத்திலேயே இது போன்ற மாற்றுச் சிந்தனைகளை முன் வைப்பதன் மூலம் இவ்வொதுக்கல்கள் தொடர் நிகழ்வாக அல்லாமல் அவையும் ஊடாகக் கவனத்தில் கொள்ளப்பெற்றுப் பெண்ணியம் சரியான தடத்தில் இயங்க வழிவகை செய்கிறது என்பதாகக் கொள்ள வேண்டும். இதில் சரியா தவறா என்ற கேள்விகளுக்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை.

இதனோடு எழுப்பப்படுகின்ற மற்றொரு கேள்வி, தலித் பெண்ணியம் என்று கூறும்போது அது தலித் இலக்கியத்தின் வளர்ச்சியைப் பாதிக்காதா என்பது. தலித் இலக்கியத்தினடியாகப் பெற்ற புரிதல்தான் ஒரு வகையில் தலித் பெண்ணியத்திற்கான தடத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இது முழுக்கவும் பெண்ணியத்திற்குள் நிகழ்ந்து வரும் ஒதுக்கல்கள் அல்லது இடமறுப்புகளை அடையாளப் படுத்துவதாக இருக்குமே தவிர தலித் இலக்கிய வளர்ச்சியைப் பாதிக்காது. எந்த ஒரு வரவும் சரியான பாதையில் இயங்கும் ஒன்றின் வளர்ச்சியைப் பாதித்துவிட இயலாது.

பெண் தன்னுடைய இருப்புக்கான அங்கீகாரத்தைத் தேடும் போது அதற்கு எதிராக நிற்கின்ற



படிப்பகம்

www.padippkam.com



எந்த ஆண் சக்தியுடனும் மோத வேண்டித்தான் இருக்கும். இதில் 'நம்ம சாதி ஆண், அவங்க சாதி ஆண்' என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பதில் நியாயமில்லை. பல்வேறு ஒடுக்குமுறைகள் குறித்து சாடி வருகின்ற நிலையில் ஊடாக, தன் உடன் பிறந்த சகோதரனாகிய ஆண்பிள்ளைக்கு தன் வீட்டில் அளித்து வந்த முக்கியத்துவங்களை, பாமா தன் படைப்பில் சாடுவது போல.

தலித் பெண்ணியம் என்ற வாதத்தை முன்வைப்பதற்கான காரணங்களைப் பொது நிலையிலிருந்து நோக்குவதை விடுத்து படைப்பாக்க நிலையிலிருந்தே விளங்கிக் கொள்ளலாம். சான்றுக்காகத் 'தமிழ் நாவல்' என்ற ஒரு பரப்பை மட்டும் எடுத்துக் கொள்வோமானால் இப்பரப்பில் பிரதாப முதலியார் சரித்திரம் தொடங்கி எண்பதுகளின் இறுதி வரையிலான அனைத்திலும் இடம் பெறுகின்ற பெண்களின் குரலை உய்த்துணருவோமானால் அவையாவும் ஒரு சார்புடைய பெண்களின் குரலாக இருக்கக் காணலாம். மாதவையாவுக்குப் பிறகு பெண்கள் பற்றிய படைப்பாக்கச் சிந்தனையில் மிகவும் சிறத்தை உடையவர்களான ஜெயகாந்தன், ராஜம் கிருஷ்ணன், தி.ஜானகிராமன், பிரபஞ்சன் உள்ளிட்ட பலருடைய படைப்புகளில் பெண்களுக்கான சுவடுகளைக் காண முடிந்தாலும் அனைத்துதரப் பெண்களையும் உள்ளடக்கிய ஓர்மைக்குரிய தன்மைகளை உடையனவாகக் கொள்ளவியலாது. இவர்களது நாவல்களில் இடம் பெறுகின்ற பெண்மாந்தர்கள் யாவரும் முற்போக்கு எண்ணங்கொண்ட செல்வந்தர் வீட்டுப் பெண்கள், அலுவலகப் பணியாளர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் மற்றும் கற்றுத் தேர்ச்சியுடைய உலகியலுணர்ந்த பெண்கள் இப்படியாகத்தான் இருப்பர். மாறாக ஒருவரிடத்தும் உழைக்கும் அடித்தள வர்க்கப் பெண்களின் பிரதிநிதிகளைக் காணமுடியாது. அப்படியே ஒரு சில பாத்திரங்கள் தெரிந்தாலும் அவை மேற்சுட்டிய பெண்களின் ஏவலுக்குக் கட்டுப்பட்டு புழுக்கை வேலைச் செய்யும் பெண்களாகவோ அல்லது வேறுவிதமான கேவலமான பாத்திரங்களாகவோ தானிருப்பர். பெண்கள் பற்றி எழுதும் பெண்கள் படைப்பில் கூட இதற்கான இடமறுப்பு வியப்பிற்குரியது. விதிவிலக்காக ஜெயகாந்தனின் உன்னைப் போல் ஒருவன், யாருக்காக அழுதாள் போன்ற நாவல்களில் வரும் சில பாத்திரங்களைக் கொள்ளலாம். அதே வேளையில் மூங்கில் காட்டு நிலாவில் வரும் நிலா, அடித்தள வர்க்கப் பெண்களின் பிரதிநிதி போன்று தோற்றமளித்தாலும் கதைப்போக்கில் பொதுவுடைமைக் கொள்கைகளை உள்வாங்கிக் கொண்டு செயற்படும் பாத்திரமாகக் காட்டப்படுகிறது. இவ்வாறு அருகிய நிலையில் படைப்புத் தகுதி பெற்ற ஒன்றிரண்டு பாத்திர வார்ப்புகள் கூட தத்தம் சுயங்களோடு வெளிப்படாமல் மாற்றுச் சாயமேற்றிய நிலையில்தான் வெளிப்பட்டன. இது போன்ற நிலையினை பொன்னீலன் போன்றோர்களின் பாத்திர வளர்ப்புகளிலும் காண முடியும்.

ஆனால் 90களின் துவக்கத்தில் இதற்கு மாறான நிலை உருவாகியிருப்பதை உணர முடிகின்றது. இக்காலக் கட்டத்தில் எழுந்த தலித் இலக்கிய முயற்சிகளை இதற்கான உந்து சக்தியாகக் கொள்ளலாம். குடும்பத்திலும், வேலைத் தளத்திலும் சாதியின் நிமித்தமாகவும் தலித் பெண்கள் பெறும் அவலங்களை சிவகாமி, பாமா போன்றோர் தம் படைப்புகளில் - சிவகாமியின் 'பழையன கழிதலும்', 'ஆனந்தாயி'; பாமாவின் 'கருக்கு', 'சங்கதி' போன்றவற்றில் - பதிவு செய்துள்ளனர். அவை போன்று அபிமானியின் 'நோக்காடு' என்ற கதைத் தொகுதியில் 'நோக்காடு' என்ற கதை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியது. மேற்சுட்டியவற்றுள் தலித் பெண்ணியத்திற்கான சுவடுகளைக் காணலாம். இவைபற்றிப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் விலாவாரியாக விளங்கிக் கொள்ளலாம்.



படிப்பகம்

www.padippkam.com

# "சூ ரி"

*சிறுகதை*

## பாப்லோ அறிவுக்குயில்

*தீஞ்சிக் கெடக்கும் கள்ளிகளை உயிர்செத்த முள்ளையும் சேர்த்து ஆடுகள் பசிதாங்காமல் சுரண்டிக் கொண்டிருந்தன. அனல் மூச்சுவிடும் தைல மரங்களின் வாசம்*



*காடுகளெங்கும் காங்களையும் மீறி வழிஞ்சிக் கொண்டு... தவகசக்கி மோந்து முட்டும் குருத்தை திருகி பொடி போட்டு போலியாய் 'ஆச்சு ஆச்சுண்ணு' தும்பிக் கிட்டு குதியாட்டம் போடும் ஆடு மேய்க்கும் சிறுசுகளெல்லாம் சுழல் பாட்டு பாடி சருகுகளோடு பறந்து கொண்டிருந்தது செவ்வல் புழுதி.*

*கௌதாரியின் கேக்கலிக்கத்தில் மலர்ந்து சிரித்து கீரியும் மொசலும் மறஞ்சி வாழ இடங் கொடுத்த வெளாரிகளெல்லாம் யார் யார் வூட்டுக்கோ வாசப்பெருக்கும் வரலாராய் போய் விட அதன் வேர் செத்த எடமெல்லாம் எருவாகி கிளை பரப்பி முந்திரிக் காடுகளாய் ...அடர்த்தியா தவகளோடு நீலப் பூக்கள் கெலிக்க காலா*



படிப்பகம்

www.padippkam.com

காலமாய் கம்பீரமா நிண்ணு கொண்டிருந்த காசா மரங்களெல்லாம் தவயும் நொழலும் கொடுத்து கொரணா பூச்சிகளை வாழவெச்ச காலம் போய் காலங்கவலை வீசிப்புரளும், ஆரசுபதி-முந்தரி காடுகளாய் ‘கெவுருமண்டு பாரஸ்டாகிப்’ போன காலத்ததான் என்ன சொல்ல?

வாயலய கொரட்டிலடக்கி கொதப்பிக் கொண்டே அலயும் உருமநேர திகுதிகு தணலயே வெறிச்சி கிட்டிருந்தா மூப்பா. முகடு ஏறிய கால ஓதறி கிழிஞ்ச முந்தியால் கடவாயிலிருந்து வழிஞ்ச வெத்தில எச்சிய தொடச்சிக் கிட்டே தூரப்போயி குந்தினா. பச்சைக் கண்டு ஓடும் ஆடுகள வளச்சிக் கொண்டிருந்தன சிறுசுகள். “பாக் கூவே . . . பாக் கூவே. . .” சூர முள் கொத்த ஒடிச்சி கையிலெடுத்துக் கொண்டு தொண்ட வலிக்க கொராக் குட்டியொண்ணை தேடிக் கொண்டிருந்தா அஞ்சலக்குட்டி கூப்புட கூப்புட கொராக் கத்துங்குற நம்பிக்க வத்திப் போய் குரல் ஒடஞ்சி அழுகையானது.

“யார்ரீ அவ அழுவுறது இஞ்ச வாடி, ஓங்கொராக் குட்டி நொழல்ல அடஞ்சி கெடக்குடீ” சத்தமா குரல் கொடுத்தா மூப்பா. அஞ்சலக் குட்டிய பாக்க பாக்க, கிறிஞ்சிப் போன மாராப்புத் துணியும் குட்ட பாவாடையும் இப்பவோ அப்பவோங்குற அவ வயசும் அறுபது வருஷ சுருக்கம் தூசியா வெலக பளபளக்க, கருகருண்ணு முடி காத்துல புரள கலகலண்ணு கெலிச்சிக் கொண்டிருந்தா ‘மூப்பாத்தி’.

கண்ணுக் கெட்டிய தூரம் வர காசா பச்சத் துப்பிட்டியா கௌ பரப்பி குளுமைய வுடாக காத்து ஊதா பூ உதிர அசஞ்சிக் கொண்டிருந்தது; வாக, வன்னி, பால அத்தி சேத்தாளிகளோடு சூர; கார, கௌா, பிலித்தொரடி வௌாரி பொதருவளோடு காடெங்கும் காசா ஆட்சிதான். வேத்தாளுள அலயவிட்டு ஓடும் காட்டுக்குள்ளே போவும் ஒத்தயடிப் பாத. மூப்பாத்திக்கு பத்து இல்லாட்டி பன்னெண்டு வயசிருக்கும். ஆறு அண்ணமார்களுக்கு ஒரு அர்க்காணி தங்கச்சியா நல்ல வெவசாய குடும்பத்துல மச்சு வீட்ல பொறந்தவ.

சிறுசா இருக்கும் போதே கண்ணாலம் கட்டிக் கொடுத்திட்டாங்க தினேக்கும் ஆடோட்டிக் கிட்டே போவுணும். ஒரு நா அப்படித்தான் காட்ல ஆருமில்ல, ஆட்டுக்கார புள்ளவோ தெசைக்கு ஒண்ணா ஆடு வளைக்க பொயி டுச்சிங்க.

“ஏப் பொருவே இஞ்ச வா”

“யேங்க மாமோவ்”

“களி கொண்டாந்திருக்கேன் இஞ்ச வாடிங்குறேன்”

சிமக்கருவ போல கருகருண்ணு ஒடம்பு தேக்காட்டம் நல்ல ஓசரம் அய்யனாரு சாமியாட்டம் மொரட்டு மீச பாக்க பயமா இருந்தது மூப்பாத்திக்கு ஓதரலெடுத்தது.

“அடி பயந்தாங்கொள்ளி இஞ்ச வாடி மாமங் கூப்புடுறேன்ல்ல”

“... ... ... ... ...”

“கஞ்சிக்குடிக்காம கருக்கல்லேயே வந்துட்டிபாமே ஆயா சொன்னது”

“வவுத்த பசிக்குல அதான் . . .”

“கைய கால அலம்பி கிட்டு வாடி, ஏற பாதியிலேயே வுட்டுட்டு வந்துட்டேன் கோஞ்சாமி ஆண்ட பொல்லாதவடன் சுருக்கா போவாட்டி அவ ஆத்தாளப்போவ கொட குந்தாணி அந்துப் போறாப்புல வைவான்.”

சூரபொதர அடுத்து தண்ணிக்குழி, தண்ணி தெளிஞ்சிப் போயி கெடந்தது, கைகுவிச்சி தண்ணியள்ளி முவங்கழுவி, வாயக்கொப்பிளிச்சி துப்பிட்டு புழுதி அப்பிக்கெடந்த கைய கால கழுவிட்டு வந்தா மூப்பாத்தி. கலயத்தில் களி,



படிப்பகம்

www.padippkam.com

மூடியில ஊருகா மொளா உப்புக்கல்லு கொஞ்சம் . . . கலயத்தில் கைய உட்டு கரச்சிக் கொடுத்தான். மிரள மிரள குடிச்சிக் கொண்டிருந்தா. அவசரத்தால் பொறயேரியது தலய தட்டி விட்டான். கலயத்த எடுத்துகிட்டு கழுவப் போனா, "இங்கக் குடுடி ஒனக்கு பத்துபோவ களுவத் தெரியாது அப்புறம் ஆயா கொதறிபுடும்".

"வெத்தல பாக்கு போட்டுக்க".

"வேணாம்...பயக்கமில்ல," கால் பெருவிரல பாத்து கிட்டே சொன்னா.

"இந்தாடி போட்டுக் கேங்குறேன் . . . ." பாக்கிட்டியில வெச்சி களிபாக்க ரெண்டாக்கி வெத்தலயில சுண்ணாம்பத் தடவிக் கொடுத்தான். பயந்துகிட்டே வாங்கி வாயிலப் போட்டுக் கொதப்பினா. காம்புப் பொயலய திருவி வேண்டுமுண்ணான் "வேணாம் தலய சுத்தும் நாத்தம் ஒமட்டுது". சரிண்ணு அவன் மட்டும் போட்டுக் கொண்டு அடர்ந்த காசாப் பக்கம் கூட்டிப் போனான். சுத்திலும் சூர படந்து கெடந்தது.

வெளாரி மெலறு ஒடிச்சி தரய கூட்ட கூட்ட மேஞ்சிக் கிட்டிருந்த கொரணாப் பூச்சிகளெல்லாம் திமுதிமுவென கொம்பால மண்ண நோண்டிகிட்டு உள்ள போயி மறஞ்சது. சின்ன கொம்போடு ரெண்டங்குல நீளத்துல கருப்பா இருக்கும் முத்துன கொரணா. சிலதுக பழுப்பு நெறமா இருக்கும் அதுலான் வெலையாத கொரணா.

ஆடியிலிருந்து அய்ப்பசி வரைக்கும் கொரணாவின் காலம். மண்ண நோண்டிக் கொண்டிருந்தத எல்லாம் புடுங்கி கெடாசினான். தூரப்போயி விழுந்ததை காட்டுப் பட்சிகள் பொறுக்கிக் கொண்டிருந்தன. " இஞ்ச வாடி . . ." சன்னக் குரலில் கூப்பிட்டான். "வாணாம் மாமா ஆடுவ எங்காச்சும் வழி தப்பிப் பொயிடும்" ஒடம்பு நடுங்கியது. பயந்து போயி நிண்ணு கொண்டிருந்தவளை இழுத்து உக்கார வெச்சான். "வாணாம் மாமா ஆடு வளைக்கப் போவுணும் வுடு வுடு . . ." மூச்சு காந்துது. மோர மோர பொயல நாத்தம் ஒமட்டியது. அனுபவத்திராத வலி ஒடம்புக்குள் மின்சாரமா பாஞ்சது 'விண் விண்ணுன்னு' தெறித்தது. கொரணா மூர்க்கமா முண்டி முண்டி கொம்ப நொழச்சது. "ஆ . . . ஆத்தா . . ." அலறினாள். முன்னிலும் அதிகமா அழுக வெடிச்சு கௌம்பியது. கண்ணாலத்துக்கு எடுத்துக் கொடுத்த பூப்போட்ட பாவாட முச்சூடும் ஈரமா . . . தொட்டுப் பாத்தா அழுக ஓங்காரமானது.

"ஏப்பொருவ இஞ்சப் பாரு என்ன, என்னா ஆயிடுச்சிண்ணு இப்புடி ஒப்பாரி வெக்குரே? சரி சரி கௌம்பு." கண் செவந்து போய் இருந்தது, கை தாங்கலாய் தூக்கி விட்டான் நடக்க முடியவில்ல. அடியெடுத்து வெக்கும் போதெல்லாம் சீவம் போராப்புல வலி புடுங்கி எடுக்குது. ஆத்தாளையும், அப்பனையும் நெனைக்க நெனைக்க "புருபுருவென" கண்ணு தண்ணி கொட்டியது. 'மொரட்டு கள்ளன்ட கொடுத்தீட்டிங்களே ஆத்தா . . ." முனகிக் கொண்டே பின்னால் சென்றாள்.

"அண்ணேய் என்னண்ணே ஆச்சு மூப்பாத்திக்கு"?

"அது ஒண்ணுமில்ல புள்ளேய் எல்லாம் நல்ல சேதிதான், இவக் கஞ்சி குடிக்காம வந்துட்டா கேவுருகூழ கொண்டுட்டு வந்தேன், ஒன்னுகிட்ட, ஆட்ட பாத்துக்க சொல்லிபுட்டு போனேனே, அப்ப அவ கூழு குடிச்சிகிட்டு இருக்குறப்பவே பாத்தேன் பாவம் பசியோட இருக்காளே குடிக்கட்டுமேண்ணு பேசாம இருந்தேன், இப்பதான் வூட்டுக்கு அழச்சிட்டு போறேன் இவ என்னடான்ன பயப்படுறா பச்சப் புள்ளயாட்டம், மூதி அழுவுறத பாரு கூப்புட்டு செத்த ஒச்சிவுடு புள்ளே".

வள்ளியம்ம மூப்பாத்தியிடம் காதோரம்



படிப்பகம்

www.padippkam.com

ஏதோ சொன்னா "சும்மா இப்புடி ஆவல, அல்லான் அந்த மொரட்டு மனுஷனாலதான்" தொண்டக்குழி வர எம்பி வெளிவந்த வாத்தய முழுங்கிகிட்டா ஏனோ சொல்ல மனம் வல்ல. ஆடுகள பாத்துகிறேன்னு வள்ளியம்ம சொல் லிட்டா. பேசாம கூடவேப் போனா. விசயத்த கேள்விப்பட்ட ரெண்டொரு கெழவிகள் மொவத்தை வருடி ரெட்டி முறித்தார்கள்.

"நல்ல நாள்லதான் ஆளாயி இருக்கா மவராசி நல்லா இருடி".

வெய்யில் வெளிய தலகாட்ட முடியாத அனலாய் வீசிக் கொண்டிருந்தது. உக்கிரமா வீசும் தணல் காத்துல மேயமுடியாம நொழலில் அசை போட்டுக் கொண்டிருந்தன ஆடுகளெல்லாம். ஆட்டுக்கார புள்ளவோ காரப்பழுத்த கொறிச்சிக் கொண்டே ஊருகத ஒலகத்துக்கத பேசிக் கொண்ருந்தன, பசி மறக்க கொதப்பிக் கொண்டே.

வெவ்வேறு சோடியுள்ள பழுப்பு, செப்பு நெறமுள்ள லப்பரு செருப்ப போட்டுக் கொண்டு காட்ட ஒட்டியுள்ள இருள ஊட்ல தண்ணி குடிச்சிட்டு வர கௌம்பினா மூப்பா; செவலப்பய கிட்ட ஆட்டப் பாத்துக்க சொல்லிபுட்டு. புள்ளவோகளின் செலிப்புச் சத்தம் கருக்கும் அனலையும் தாண்டி முந்தரி காடெங்கும் தெறித்தன ஒலியலைகளாய்.

கண்ணாலமான புதுசுல அப்பன் வூட்டுக்கே ஓடிப் பொயிடுலாமின்னு இருக்கும் மூப்பாத்திக்கு அவ பொறந்து வளந்தது எல்லாம் டவுனுப்பக்கம். வாக்கப்பட்டதோ சுத்தப் பட்டிக்காடு. தெருவெங்கும் வூடு பாக்கியில்லாம மஞ்சத் தொவைக்கப்பட்டு கயிறுகளில் தோர ணமாய் தொங்கிக் கொண்டு ஒரே நாத்தத்த கௌப்பிக் கொண்டிருக்கும் மாட்டுக்கறிகள். இவளும் திம்பாதான் ஆனாக்க செத்துப்போனத இல்ல. பொறந்தவூட்டுல இவ அப்பன் தலாரிங் குறதனால உசுருகறி போடுறானுவ ரெண்டுகூறு மூணுகூறு கொடுத்தனுப்பானுவ, மூப்பாத்தி ஆயா வாய்மணக்க கொழம்பு வெச்சிக் கொடுப்பா. ருசி அப்படி இருக்கும். இங்க அப்புடியா? ஆண்ட வூடுவள்ல சாவும் மாடுவள தூக்கிகிட்டு வந்து சுருவ்ாட்டுல வெச்சி தோல உரிச்சிகிட்டு கறிய கூறு போட்டு விக்குறானுவ. இந்த நாற கறிக்குதான் நாமுந்தி நீமுந்தி அலயுறாளுவ. திங்காட்டாலும் ஆக்கிப் போட்டுத்தானே ஆவுனும் மாமனா காரரு தோலுக்கு உப்புப்போட்டு பாடம் பண்ணி மொள எடிச்சி காய வெப்பாரு. காயப்போடுற தோலுல இருந்து வீசுர கவிச்சி இருக்கே, அப்பப்பா கொடல புடுங்கி எடுக்கும். புதுசா ஆள்கூப்ட வர்ரவங்க மூக்குல வெச்ச கைய உடராம ஓடணும். என்னுமோ தலய நீட்டியாச்சி குடத்தனம் செஞ்சித்தானே அவுனும். இல்லன்னா ஊரு செருக்கிவ 'அவுசாரி முண்டேன்னு' கெக்கலிக் கொட்டுவாளுவ.

காத்தாலேயே மூப்பாத்தி மாமியா எழுந்திருப்பா, மாமனாரும் கக்கிக்கழிய எடுத்துக்கிட்டு கௌம்பிடுவாரு, கையில லாந்தரு இருக்கும் தோண்டி தளும்பி வழிய வழிய போவா கெழவி கருக்கல்ல போறவங்க சூரியன் கௌம்பாங் கட்டியும் வந்திருவாங்க. வேடிக்க பாக்குறதோட சரி கிட்டப்போயி மாமியாளுக்கு ஒத்தாசய எதுவும் செய்யமாட்டா மூப்பாத்தி. காரணம் கொர்ணாபூச்சிதான். 'அய்யே .... இப்ப நெனைச்சாலும் அருவெறுப்பா இருக்கு. அப்ப ஒருமொற கேவுரு பஞ்ச காலம் காலம் வந்தது. சோத்துத் தண்ணிக்கு இல்லாம மக்க மனுசங்க மடிஞ்சிகிட்டிருந்த காலம். கொரணாதான் பசிபோக்கி எல்லாத்தையும் வாழ வெச்சது.

கெழவியோட நச்சரிப்பு தாங்க முடியாம ஒருநா கூடப்போனா மூப்பாத்தி. மூடிக்கெடந்த காசாதவகளை எல்லாம் அரிஞ்சு கெடாசிட்டு குளுமைக்கு வெளிய வந்து மேஞ்சிகிட்டு திரியும் கொருணாக்களை எல்லாம் புடுச்சி புடுச்சி



படிப்பகம்

www.padippkam.com

தண்ணிப் பானைக்குள்ள போடுவா கெழவி. வெளைஞ்ச கொரணாக்கள் மண்ணுக்குள் மறஞ்சிக் கெடக்கும். தப்புக் கள்ளைய வெட்டி எடுப்பது போல, களக்கட்டால கொத்தி தலகாட்டுறத புடுங்கி தோண்டிக்குள்ள போடுவா. தோண்டி முழுசும் கொரணா . . . கெழவனும் கெழவியும் ஆளுக்கொரு தோண்டிய தூக்கி கிட்டு கௌம்புவாங்க. இவப்போற அண்ணைக்கு மட்டும் மாமியா தோண்டிய ஊடுவர தூக்கிக் கொண்டு வந்து தருவா.

எப்படியோ நாலு புள்ளவோளுக்கு தாயாயிட்டா, பெரியவன் பொஞ்சாதிக்கு இவள கண்டாலேப் புடிக்காது. எரிஞ்சி எரிஞ்சி விழுவா. எதுக் கெடுத்தாலும் குத்தம் கொறதான் இது சரிப்பட்டு வராதுண்ணு சின்னமவன் கிட்டதான் கெடக்கா. இப்ப அவன்தான் கஞ்சி ஊத்துறான்.

தைல மரங்கள ஒட்டியுள்ள வேலியிலே இருந்து தலாட்டி சிரிச்சது கண்ணுவலிப் பூ. முன்னப்போல இல்ல, இப்ப ஊரே ரொம்பத் தான் மாறிப்போச்சி. பொம்பள புள்ளவோ எல்லாம் தீப்பெட்டி ஆபிசுக்கும் முந்திரிகொட்ட ஒடைக்கும் கம்பெனிக்கும் வேலைக்கும் போறாளுவ. வெதவெதமா லவுக்க தாவணி போட்டுகிட்டு வாலட்டி கிட்டுக்லல திரியுறாளுவ. தெருவும் இப்பலாம் ரெம்பத்தான் மாறிக் கெடக்கு. தெருவுக்குள்ள நுழைஞ்சிட்டா குடியானுவ பயக மணிக்கணக்கா பேசிபுட்டுல்ல போறானுவ மூக்கப் புடிக்காமலேயே. சேதி கேட்க ஒரு லேடியா, முன்னப் போல கோவலன் கூத்து கர்ணமகாராசன் நாடகம் வில்லுப்பாட்டு எதுவும் இப்ப இல்ல, எல்லாம் சுழி மாறிப் போச்சி கண்ணாலம்னா, எழவு கருமாதி எல்லாக் காடாத்துக்கும் படம் காட்டுறானுவ. 'லவிலவியா' வந்து சிரிக்கிறானுவ, பேசுறானுவ இவளுகளும் குதியாட்டம் போட்டுகிட்டு ஆடுறாளுவ. இப்ப பொறந்த வாண்டெல்லாம் வீதியோ வீதியோன்னு கிட்டு திரியுதுங்க. எல்லாம் கலிகாலம்டாப்பா அது அது சேத்து புடிச்சிட்டு அலையுதுங்க. அப்பப்பா மூப்பா கெழவி பொலம்பித் தீப்பா.

கண்பார்வையும் கொறஞ்சி கொண்டே வருது. அவசோடி காரியெல்லாம் மவராசியா போய்ச்சேந்திட்டாளுவ. 'என்ன மட்டும் கூட்டிக்க மாட்டேங்குறியே ஒரகார மாரியாயீ. . . யாரிட்டமும் இப்பலாம் மூப்பா பேசுவதே இல்ல. விடிஞ்சதும் தரிசுக்காட்லதான் முழிப்பா. ஆடு மேய்க்கும் புள்ளவோதான் தவ அறுத்து போடும். ஆடு வளைச்சிக் கொடுக்கூங்க. எல்லாம் அப்பாயி அப்பாயின்னு கிட்டு கதகேக்குதே அந்த பாசத்ததான் என்ன சொல்ல? ஒரு நாளைக்கு ஆடு மேய்க்க போவாட்டா சின்னவன் பொஞ்சாதி இல்லாது பொல்லாததெல்லாம் நொள்ளச் சொல்லு. நொப்பளாங்கிச் சொல்லுச் சொல் லுவா. ஏதோ சின்னவன் பொஞ்சாதிய அதட்டி வைச்சிருக்கான். இல்லாட்டிப் போனா இவளும் பெரியவன் பொஞ்சாதிய போலவே ஆன இந்நேரம் சீவம் போறப்புல வஞ்சே கொண்ணிருப்பா.

"ஊட்ல ஆரு?"

"வா மூப்பாத்தி வா, நான்தேன் இருக்கேன் என்ன விசயம் சொல்லு?"

"ஒண்ணுமில்ல தண்ணி வெட . . . ."

"சரி ஒம்மவனுவ ஒன்ன எப்புடி நல்லா வைச்சிருக்கிறானுவளா?

"ம்...-அதயேன் கேக்குற பொஞ்சாதி பேச்சு கேட்டுகிட்டு பெரியவன்வெளிய போடின் னுட்டான், அந்த தட்டுவாணி செரிக்குக்கு இப்பத்தானே நல்லா இருக்கும். சின்னவன் ஊட்லதான் கெடக்குறேன். ஏதோ வய்யாம கொள்ளாம வெச்சிருக்கான். ஊட்ல சும்மா கெடக்கப் புடிக்குல அதான் தரிசுக்காடு பக்கம் ஆட்ட ஓட்டிகிட்டு வருவோம்னு வந்துட்டேன்".

"இந்த மனுசன் காயலா விளுந்ததுல



படிப்பகம்

www.padippkam.com

திண்ணையில் புள்ளைகள் தூங்கிக் கொண்டிருந்தனர். ஊட்டில் எல்லோரும் அழுதார்கள். சமாதானப்படுத்தினான். "ஒங்களுக்கு ஒண்ணும் ஆவுலியே எஞ்சாமீ உசுரோட வந்துட்டீங்களே அதுபோதும் அதுபோதும்", கட்டிக் கொண்டு கதறினாள். புள்ளைவோள பாக்கணுமென்றான். நடு ஊட்டுக்கு தூக்கிக் கொண்டு வந்து காட்டினாள். பெரியவனுக்கும் அடுத்தவனுக்கும்தான் அப்ப விவரம் தெரியும்.

மூணாவது பயலுக்கு அப்ப ஒரு வயசு. நாலாவது வவுத்துல. எல்லோருக்கும் முத்தம் கொடுத்தான். பெரியவனும் சின்னவனும் அழுதார்கள். மூப்பாத்தியும் அழுதாள். அவனும் அழுதான். வெளியே வந்தான் 'புள்ளவோ பத்ரம் மூப்பாத்தி", பேச முடியவில்ல தொண்ட அடச்சது.

"சாமீ செத்தாலும் ஒண்ணாவே சாவோம் போவாதிங்க...'

"எனக்கு ஒண்ணும் ஆவாது மூப்பாத்தி". வழிஞ்ச கண்ணுத் தண்ணிய தொடச்சி விட்டான். அவன் வவுத்தை தடவி முத்தம் கொடுத்தான். கோத்துப் பிடிச்சிருந்த அவன் விரல்களை பிரித்து விட்டான். உடம்பு சிலிர்த்தது. அவளின் கடேசி விரல் நழுவி பிரியும் போது கௌம்பினான்.

வந்தவழியே கொல்லக்காட்ட கடந்து நடந்தான். அமாவாச இருட்டு கம்மலா பாத தெரிஞ்சது. கால இடறிவிட்டு ஓடியது பாம்பு. சுத்தமாய் பயம் ஓடிப்போய் இறுகிக் கெடந்தது மனசு. காலுல முள்ளு தக்கிறத கூட உணர முடியுல. நட வேகமானது. ஊரே அமளியாயிகிட்டு இருந்தது. கருக்கிருட்டு முன்னக்கி இப்ப வேகமா கலஞ்சி கிட்டு இருக்கிறாப் போல தோணிச்சி. எங்கோ ஒரு வூட்டுலேர்ந்து மூணாங்கோழி ராகத்தோட கூவியது. கெழக்கே வெனுக் வெனுக்க பலபலன்னு பொழுது பூக்க தொவங்கியது. இனியும் இருக்க முடியாது எப்படியும் உசுரோட கொளுத்தாம உட மாட்டானுவ தீர்க்கமா ஒரு முடிவுக்கு வந்தான்.

நல்லா விடிஞ்சிருந்தது. மொதல்ல பாத்தது வள்ளியம்மாதான். "அய்யய்யோ எஞ்சிமாம் பொயிட்டாரே, அண்ணே ... எப்புடிண்ணே ஒனக்கு மனசு வந்தது, ஊரு சனம் சாவக்கூடாதுண்ணு ஒவ்உசுர மடிச்சிகிட்டியா ராசா, அவனுவ கையில மாட்டக்கூடாதுண்ணா ... அய்யோ அய்யோ கடவுளே..."

மூத்திரமும் வெளிக்கியும் சடசடண்ணு மரத்த சுத்தி தெறிக்கெடக்க இடயில சுரியோடு வேம்புல தொங்கிக் கொண்டிருந்தான் சாமிநாதன்.

சரஞ்சரமாய் கண்ணுத் தண்ணி வழிஞ்சிக் கொண்டே இருந்தது. "அப்பாயி ... அப்பாயீ பொழுது சாஞ்சிருச்சி ஆடெல்லாம் வளச்சிக்கிட்டு வந்துட்டோம் வா ஊட்டுக்குப் போவோம்". புள்ளவோகளின் சத்தத்தில் கண்ணுத் தண்ணியோடு நினைப்பையும் துடச்சி விட்டு எழுந்தா மூப்பா. வளைஞ்சி வளைஞ்சி நீண்டு கொண்டே இருந்தது கொடிபாத. கெழ ஆடு நடக்க முடியாம கெந்தி கெந்தி போய்க் கொண்டிருந்தது.

"அய்யோ மூப்பா ஓம்பேரன் என்ன காரியம் பண்ணிட்டாண்டீ கோஞ்சாமி பேத்திய இழுத்துகிட்டு ஓடிட்டாண்டி, ஊரு பஞ்சாயத்துக்கு ஓம்மவன வேர அடிச்சி இழுத்துட்டுப் போறானுவடீ."

வள்ளியம்ம சொல்லச் சொல்ல இடி எறங்கினாப்புல ஆடிப்பொயிட்டா. மயக்கம் வரும்போல இருந்தது. வாயிலும் வயித்திலும் அடிச்சிக் கொண்டே வள்ளியம்மோட வெரசா நடக்கலானா மூச்சு வாங்க.

இருள வீட்டின் எதிரே, காத்தோடு ஏதோ ரகசியம் பேசிக் கொண்டிருந்தது வேம்பு. ●



படிப்பகம்

www.padippkam.com

# படைப்பிற்கும், கலைஞனுக்கும் இடைப்படுதல் பற்றி?

சந்ரு

"நீ 'அஜக்'ன்னா மேல, 'பஜக்'ன்னா கீழத்தானே? அப்புறம் நீ தப்பா சொல்லிட்டு, என்னை அடிக்கக்கூடாது".

"சரி . . . . . . டா . . . . . . மாப்பிள்ளை"

ஈர்க்குச்சிக் கத்திகள் கனல் பறக்க மோதின.

. . . . . . . . . . . . . . . . . . பளார். . . . . . . . . . . . .

"நீ 'அஜக்' சொல்லிவிட்டு என் மேல் அடிக்கிறியே. போ, மாமா இனிமே நாந்தான் வில்லன்; 'அஜக்' 'பஜக்' நாந்தான் சொல்லுவே; நீதா இப்ப மேலக்குதிக்கணும், கீழ உக்காரணும்.

"சரி . . . . . . . . . சரி . . . . ."

மற்றவர்களிடம் மாமா சொல்லுவார், "இவனோட நோட்டுப் புத்தகத்துல, அவுங்க டீச்சர் போடும் 'ரைட்' பறவையாகும்; கையில் எடுத்த அப்பளம் விஸ்வரூபமே எடுக்கும்; இவனப்பத்தி சாதாரணமா நெனச்சிடாதீங்க" என்று.

இந்தப் பீற்றல் வார்த்தைகளெல்லாம் சும்மாதான் என்று நமக்குப் புரிந்து போனது,

இப்போது,

". . . . . . . . . . . . . மாமோய் . . . . . . . . . . . . . !"

புற்றீசலாய் ஓடி வருகிறார்கள். வருகின்ற ஒருத்தரைக்கூட விடாமல், தலையைப் பிடித்துப் பிடுங்கிப் பிடுங்கி, 'நர நர'வென்று அதட்டலும், மிரட்டலுமாக மென்று விழுங்கிக் கொண்டிருக்கிறாள் எசக்கியம்மா.

போதாத குறைக்கு,

வேல்கத்தி, அரிவாளோடு குதித்துக் கொண்டு ஓடி வருகிறான் கருப்பசாமி. கைகோர்த்து வருகிறார்கள் சோலையப்பனும், சுடலைமாடனும்.

நாலுகால் பாச்சல்ல வாரான் மொட்டக் கோபுர நொண்டி முனி.

நம்ம நின்ன இடத்துலருந்து, முன்னும் பின்னுமா ஒரு அடி எடுத்து வைக்க முடியல; சும்மா 'சல் . . . சல் . . . சல்லுன்ன கால் சலங்கை, கண்ட மணி ஓசை, சர் . . . . . விர் . . . ன்னு சூறாவளிக் காத்தா வாராங்க.

குனிந்து பார்க்காமல், கால் கட்டை விரலால் தம்மைச்சுற்றி ஏழு வட்டம் போட்டு, அது மையத்துல நின்னுட்டேன்.

விவரம் தெரிஞ்ச நமக்கே இந்தக் கதின்னா, விவரந்தெரியாத, அறியாப்புள்ளங்க கதி . . . . . . . என்னாகும் . . . . மாமா?!"

அட போடா , . . . வெவரங் கெட்டவனே, பேயின்னாலும் பூதமின்னாலும் பச்சப்புள்ளங்க மேல பாசங் காட்டுமடா . . . . . பாவி . . . ."

"அடப் போ; மாமா . . .!"

தாயின்னும் தெரியல, பேயின்னும் தெரியல . . . ."



படிப்பகம்

www.padippkam.com

# தமிழ் மண்ணில் தடம் பதித்த சாதி ஒழிப்புப் போராளி அய்யா இரட்டை மலை சீனிவாசன்

**1859.07.07** - தமிழக மண்ணில், சாதி ஒழிப்புப் போராட்டத்தை நடத்தி - வரலாறு படைத்த அய்யா இரட்டை மலை சீனிவாசன் அவர்கள் பிறந்த நாள்! ஒடுக்கப்பட்ட மக்கள் நினைவு கூற வேண்டிய நன்நாள்.

செங்கை மாவட்டம் மதுராந்தகத்திற்கு அருகில் உள்ள கோழியாளம் எனும் கிராமத்தில் சீனிவாசன் பிறந்தார். அவரது தந்தை பெயர் இரட்டைமலை. எனவே அவர் இரட்டைமலை சீனிவாசன் என அழைக்கப்பட்டார்.

பள்ளிப்பருவத்திலேயே சாதிக் கொடுமைகளை எதிர் கொண்டார். தனது விடா முயற்சியால் பட்டப்படிப்பை முடித்தார். தாழ்த்தப்பட்ட வகுப்பில் முதன் முதலாக பட்டப்படிப்பை முடித்தவர் இவரே. படிப்புக்குப் பின் நீலகிரியில் பத்தாண்டுகள் கணக்கராகப் பணிபுரிந்தார். 1890-ல் சென்னை வந்தார். அங்கிருந்து தமது சமூகப் பணிகளைத் துவக்கினார்.

சாதிக் கொடுமைகள் உச்சத்தில் இருந்த காலகட்டத்தில் இவரது பணிகள் துவங்கின. 1891-ல் ஒடுக்கப்பட்டோரின் உரிமைப் பிரகடனமாய் 'பறையர் மகாசன சபையை' நிறுவினார். ஊமைகளின் குரலாகவும், பாதுகாவலனாகவும் அவ்வியக்கம் விளங்கியது. ஆங்கிலேயர்களின் காலத்தில் சாதிக்கு எதிராக தமிழகத்தில் - தாழ்த்தப்பட்டோர் துவக்கிய முதல் இயக்கமே அதுதான் என்று சொல்லலாம்.

1893-ல் 'பறையர் மகாசபை' சென்னையில் மாபெரும் மாநாடு நடத்தியது . தீண்டாமைக்கு எதிராகவும், நமது வாழ்வுரிமைக்காகவும் அம்மாநாட்டில் முழக்கமிடப்பட்டது.1894-95ல் மக்களைத் திரட்டி அய்யா இரட்டைமலை சீனிவாசன் போராடியதன் வாயிலாக தாழ்த்தப்பட்டோர் குடியிருக்க இலவச மனைப்பட்டாவும், விவசாயத்திற்கு தரிசு நிலத்தையும் தர ஆங்கிலேய அரசு முன் வந்தது.

**அய்.சி.எஸ். தேர்வுகளில் பார்ப்பனர் ஆதிக்கம்**

அரசின் நிர்வாகக் துறைக்கென ஆங்கிலேயர்களால் நடத்தப்பட்ட அய்சி.எஸ் தேர்வுகள் இந்தியாவிலேயே நடத்தப்பட வேண்டும் என காங்கிரஸ் கோரியது. இதை எதிர்த்து அய்சி.எஸ் தேர்வுகள் இந்தியாவில் நடந்தால் - பார்ப்பன உயர் சாதியினரே அதிகப்படியாக உயர் பதவிகளை ஆக்கிரமித்துக் கொள்வர் என்றும், இது தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான கொடுமையை அதிகரிக்கும் எனவும் இரட்டைமலை சீனிவாசன் முழங்கினார்.

இதற்கென சென்னை வெஸ்லியன்மிஷன் கல்லூரி மண்டபத்தில் மக்களைத் திரட்டி 3412 பேர் கையொப்பமிட்ட விண்ணப்பப் படிவத்தை நாடாளுமன்ற உறுப்பினரிடம் சமர்ப்பித்தார். அரசு இவரது கோரிக்கைக்குப் பணிந்தது.

**பத்திரிக்கைத் துறை**

எழுதப்படிக்கவே தடை செய்யப்பட்டிருந்த காலத்தில், தாழ்த்தப்பட்டோரின் விடுதலைக்காக 1893-ல் 'பறையன்' என்ற மாத இதழைத் தொடங்கினார். முதல் இதழ் 500 படிகள் விற்பனையானது.



படிப்பகம்

www.padippkam.com

மக்களாதரவு பெருகி இவ்விதழ் - வார இதழாக வெளிவந்தது. 1900 வரை தொடர்ந்து வெளி வந்த இவ்விதழ் தாழ்த்தப்பட்டோரின் கேடயமாகவும், போர்வாளாகவும் விளங்கியது.

### வட்ட மேசை மாநாடு

புரட்சியாளர் அம்பேத்கரின் உற்ற தளபதியாய், உறுதுணையாய் நின்றவர் இரட்டைமலை சீனிவாசன் அவர்கள். அம்பேத்கரைவிட வயதில் இவர் மூத்தவர். இரண்டு வட்ட மேசை மாநாட்டிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக இவரும் அம்பேத்கரும் ஒன்றிணைந்து வகுப்புரிமைக்காகக் குரல் கொடுத்தனர்.

1930 - முதல் வட்ட மேசை மாநாட்டில் அய்ந்தாம் ஜார்ஜ் மன்னர் வரவேற்று கை குலுக்க முன் வந்த போது, கைகளைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு 'நான் தீண்டத்தகாதவன்' என்றார். அதிர்ச்சிக்குரிய இச்செயல் அங்கு வந்திருந்த இந்திய மேல்சாதி பிரதிநிதிகளின் முகத்தில் கரியைப் பூசியது. ஆங்கிலேய பிரதிநிதிகள் இந்தியாவில் தீண்டப்படாத மக்களின் கொடிய இழிநிலையை உணர்ந்தனர். அந்த வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டபோது 'பறையன்' என அடையாள அட்டை அணிந்திருந்தார்.

பூனா ஒப்பந்தத்தின் போது தமிழகத்தில் தலைவர்களாக இருந்த எம்சிராஜா போன்றவர்கள் அம்பேத்கருடன் முரண்பட்டு இருந்தனர். ஆனால் இரட்டைமலை சீனிவாசனோ உறுதுணையாய் அம்பேத்கருடன் இணைந்து எதிரிகளுக்கு சவாலாக விளங்கினார்.

### சட்ட மன்றத்திலும் உரிமைக்காய்

1923 முதல் 1938 வரை சட்டமன்ற உறுப்பினராக இருந்து தலித் சமூக மக்களின் குரலை உலகறிய எடுத்துரைத்தார்.

சட்டமன்ற உறுப்பினரான மூன்றே மாதத்தில் பொது இடங்களில் தாழ்த்தப்பட்டோர் நுழைய தடை விதிக்கப்பட்டிருந்ததையும், இன்னபிற தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகவும், சாராய கடைகளை ஒழிக்கவும், நாட்டாண்மை, கணக்குப்பிள்ளை போன்ற பதவிகள் பரம்பரை அடிப்படையில் இருப்பதை எதிர்த்தும் தீர்மானம் கொண்டு வந்தார். பஞ்சமர்களின் கல்வி மேம்பாட்டுக்கென அரசுப் பள்ளிகளை திறக்க வேண்டுமெனவும், தீண்டாமையை கடைப்பிடிக்கும் தனியார் பள்ளிகளுக்கு அரசு மானியம் தருவதை நிறுத்த வேண்டும் எனவும் போராடினார்.

### தென்னாப்பிரிக்காவில்

1900 முதல் 1921 வரை இங்கிலாந்திலும், தென்னாப்பிரிக்காவிலும் இருந்தார். தென்னாப்பிரிக்காவில் காந்தியின் மொழிபெயர்ப்பாளராக இருந்த அய்யா, அங்கு வெளி வந்து கொண்டிருந்த 'இந்தியன் ஒப்பினியன்' என்னும் இதழை தமிழில் கொண்டு வந்தார்.

இவர் இல்லாததால் 'பறையர் மகாசன சபையின்' செயல்பாடுகள் தேங்கியிருந்தன. தென்னாப்பிரிக்காவிலிருந்து தமிழகம் திரும்பிய பிறகு 1928-ல் 'சென்னை மண்டல ஒடுக்கப்பட்ட வகுப்பார் இனம்' (Madras Presidency Depressed Classes Federation) என்னும் மக்களமைப்பை நிறுவி மீண்டும் தனது பணிகளைத் தொடர்ந்தார்.



படிப்பகம்

www.padippkam.com

## தொழிலாளர் நல ஆணையம்

அய்யா இரட்டைமலை சீனிவாசனின் தொடர் போராட்டங்களால் ஆங்கிலேய அரசு சென்னை மாகாணத்தில் தொழிலாளர் நல ஆணையர் ஒருவரை நியமித்து, பஞ்சமர்களின் கல்வி மேம்பாட்டில் அக்கறை செலுத்துவதும், குடியிருந்த இலவச மனைப் பட்டா வழங்குதலும், விவசாயத்திற்கு தரிசு நிலத்தை ஒதுக்கி தருவதுமே தொழிலாளர் நல ஆணையத்தின் பணியாக இருந்தது.

தாழ்த்தப்பட்டோரின் நலன் காக்கவே இத்துறை அக்காலத்தில் அரசால் நிறுவப்பட்டது. பின்னரே தாழ்த்தப்பட்டோருக்கு தனித் துறைகள் உருவாக்கப்பட்டு, இத்துறை அனைத்துத் தொழிலாளர்களான பணிகளை மேற்கொண்டது.

## மதமாற்றம் எதிர்ப்பு

புரட்சியாளர் அம்பேத்கரோடு நெருங்கிய தோழமையிருந்த போதிலும் தனது கருத்து வேறுபாடுகளை வெளிப்படையாக முழங்கினார் இரட்டைமலை சீனிவாசனார். தலித் மக்களுக்கு எதிராக பூனா ஒப்பந்தத்திற்குப் பிறகு அம்பேத்கர் 'தாழ்த்தப்பட்டோர் பவுத்தத்தைத் தழுவ வேண்டும்' என சொன்னபோது மதமாற்றம் தீர்வாகாது என எதிர்த்துக் குரலெழுப்பினார்.

தனது மக்களுக்காக வாழ்நாள் முழுக்கப் போராடி 1945 செப்டம்பர் 18-ஆம் நாள் காலமானார். தாழ்த்தப்பட்டவர்கள் மிக மிக மோசமாக விலங்குகளைப் போல நடத்தப்பட்ட காலத்தில் விடுதலை பாதையில் வீறுகொண்டு நிமிர்ந்து நடந்தவர். ஆங்கிலேய அரசு இவரது மக்கள் பணிகளை பாராட்டி 'ராவ்பகதூர்', 'திவான் பகதூர்' என பட்டங்கள் வழங்கி கவுரவித்தது. இன்று நாம் பெற்றுள்ள உரிமைகள் இத்தகைய போராளிகளின் உழைப்பால் பெறப்பட்டதுதான்.

## தமிழக அரசின் கவனத்திற்கு . . .

- ஒடுக்கப்பட்டோரின் உரிமைப் போராளி அய்யா இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு சென்னையில் சிலை நிறுவ வேண்டும்.
- பள்ளி பாடத்திட்டங்களில் அவர்களது கொள்கைப் போராட்ட வரலாற்றை பாடமாக வைக்க வேண்டும்.
- சென்னையில் அய்யா இரட்டைமலை சீனிவாசனாருக்கு நினைவிடம் எழுப்ப வேண்டும்.
- அவர் தொடங்கிய 'தாழ்த்தப்பட்டோர் கல்விக் கழகத்தை' மீண்டும் நிறுவ வேண்டும்.
- அவரது சிந்தனைகளைத் தொகுத்து நூல் வெளியிட வேண்டும்.

## ஒடுக்கப்பட்ட மக்களே

தமிழக மண்ணில் தடம் பதித்த சாதி ஒழிப்புப் போராளி இரட்டைமலை சீனிவாசன் இப்போது நம்மிடையே இல்லை. ஆனால் அவர் நடத்திய சாதி ஒழிப்புப் போர் - தொடர்கின்றது. நெஞ்சில் நெருப்பெடுத்து வன்முறைக்கு எதிராய் புறப்படுவோம். சேரிகள் இன்னும் எரிந்து கொண்டிருக்கின்றன.

**- விடுதலைச் சிறுத்தைகள்**



படிப்பகம்

www.padippkam.com



கவிதை

# கருத்தம்மா

சாதி வேரறுக்காது
சமத்துவம் கூடுமென்ற
காந்தி – மகாத்மா

சாதியா வருணமா
'ஹரிஜனில்' குழப்பி
பிடித்த மீன் சாதி
அண்ணல் அம்பேத்கர்
அதையறுத்துக் கூறிட

சாதி விட்டு
வருணம் தொங்கி
சாதி இந்துவாய்
ஒரு மகாத்மா.
சாதி வருணம் இந்து
நேரத்துக்கொன்று பேசி
அரசியலே தெளிந்த
தேசப் பிதா காந்தி

எனில்
புரிதல்–புரியாமை அரசியல்
எனத் தெளிவோம்
புதையுண்டவர்களைத்
தோண்டியெடுப்போம்
அண்ணலுக்குப் பதிலளிக்க
கூண்டில் ஏற்றுவோம்.

பதிலேதுமில்லையெனில்
யாருமிங்கே
தேசப்பிதாயில்லை
எதுவுமிங்கே
புரட்சியில்லையென
செவிட்டில் அறைவோம்.

அப்போது,
அண்ணலை
ரெட்டமலையை
சிவராஜை – இன்னும்
விலாச மற்றுப்போன
வீரர்களை
வீதிக்கு வீதி நிறுத்தி
வேரறுத்து சாதி வீழும்
விந்தைக்கு வித்திடுவோம்.



படிப்பகம்

www.padippkam.com



படிப்பகம்

www.padippkam.com

www.padippkam.com



படிப்பகம்